## சட்டப்பேரவையில்

# சைதை துரைசாமி

**3**

தொகுப்பு

**கே. ஜீவபாரதி**

**வைரம் வெளியீடு**

**புத்தக வெளியீட்டாளர் & விற்பனையாளர்**

1, கிழக்கு சர்க்குலர் சாலை, சாந்தோம்,
சென்னை - 600 028.

★ சட்டப்பேரவையில் சைதை துரைசாமி (மூன்றாம் தொகுதி)
★ தொகுப்பாசிரியர் : கே. ஜீவபாரதி
★ முதல் பதிப்பு : ஜூன் 2008

**விலை : ரூ. 75.00**

**திரு. சைதை சா. துரைசாமி** அவர்கள்
நிறுவனர், மனித நேய அறக்கட்டளை
28, முதல் பிரதான சாலை,
சி.ஐ.டி. நகர், சைதாப்பேட்டை,
சென்னை - 600 035.
தொலைபேசி : 24330952, 24330095

★ ஒளி அச்சு : விக்னேஷ்வர் கிராபிக்ஸ், சென்னை - 600 005.
செல் : 9940214836

# அணிந்துரை

**ச**ட்டப்பேரவை என்பதே நாகரீக வளர்ச்சியின் ஒரு முதிர்ந்த நிலையைக் காட்டும் அமைப்பு. மன்னர் ஆட்சி ஆயினும், மக்களாட்சி ஆயினும், பேரவை என்ற ஒரு நிறுவனமும் அதில் பங்கு பெறுவதற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் - அல்லது நியமிக்கப்படுவது என்றால்கூட அப்படி ஒரு ஏற்பாடும் - அவர்கள் தாங்கள் வாழும் சமுதாய நலன் கருதி அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப, தங்கள் கருத்தைக் கூறுகின்ற வாய்ப்பும், மக்கள் நலனை மனத்தில் கொண்டுள்ள ஓர் ஆட்சி அமைப்பின் சின்னமேயாகும்.

சட்டமன்றத்தில் செயல்படும் ஒரு உறுப்பினருடைய பங்களிப்பு இரண்டு வகையில், தனி நபர்கட்கோ அல்லது சமுதாயம் முழுமைக் குமோ உதவுவதாக அமையக்கூடும்.

1. முக்கியமான கொள்கைகள் பற்றி, கொள்கையின் அடிப் படையில் அமைந்த திட்டங்கள் பற்றி, அவற்றின் செயல்பாடுகள் பற்றி எழுப்பப்படும் கேள்விகள், அதற்குப் பெறும் பதில்கள்.
2. இரண்டாவதாக முக்கியமான சில தலைப்புகள் பற்றி உறுப்பினர் ஆற்றும் சொற்பொழிவுகள்.

நம் கையில் இருக்கும் இந்தத் தொகுப்பில் மேலே கூறப்பட்டுள்ள இரண்டு கூறுபாடுகளும் இடம் பெற்றுள்ளன. இத்தொகுப்பு சைதை



துரைசாமி அவர்கள் தமது மூன்றாண்டுகால உறுப்பினர் பதவிக் காலத்தில், தாம் தம் தொகுதி மக்கட்கும், தமது மாநிலத்திற்கும் செய்ய வேண்டிய பணிகளை ஆழ்ந்த ஈடுபாட்டோடும் அக்கறையோடும் செய்திருக்கிறார் என்பதற்கான சான்றாகும்.

இந்தச் சட்டப்பேரவைத் தொகுப்பிலிருந்து சில சான்றுகள் கூறுவது அவர் பங்களிப்பின் தரத்தையும், தகுதியையும் விளக்க உதவும். இந்தியா, அடிப்படையில் கிராமங்களின் தொகுப்பு. கிராம மக்களின் நலன் கருதி அரசு செயல்பட்டு வருகிறது என்பதைக் கீழ்க்கண்டவாறு அவர் எடுத்துக் காட்டுகிறார்.

> ***''கிராமங்கள் தோறும், பேருந்துகள் செல்லாத இடங்களுக்கெல்லாம் பேருந்துகள், சாலைவசதி இல்லாத இடங்களுக்கெல்லாம் சாலைப் பணிகள், குடிநீர் வசதி இல்லாத ஊர்களுக்கெல்லாம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்று சொல்லித் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பணிகளை ஆற்றி, அந்தத் திட்டத்தின் பலன் மக்களுக்குச் சென்று சேர்கின்ற நிலையினை ஏற்படுத்தி, இப்படி அத்தனை திட்டங்களையும் இந்திய துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஒரு முன்மாதிரியாக நடைமுறைப்படுத்தினார்கள்''***
>
> *(1985, மார்ச் 13)*

இந்தியா போன்று பொருளாதார முன்னேற்றத்தை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கும் நாடு, அறிவியல் தொழில் நுட்பத்தைப் பெரிய அளவிலே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் பின்னணியை முன் வைத்துக் கேட்கப்பட்ட கேள்வி பின்வருமாறு.

**அ) சைதை 146-வது வட்டம் கொத்தவால்சாவடி தெருவில் மாநகராட்சி மூலம் குப்பைகளிலிருந்து உரம் தயாரிப் பதற்கான தொழிற்சாலை துவக்கத் திட்டமுள்ளதா?**

**ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவங்கப்படும்?**

*(1985, மார்ச் 28)*

தகவல் தொடர்பு, உலக மக்களுக்கு அறிவியலும், தொழில் நுட்பமும் தந்த வரம். அந்த ஊடகத்தின் மிகவும் முக்கியமான பங்களிப்புத் தொலைக்காட்சி. அடிப்படையில் ஒரு சக்தி வாய்ந்த கருவி. அதைப் பயன்படுத்துவதைப் பொருத்தே, அதன் நன்மை தீமைகள் அமைகின்றன. தொலைக்காட்சி நமக்கு வேண்டிய செய்திகள் அறிவுத் தொகுப்புகள் அனைத்தையும் நாம் வாழும் இடத்திற்கே கொண்டுவரத் தக்கது. அந்தப் பயன்பாடு விரும்பத்தகாத பயன்களையும் விவரிக்கிறது என்பதைச் சட்டமன்றத்தில் கீழ்க் கண்டவாறு விளக்கியிருக்கிறார்.

**''தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்புகிற நிகழ்ச்சி களைக் குடும்பத்தோடு அமர்ந்து பார்க்கிறபோது சில சங்கடங்களும், இடையூறுகளும் இருந்து வருகின்றன. அந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது திரைப்படத்தைப் பார்த்தாலும் செக்ஸ் மற்ற எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் செக்ஸ் என்ற அளவில் இருந்து வருகிறது...**

**ஆகவே, மாநில அரசு மத்திய அரசிற்கு இது குறித்து வலியுறுத்தி, குடும்பத்தோடு மக்கள் அமர்ந்து பார்க்கிற வகையில், அதில் இருக்கிற சிரமத்தைத் தவிர்க்க அல்லது வேறு வகையில் விளம்பரத்தை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்லிய சங்கடம் எல்லாக் குடும்பங் களிலும் இருக்கிறது. நான்கைந்து தங்கைகளோடு ஒரு குடும்பத்தில் உள்ள அண்ணன்கள் தொலைக்காட்சியைப் பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது''**

*(1985, ஏப்ரல் 2)*

திரு. சைதை துரைசாமி அவர்கள் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் மக்களுடைய குறைகளையும், அரசு செய்யத் தவறியன வற்றையும் எடுத்துக்காட்டத் தயங்கியதில்லை, தவறியதில்லை என்பதையும் அவருடைய கீழ்க்காணும் அறிவிப்பு உள்ளது.

***''இப்படிப்பட்ட பணிகள் நடைபெறும்போது இந்த மானியக் கோரிக்கையிலே சுட்டிக் காட்டியிருப்பதைப்***



***போலச் சென்னை மாநகரத்தில் பல்வேறு இடங்களில் தனியார் தெருக்களில் இன்னும் அடிப்படை வசதிகள்கூடச் செய்யப்படவில்லை. சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, மின்சார வசதி, தெருவிளக்கு வசதி போன்ற வசதிகள் செய்யப்படவில்லை''***

*(1985, ஜூன் 12)*

இந்தியா போன்ற நாடுகளில் பொருளாதாரம், வாழ்க்கை வசதி போன்றவை எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது சமுதாயப் பிரச்சனை. அதில் சீரான இல்லற வாழ்க்கை திருமணம் பற்றிய அவருடைய கருத்து ஒன்று பின்வருமாறு :

*''இன்றைக்குத் திருமணங்கள் எல்லாம் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற முறையைக் கொண்டு வர வேண்டும். இல்லை என்றால் ஒரே ஆள் 4 திருமணம், 7 திருமணம், 20 திருமணம் என்று செய்து கொண்டிருப்பார். அதை மாற்ற, எல்லாத் திருமணங்களும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற முறையை நடைமுறைப் படுத்த வேண்டும்''*

*''அதைப் போன்று விதவைகள் எல்லாம் அவர் களுடைய கணவன் இறந்த பின்னால், அவர்களுடைய பிள்ளைகள் சிறுவர்களாக இருந்தால், அவர்களால் நிலத்திலே பயிர் செய்ய முடியாத சூழ்நிலையில் தங்கள் நிலத்தைக் குத்தகைக்கு விடுகிறார்கள். பின்னால் அந்தக் குழந்தை மேஜரான பிறகு அந்தக் குத்தகை நிலத்தைத் திரும்பக் கேட்கும்போது குத்தகைதாரர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே, விதவைகளுடைய குத்தகை நிலத்தைத் தாராளமாகத் திரும்பப் பெறுகின்ற அளவுக்கு விதிவிலக்கு அளிக்கச் சட்டமாற்றம் செய்ய வேண்டு மென்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்''*

*(1985, ஜூலை 8)*

இன்றைய திரைப்படங்களும், தொலைக்காட்சியில் வரும் கதைத் தொடர்களும், சமுதாயத்தின் சில அம்சங்களைத் தவறான முறையில் மக்களுக்குக் காட்சிப்படுத்துவதாகவும் அதுவும் குறிப்பாகச் சில புனிதமான பணிகளைக் களங்கப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன. பின்வரும் கருத்து அவர் மனத்தில் உள்ள ஆதங்கத்தை வெளிப் படுத்தும்.

*''ஆனால், இன்றைக்குத் திரைப்படங்கள் எல்லாம் காவல் துறையினுடைய கண்ணியத்தைக் குறைப்பதற் காகவும் காவல் துறைக்குக் கொடுக்கின்ற மரியாதையைக் குறைக்கின்ற வகையில், சிதைக்கிற வகையிலும் வந்து கொண்டிருக்கின்றன. அம்மாதிரி திரைப்படங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

*உன் கண்ணில் நீர் வழிந்தால் என்ற திரைப்படத்தில் ஒரு காவல் துறை அதிகாரி கொள்ளைக்காரராக இருப்பது போல் சித்தரிக்கிறார்கள். 'மங்கை தீட்டானால் கங்கையில் குளிப்பாட்டலாம்; கங்கையே தீட்டானால் எங்கே சென்று குளிப்பாட்டுவது' என்பது போல் காவல் துறையினரையே கொள்ளைக்காரர்களாகச் சித்தரித்துக் காட்டினால் என்ன ஆகும்''*

*(1985, ஜூலை 8)*

ஒரு குடியாட்சியில் அரசு செய்யும் நல்ல காரியங்களைப் பாராட்ட வேண்டும், தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும். எதிர்க்கட்சிகள் தவறுகளைச் சுட்டிகாட்டுவதை வரவேற்பது ஆரோக்கியமான, இன்னும் சொல்லப்போனால் நாகரீகமான அரசியலாகும். திரு. சைதை துரைசாமி அவர்கள் எதிர்கட்சியினரை நோக்கிக் கூறப்பட்ட பின்வரும் கருத்து. அவர் இளைஞராயினும் முதிர்ந்த அரசியல்வாதி என்பதை உறதி செய்யும்.

*''எனவே, கொள்கைகளைப் பற்றி மற்ற குறை பாடுகளைப் பற்றி எதிர்க்கட்சியினர் பேசுங்கள். ஏன் என்றால் குறைபாடே இல்லாமல் அரசு செயல்பட முடியாது. ஆங்காங்கு ஏதேனும் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், பல்வேறு நல்ல நிலைமைகளை எல்லாம் மறைத்துவிட்டு, சிறிய குறைபாடுகளை மட்டும் பெரிது படுத்திச் சொல்லி ஊனப்படுத்துவது என்பது நாகரீகமான அரசியலுக்கு ஒத்துவராது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்''*



*(1986, ஜனவரி 22)*

இன்றைய பொருளாதாரத்தில் ஒரு நாட்டிற்குச் சுற்றலா மூலம் வருகின்ற வரவு நாளுக்கு நாள் முக்கியமான இடத்தைப் பெற்று வருகிறது. நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற மாபெரும் சொத்து நமது கோயில்கள்; கலைத் திறன் மிக்க கட்டடங்கள், பயணிகள் பார்த்துப் பிரமிக்கத் தக்க பரிமாணங்கள் கொண்டவை. ஆனால் அவை மைய அரசின் சுற்றுலாத் துறை சார்ந்த அமைச்சகத்தால் உரிய அளவிற்கு விளம்பரம் செய்யப்படவில்லை. தமிழ் நாட்டைப் பொருத்தவரை, இதைத் தமிழக அரசு செய்ய வேண்டும் என்று திரு. சைதை துரைசாமி வலியுறுத்துகிறார்.

*''தமிழகத்தினுடைய சுற்றுலாத் தலங்களைத் திரைப்படமாகத் தயாரித்து வெளிநாடுகளிலிருந்து வருகின்ற வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்குக் காட்டினால் நம்முடைய பெருமைகளையும், தமிழகத்தில் நாம் பெற்றிருக்கின்ற சுற்றுலாத் தலங்களைப் பற்றிய சிறப்புகளையும் அவர்களுக்குக் காட்ட முடியும். அதற்கு வழிவகை செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்''*

*(1986, மார்ச் 24)*

சாதி ஒழிப்பின் ஒரு அங்கமாகத் தலைவர்களின் நினைவாகப் பெயரிடப்பட்டிருக்கும் சாலைகள், தெருக்கள், நகர்ப் பகுதிகள் போன்றவற்றில் பெயரில் இருக்கும், சாதிப் பகுதியை நீக்கிவிட வேண்டும் என்ற ஒரு நல்ல முடிவை அரசு எடுத்தது. ஆனால் அதைச் செயல்படுத்துவதில் சற்றுப் பொது அறிவில்லாத நடைமுறை இடம் பெற்று வந்தது. டாக்டர் ரங்காச்சாரி ஒரு புகழ்பெற்ற மருத்துவர்; அவர் பெயரில் இருக்கும் டாக்டர் ரங்காச்சாரி சாலையை டாக்டர் ரங்கா சாலை என்றால் யாருக்கும் புரியாது. ஒரு நல்ல செயலைச்

செய்வதிலும் புத்திக் கூர்மை வேண்டும். இந்த உண்மையை திரு. சைதை துரைசாமி நாகரீகமாக எடுத்துக் காட்டுகிறார்.

*''உதாரணமாக இலட்சுமணசாமி முதலியார் என்று சொன்னால்தான் அவரை நாட்டிற்குத் தெரியும். ஆகவே, நாம் ஜாதிப் பெயரை நீக்க வேண்டும் என்று சொல்லி, முதலியார் என்று நீக்கிவிட்டு, வெறும் லட்சுமணன் என்று போடும் போது யார் லட்சுமணன் என்று தெரியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.*

*புகழ் பெற்றவர்களுக்கு மாத்திரம் விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்''*

*(1986, மார்ச் 26)*

மக்களாட்சி வெற்றி பெற வேண்டுமானால் எல்லா மட்டத்திலும் தேர்தல் நல்ல முறையில் நடைபெற வேண்டும். இந்த அம்சத்தில் திரு. சைதை துரைசாமி அவர்களின் கவலையை அவருடைய கீழ்க்கண்ட கருத்து உறுதி செய்யும்.

*''அடுத்து, சென்னை மாநகராட்சியின் தேர்தலைப் பற்றிச் சொன்னார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்வது, தேர்தலை நடத்துங்கள். ஆனால், ஒரே ஒரு விண்ணப்பம். வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படாமல் தேர்தலை நடத்தாதீர்கள். வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கவில்லையென்றால் கள்ள ஓட்டின் வாயிலாக எல்லோரையும் தோற்கடித்து விடுவார்கள்''*

*(1986, ஏப்ரல் 16)*

தேர்தல் நேர்மையாக நடக்க வேண்டும் என்பதில் அவருக் கிருக்கும் ஆழ்ந்த அக்கறையை அவர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே விடுக்கும் கீழ்க்கண்ட வேண்டுகோள் உறுதிப்படுத்தும்.

*''சட்டமன்றத் தொகுதித் தேர்தலுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றும், நாடாளுமன்றத் தேர்தலுக்கு $1^1/_2$ இலட்சம் ரூபாய் என்றும் செலவில் வரம்பு வைத்திருக்கிறார்கள். இங்கே*



*வந்திருக்கிற அத்தனை பேர்களும் நெஞ்சில் கையை வைத்துச் சொல்லுங்கள். 50 ஆயிரம் ரூபாய்தான் செலவு செய்தோமா? என்ன முறை? ஆகவே அந்த முறையை மாற்ற வேண்டும்''*

*(1986, மே 8)*

முன்னேறும் நாடுகளில் புதிய தொழில் நுட்பங்களைப் பயன் படுத்துவதில் அவருக்கிருக்கும் ஆழ்ந்த அக்கறை பற்றி முன்பே குறிப்பிட்டோம். அதற்குக் கீழ்க்காணும் அவருடைய கருத்து விளக்கமாக அமையும்.

*''இதுபோன்ற வறட்சி ஏற்படுகின்ற நேரங்களில் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்கவும், விவசாயத்தைப் பாதுகாக்கவும் ஏற்கெனவே செயற்கை மழையை உருவாக்க, விமானம் மூலம் அயோடைட் தெளித்து, செயற்கை மழையை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டோம்.*

*எனவே இந்த நல்ல முயற்சி நலம் பயக்கும் என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்''*

*(1987, ஏப்ரல் 2)*

திரு. சைதை துரைசாமி அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றத்தை விரும்புபவர். சென்னை நகரத்தில் குப்பை அகற்றுவதில் கூடப் புதிய தொழில் நுட்பம் இடம் பெற வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். அவருடைய பரிந்துரை பின்வருமாறு :

*''அதேபோல் சென்னை மாநகரத்தில் குப்பைகளை அகற்றுவதற்கு மாட்டு வண்டிகளை உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம். இந்த மாட்டு வண்டிகளை எல்லாம், இந்த 300-வது ஆண்டு விழாவில், மாநக ராட்சியின் எல்லா வட்டத்திற்கும் வாங்கிய இந்த மாட்டு வண்டிகளை 300-வது ஆண்டு விழாவின் நினைவாக ஒழிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்''*

*(1987, ஏப்ரல் 28)*

ஒரு குடியாட்சி அரசமைப்பில் சட்டப் பேரவை முக்கியமானது. நாட்டின் கொள்கைகள் நிறைவேற்றப்படும் இடம் அதுதான். மக்களுடைய கருத்துகள் பதிவு செய்யப்படும் இடமும் அதுதான். சமுதாய வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களும் அங்குதான் அங்கீகாரம் பெறுகின்றன. எனவே குடியாட்சி நடைமுறையின் தரமும்,தகுதியும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எந்த அளவிற்குப் பொறுப்புணர்வுடனும், நாட்டு நலனில் அக்கறையோடும், பிரச்சினைகள் பற்றிய ஞானத்துடனும், தெளிவுடனும் செயல்படு கிறார்கள் என்பதைப் பொருத்தே அமைகின்றன.

நாம் சுருக்கமாகப் பார்த்த மேற்கூறிய சான்றுகள் திரு. சைதை துரைசாமி அவர்கள் ஒரு ஆக்கப்பூர்வமான அரசியல்வாதியாகப் பொறுப்புணர்வோடும், அரசியல் சமுதாய முன்னேற்றத்தில் அக்கறையோடும், உண்மையான நாணய உணர்வுடனும், அறிவியல் தொழில் நுட்ப உலகின் வளர்ச்சிகளை, ஒரு வளரும் சமுதாயம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பார்வையுடனும் செயல்பட்டிருக் கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளராக, அறிவியல், தொழில் நுட்பப் பயன்பாடு ஆதிக்கம் செலுத்தும் இக்கல்வி யுகத்தின் மொழியைப் புரிந்தவராக தத்துவங்கள், நம்பிக்கைகள் ஒரு புறமிருக்க, மக்களின் நடைமுறைத் தேவைகளைப் பற்றி எண்ணுபவராக திரு. சைதை துரைசாமி காட்சியளிக்கிறார்.

திரு. சைதை துரைசாமி அவர்களின் மூன்றாண்டு சட்டமன்றப் பணிகளை, திரு. ஜீவபாரதி அவர்கள் முறையாகத் தொகுத்து நமக்குத் தந்திருக்கிறார். அவர் நம் பாராட்டுக்குரியவர்.

26.02.2008 **– பேரா. வா.செ. குழந்தைசாமி**
சென்னை.

# சிறப்புரை

**பா**ராளுமன்றம் மற்றும் சட்டசபைகளில் இடம் பெறும், அங்கத்தினர்களில் பலருக்கு, அந்த சபைகளில் பேசுவதற்கு, குறிப்பிடத்தக்க அளவுக்கு வாய்ப்புகள், சுலபமாகக் கிடைத்து விடுவதில்லை. பல விஷயங்கள் பற்றியும் தகவல்களை திரட்டி, பெரும் முனைப்புடன் செயல்படுகிற சிலருக்கு வாய்ப்புகள் கிடைக்கிறபோது, அத்தகைய உறுப்பினர்கள் சோபிக்கிறார்கள். இந்த பின்னணியில், திரு. சைதை துரைசாமி அவர்களது சட்டசபைச் செயல்பாட்டை விளக்கும் இந்நூல், அவருடைய முனைப்பு குறித்த வியப்பைத் தோற்றுவிக்கிறது.

சட்டசபை அங்கத்தினராக ஒரே ஒருமுறை, அதுவும் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே பணியாற்றும் வாய்ப்பைப் பெற்ற அவர், கேள்விகள் மற்றும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வடிவத்திலும், விவாதங்கள் மூலமாகவும் ஏராளமான பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருப்பதோடு, அரசுக்கு நினைவூட்டும் விதமாக, அவ்வப்போது அதை இரண்டாம் முறையும் சுட்டிக் காட்டி, சில பிரச்னைகளுக்கு தீர்வும் கண்டிருப்பதை இந்த புத்தகத்திலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தபோதிலும், அரசின் முடிவுகளில் கண்ட குறைகளையும், அதனால் ஏற்படக்கூடிய பிரச்னைகளையும் இவர் தயங்காமல் சுட்டிக்காட்டியிருக்கிறார். உதாரணமாக, 'ஜாதி ஒழிப்பு' என்ற பெயரில், அர்த்தமற்ற வகையில், தெருக்களின் பெயர்களில் ஜாதியை நீக்க அரசு முடிவெடுத்து, 'டி.டி. கிருஷ்ணமாச்சாரி சாலை' என்பதை, 'கிருஷ்ணமா சாலை' என்றும்; 'லட்சுமணசாமி முதலியார் சாலை' என்பதை 'லட்சுமணசாமி சாலை' என்றும் மாற்றிய போது, இத்தகைய பெரிய மனிதர்களின் பெயரை சுருக்கக் கூடாது என்று வாதாடியிருக்கிறார்.

மாநகராட்சித் தேர்தலில் நடைபெறும் தில்லு முல்லுகளைத் தடுக்க புகைப்படத்துடன் வாக்காளர் அட்டை வழங்க வேண்டும் என்றும்; பல பெண்களை திருமணம் செய்து மோசடிகள் செய்வதைத் தடுக்க, அனைத்து திருமணங்களையும் பதிவு செய்வதை கட்டாயமாக்க வேண்டும் என்றும்; தூர்தர்ஷன் சேனல் மட்டுமே இருந்த அந்த காலத்தில் கூட, குடும்பத்தோடு உட்கார்ந்து பார்க்கும்படியாக படங்களும், விளம்பரங் களும் அமையவில்லை என்பதால், மத்திய அரசு மூலம் ஆபாசமான காட்சிகளும், விளம்பரங்களும் ஒலிபரப்பு ஆகாதவாறு கட்டுப்படுத்த வேண்டும் என்றும்; அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்களை இரவு 10.00 மணிக்கு மேல் நடத்த அனுமதிக்கக் கூடாது என்றும் - சமூகப் பொறுப்புணர்வுடன் பல பயனுள்ள கருத்துக்களை இவர் பேசியிருப்பது, பாராட்டுக்குரியது.

நாடாளுமன்றத் தேர்தலில் அதிகபட்சமாக (1984-ல்) ஒரு வேட்பாளர் ஒன்றரை லட்ச ரூபாயும், சட்டசபைக்குப் போட்டியிடும் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாயும் செலவழிக்கலாம் என்றும் விதிமுறை இருப்பதை சுட்டிக்காட்டி, சட்டசபையிலேயே சக அங்கத் தினர்களைப் பார்த்து, 'நெஞ்சில் கையைத் தொட்டு



சொல்லுங்கள்; நாம் 50 ஆயிரம்தான் தேர்தலில் செலவு செய்தோமா? என்ன முறை இது? இதை மாற்ற வேண்டும். இதற்குப் பதிலாக அரசாங்கத்திடம் பணத்தை கட்டி விடலாம். அரசே வேட்பாளர்களுக்குச் செலவு செய்யலாம்' - என்று இவர் பட்டவர்த்தனமாகப் பேசியிருப்பதும் ஆச்சரியத்தையே ஏற்படுத்துகிறது.

அடுக்குமாடி குடியிருப்புகள் பெருகி வருவதால் குடிநீர், கழிவு நீர் வடிகால் ஆகியவற்றுக்கு ஏற்படும் பிரச்னைகள், சுத்தமான காற்று கூட கிடைக்காது என்ற நிலை ஆகியவற்றை சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பே இவர் சட்டசபையில் சுட்டிக்காட்டி, நகருக்கு வெளியே புதிய குடியிருப்புகளை தோற்றுவிக்க வலியுறுத்தி யுள்ளார். அதேபோல, போக்குவரத்து நெரிசலை குறைக்க, கொல்கத்தா மாதிரி சென்னையிலும் பாதாள ரயில் விடவேண்டும் என்ற கருத்தையும் இவர் அப்போதே கூறியிருக்கிறார்.

இவை தவிர, அடித்தட்டு நிலையில் உள்ள சாதாரண மக்களுக்காக, முதியோர் பென்ஷன் பெறுவதில் உள்ள சிரமங்கள்; ஆதரவற்ற பெண்கள் ஏமாற்றப்படுவது; ஆற்றங்கரையோரம் வசிப்போர் படும் அவதி; பார்வையற்றோருக்கு வேலை கிடைப்பதில் உள்ள பிரச்னை - இவை பற்றி எல்லாம், வெவ்வேறு சந்தர்ப் பங்களில் திரும்பத் திரும்ப கேள்வி எழுப்பி, அவர் களுக்காக இவர் வாதாடியிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

பல பிரச்னைகளில், இவர் மூன்று (1985 - 87) ஆண்டுகளில் சட்டசபையில் கூறிய கருத்துக்கள், இன்று செயல் வடிவம் பெறுகின்றன என்பதை நாம் பார்க்கிறோம்; மற்றும் சில பிரச்னைகளில் இவர் அன்று கூறிய கருத்துக்கள், இன்று சிலரால் புதிய சிந்தனை போல் பேசப்படுவதையும் காண்கிறோம். மக்கள்

பிரச்னைகளில் உள்ள உண்மையான அக்கறையினால் தான், சைதை துரைசாமிக்கு இந்த தீர்க்க தரிசனம் வாய்த்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

சைதை துரைசாமி ஒரு சமூக சேவகர்; பல ஏழைகளுக்கு தாராளமாக விளம்பரம் இல்லாமல் உதவுகிறவர். தான் மட்டுமல்லாமல், அனைவருமே வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்; அந்த எண்ணத்தைச் செயல்படுத்துவதில் வியக்கத்தக்க முனைப்பைக் காட்டுபவர். பல வருடங்களாக அவரை நன்கு அறிந்தவர்களுள், நானும் ஒருவன். வாழ்க்கையில் முன்னேற்றம் காணக் காண, அவர் மனம் மேலும் மேலும் விசாலமடைகிறது என்பதை உணர்ந்தவன் நான்.

ஒரு சட்டசபை உறுப்பினர், 'மக்கள் பிரதிநிதி' என்று கூறப்படுகிறார். அந்த சொல்லுக்குரியவராகக் கருதப் படும் வகையில் திரு. சைதை துரைசாமி செயல் பட்டிருக்கிறார் என்பதற்கு இந்த நூல் ஒரு சாட்சி.

**– சோ**

# மதிப்புரை

**அ**ரசியல்வாதிகளுடனும், திரையுலகைச் சார்ந்த வர்களிடமும் நான் நெருங்கிப் பழகுவது இல்லை. விரோத உணர்வு அல்ல. இவர்களை விமரிசிக்க நேரும்போது நட்புணர்வு குறுக்கிடுமே, தயா தாட்சண்யமின்றி ஏதும் எழுத இயலாதே என்பதுதான் இதற்குக் காரணம்.

ஆனால், என்னையும் மீறி அரசியல் உலகில் நான் நெருக்கம் காண்பித்த நல்ல நண்பர் திரு. சைதை துரைசாமி.

காரணம், இவரிடம் நட்பும் பராமரிக்க முடியும்; இவரை மனம் திறந்து விமரிசிக்கவும் முடியும் என்று நான் நம்பியதுதான்.

சைதையார் சட்டமன்றத்தில், இவர் கேள்வி மன்னனாகத் தலையெடுக்க ஆரம்பித்த காலத்தில் - தவறாக எண்ணாதீர்கள் - இது ஒரு விளம்பர ஸ்டண்ட் என்றே ஆரம்பத்தில் எண்ணினேன்.

ஆனால், ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர்போல் முக்கியமான விஷயங்களில் குறைகூறாமல், கத்திமீது

நடப்பவர்போல் அவற்றைச் சுட்டிக்காட்டிய விதமும், அவற்றை ஆக்கபூர்வமாக அமைச்சர் களையே நோக்க வைத்த திறமும் பார்த்து, இது விளம்பர இரகமல்ல, உண்மையான சமூக அக்கறை என்பதை இனம்பிரித்து உணர ஆரம்பித்தேன்.

சட்டமன்றத்தின் ஓர் உயரப் பகுதியில் பார்வை யாளர் அரங்கு ஒன்று உண்டு. இங்கு சிறப்பு அனுமதி பெற்று அமருகிறவர்கள் வாயைத் திறக்கவே கூடாது. இதே செயலைச் சட்டமன்றத்தில் அமர்ந்தபடி செய்தவர்களும் உண்டு.

ஒரு சட்டமன்றக் கூட்டத் தொடரில் இருமுறை பேசினால் அதுவே அதிசயம். என்னவோ, யாருக்கோ, ஏதோ நடக்கிறது என்று பராக்குப் பார்த்துவிட்டு வந்த சட்டமன்ற உறுப்பினர்களை நான் அறிவேன்.

ஆனால், ஓர் ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு மூன்றாண்டுக் காலத்தில் இவர் உலுப்பிய உலுப்பல் இருக்கிறதே, அபாரம்!

பல கோப்புகள் இவரால் தூசி தட்டி எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதை இம்மூன்று தொகுதிகளும் அருமையாகப் பதிவு செய்திருக்கின்றன.

இத்தொகுதிகள் காலங்கடந்து வந்திருக்கின்றன என்று மனக்குறைப்பட்டுக் கொள்கிறவர்களுக்கு ஒன்று சொல்வேன். எத்துணைக் காலம் கடந்து வெளிவந்தாலும் சரித்திரம் சரித்திரம் தான். இதனை அருமையாகத் தொகுத்துப் பதிவு செய்திருக்கிற நண்பர் கே. ஜீவபாரதி நம் நன்றிக்குரியவர்.

மசாஜ் கிளப்புகள் கலாசாரச் சீரழிவை உண்டாக் குபவை என்று அன்றே சொன்ன சைதையார் எப்பேர்ப் பட்ட ஒரு தீர்க்கதரிசி என்பதை நாம் இன்று உணர்ந்து பார்க்கிறோம்.



அண்மையில் நம் தமிழக முதல்வர் அறிவித்த நீண்ட நெடும்பாலங்கள் என்பவை ஒரு புதிய யோசனையே அல்ல, என்றோ சைதையார் சொன்னவைதான் என்பதை இத்தொகுதிகள் ஆதாரம் காட்டிவிட்டனவே, அதற்கே நண்பர் திரு. ஜீவபாரதிக்கு நன்றி சொல்ல வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடு இன்றி இத் தொகுதிகளை வாங்கி வைத்துக் கொண்டு புரட்டிப் பார்த்தால் வாய்பேசா மௌனிகளுக்கே மெல்லுவதற்கு ஏராளமான அவல் கிடைக்கும்.

சைதையாரிடம் நான் பல சட்டமன்ற உறுப்பினர் களிடம் காண முடியாத ஒரு சிறப்பு அம்சத்தைக் காண்கிறேன்.

பெரும்பாலான உறுப்பினர்கள் தங்கள் தொகுதியின் மேம்பாட்டினைப் பற்றி மட்டுமே சட்டசபையில் பேசுகின்றனர். சமூக அக்கறையும் பரந்துபட்ட பார்வையும் இன்றி, சுயநலம் கலந்த பொதுநல வாதிகளாகவே இவர்களைக் காண்கிறேன்.

சைதையார் அப்படி அல்ல. மக்களின் பாதிப்புகளை தொகுதி வரையறைகளைக் கடந்து, மாவட்ட எல்லை களைக் கடந்து சிந்திக்கிறார். அக்கறை காட்டுகிறார்.

திருப்தி தராத அமைச்சர்களின் பதில்களை ஏற்க மறுக்கிறார். துணைக் கேள்விகள் போடுகிறார்.

இந்த உண்மையான சமூக அக்கறைதான் ‘‘என்னய்யா இந்தாளு நம்மளையே குடையுறாரு’’ என்று துறைசார்ந்த அமைச்சர்களே சலித்துக்கொள்ள முடியாதபடி கைகளைக் கட்டிப் போட்டிருக்கிறது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும், தன் செல்லப் பிள்ளையாக வளர்ந்த சைதையார் கேட்கக் கேட்க, தம்

அமைச்சரவை அமைச்சர்கள் பதில் சொல்லட்டும் என்று ரசித்துக் கேட்க, ஓர் ஆரோக்கியமான அரசியல் களத்தையே உருவாக்கியிருக்கிறார் சைதையார்.

சைதையாரின் மூன்றாண்டுச் சட்டமன்றச் சேவைகளை மூன்று தொகுதிகளாகப் பார்க்கும்போது ஓர் ஏக்கம் உச்சாணிக் கிளைக்கே போய் அமர்ந்து கொள்கிறது.

தமிழகச் சட்டமன்றத்தில் இவர், ஓர் நிரந்தர உறுப்பினராகத் தொடர்ந்தால் தமிழக ஆட்சி எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கும் என்பதே அது!

**– லேனா தமிழ்வாணன்**

# நுழைவாயில்...

*திரு. சைதை துரைசாமி அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் 1987ஆம் ஆண்டு பங்கு கொண்ட நிகழ்வுகள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன.*

*திரு. சைதை துரைசாமி வெற்றிபெற்ற சைதைத் தொகுதியில் காலூன்றிக் கொண்டு தமிழகம் முழுவதுமான பிரச்சினைகளை பருந்துப் பார்வைகொண்டு பார்த்து அதற்கான குரலை சட்டப்பேரவையில் மிகச் சரியாக எதிரொலித்திருக்கிறார் என்பதை அவருடைய வினாக்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், மானியக் கோரிக்கைகளின் மீது சொல்லிய கருத்துகள் அனைத்தும் மெய்ப்பிக்கின்றன. அவற்றில் தம்மை வெற்றிபெறச் செய்த சைதைத் தொகுதி மக்களின் பிரச்சினைகளை மிக வலுவாகவும் தெளி வாகவும் சைதை துரைசாமி வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*சிஜடி நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு களுக்குப் பட்டா வழங்க வேண்டும்; சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை; அடையாற்றை ஆழப்படுத்தும் திட்டம்; சைதையில் கூட்டுறவுத் துறை மூலம் சுயசேவை அங்காடி; அடையாறு ஓரத்தில் வெள்ளைத்தடுப்பு சுவர்கட்டுவதில் தாமதம்; சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம்;*

*சென்னை, மேட்லி சாலைக்கு தார்ச்சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல்; கோட்டூர்-நந்தனம் இணைப்புப் பால வேலைகள்; தாடண்டர்நகர் சமூகக்கூடம்; வேளச்சேரி ஏரி நீர்பரப்பு மட்டத்தைக் குறைத்து வெள்ளப் பாதிப்பைத் தவிர்த்தல்; அடையாறு ஆற்றின் கரையோரத்து மக்களுக்கு மாற்று இருப்பிடம் அளிக்க நடவடிக்கை;*

*சைதாப்பேட்டையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு தேவையான வசதிகள் இல்லாமை; சைதை-ஆலந்தூர் சாலை, அடையார் ஆற்று மையப் பகுதியில் தனியார் ஆக்ரமிப்பு; வேளச்சேரி குடிநீர்த் திட்டத்தில் சைதை, மடுவன்கரை பகுதிகள் இணைக்கப்படாதது; திடீர்நகர், கோதாமேடு குடிசைப் பகுதிகளில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி;*

*சைதையில் ஆற்றுமாநகர் மற்றும் கோதாமேடு ஆகிய பகுதிகளில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக மாடிவீடுகள்; கிண்டி-அம்பத்தூர் பகுதிகளிலுள்ள டெவலப்மெண்ட் பிளாட்டுகள்; தொழிற்பேட்டைக் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்குதல்; சைதை மாநகராட்சி ஆண்டாள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள காலியிடத்தை விளையாட்டுத் திடலுக்காகக் கையகப்படுத்துதல்;*

*சைதை 146-வது வட்டம் ஆலந்தூர் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்; சைதை மேற்கு ஜோன்ஸ் சாலை, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிப் பகுதியிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காலிமனை; சைதையில் 'தீ' விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்; ஆலந்தூர் சாலை தரைப்பாலம் - இவை எல்லாம் தமிழக சட்டப்பேரவையில் சைதை துரைசாமி வினாக்களாகவும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களாகவும் கொண்டுவந்து, அமைச்சர்களின் பதிலைப் பெற்று, மேற்கண்ட பணிகளைச் சரிசெய்ய வலியுறுத்திய வரலாற்றுப் பணிகளாகும்.*



*கிருத்துவக் கல்லூரியில் இயங்கும் ஓர் துறையும், பத்திரிகைகளும், பொதுநல அமைப்புகளும் தேர்தல் காலங்களில் கருத்துக் கணிப்புகளை வெளியிடுவதை மரபாகக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட அமைப்புகள் சென்னை சைதைத் தொகுதி உருவாக்கப்பட்டதிலிருந்து, இன்றுவரை சைதைத் தொகுதியின் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவர்களின் சட்டப்பேரவைப் பணிகளையும், அதன் வழியாக சைதை மக்கள் பெற்ற நன்மைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வு ஒன்றைத் தயாரிக்க வேண்டும். அப்போதுதான் சைதைத் தொகுதிக்கு திரு. சைதை துரைசாமி செய்திருக்கும் சேவைகளும் சாதனைகளும் வெளிப்படும். இதுபோன்ற ஓர் ஆய்வுதான் பொது நலத் தொண்டர்களை மக்களுக்கு இனம்காட்டும் மகத்தான பணியாகும்.*

*சட்டப் பேரவையில் எதிர்க்கட்சியினரோடு வாதப் பிரதி வாதங்களில் திரு. சைதை துரைசாமி ஆவேசத்தோடு ஈடுபட்ட போதும், தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தியதில்லை. எதிர்க்கட்சித் தலைவரை குறிப்பிடுகின்ற போதெல்லாம் 'கலைஞர்' என்ற அடைமொழியை திரு. சைதை துரைசாமி பயன்படுத்த மறந்ததில்லை! ஆம்! அனைவருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும் என்பதிலும், அரசியலைவிட மனிதர்கள்தான் மகத்தானவர்கள் என்பதையும் தன் உரைகளின் வழியாக திரு. சைதை துரைசாமி அரசியலாளர்களுக்கு அறிமுகம் செய்திருக்கிறார் என்பதற்கு இந்த மூன்று தொகுதிகளும் சான்றாகும்.*

*ஆம்! திரு. சைதை துரைசாமி ஒரே ஒருமுறைதான் வெற்றிபெற்று தமிழக சட்டப்பேரவைக்குச் சென்றார்.*

*அதுவும் மூன்று ஆண்டுகள் மட்டுமே சட்டப்பேரவையில் அவர் பணியாற்ற முடிந்தது. அதுவும் ஆளுங் கட்சி உறுப்பினராக இருந்து கொண்டு ஓர் எதிர்க்கட்சி உறுப்பினரை விட தொகுதி மக்களுக்காக வலுவாக வாதாடினார். இந்தப் பின்புலம்தான் இன்றும் சைதைத் தொகுதிவாழ் மக்களின் நெஞ்சங்களில் திரு. சைதை துரைசாமிக்கு தனித்த இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது.*

*என்றும் அன்புடன்*
***கே. ஜீவபாரதி***

*தொலைபேசி : 24614448*
*அலைபேசி : 9941211826*

# உள்ளே...

## 1987

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 29-32**

- இயந்திர கம்போஸ் உரத் தொழிற்சாலை ................ 29
- தமிழகத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள் ............. 30
- சென்னை நகர்ப் பகுதிகளில் பல அடுக்கு மாளிகைகள் .................................... 31
- கலப்பு மணத் தம்பதிகளின் வாரிசுகள் ................... 32

☆ **ஆளுநர் உரைக்கு நன்றி ......................................... 33-41**

- சோதனைகளை சாதனைகளாக்கிய மக்களாட்சி ......... 33
- இரட்டை வேடம் போடுவது யார்? ....................... 33
- ஒரு கோடிப் பேருக்குக் காலணி .......................... 35
- தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் ................... 36
- ஈக்காட்டுதாங்கல் பகுதிக்குக் குடிநீர் ...................... 36
- ஆழ்துளைக் கிணறுகளைப் பராமரிக்க... ................ 37
- தொடங்கப்படாத தனியார் தெருக்களின் அடிப்படை வசதிகள் ..................................... 37
- தனியார் ரியல் எஸ்டேட்டுகளுக்குத் தடை .............. 38

- பிறமொழிப் படப் பெயர்களுக்கு சென்சார் ............. 38
- பீக் அவர்ஸ் நேரத்தில் லாரி, மாட்டு வண்டிகளுக்குத் தடை ........................... 38
- ஈக்காடுதாங்கல் மக்களுக்குச் சுடுகாடு .................... 39
- மருந்துகளால் வளரும் கொசுக்கள் ......................... 39
- கரையோரக் குடிசைகளும் அறநிலையத்துறைத் துணை ஆணையரும் ........... 40

☆ **கவன ஈர்ப்பு ........................................................ 42-44**

- சி.ஐ.டி. நகர் குடிசை மாற்றுவாரியக் குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்குதல் ........................................ 42

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 45-52**

- நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் புதிய அனல் மின் நிலையம் அமைத்தல் .............. 45
- தீயினால் பாதிக்கப்பட்ட மூர் அங்காடி.................... 47
- இரவு நேர லாரி போக்குவரத்து ........................... 49
- சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகள் ........ 50
- சென்னை மாநகராட்சி வரைபட அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள வீடுகளின்மீது நடவடிக்கை ............................. 52

☆ **கவன ஈர்ப்பு ........................................................ 53-56**

- சென்னையில் அரிசி விலை ஏற்றம்........................ 53

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 57-60**

- சிறப்பு நீதிபதிகள் அமர்த்தல் ............................... 57
- மொபெட், டி.வி.எஸ். 50 வாகனங்களுக்கு ஹெல்மெட் விதிவிலக்கு ................................. 60





☆ **கவன ஈர்ப்பு ........................................................ 61-63**

- சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை ....................... 61

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 64-70**

- அண்ணா, எம்.ஜி.ஆர். சிந்தனைகளை கல்லூரி பாடமாக்கல் ..................................... 64
- அடையாற்றை ஆழப்படுத்தும் திட்டம் .................. 65
- தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரணம் .............................. 66
- தமிழகத்தில் வீடியோத் தியேட்டர்கள் .................... 67
- வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து தனியார் நிறுவனங்களுக்கும் வேலைக்கு எடுத்தல் ..................................... 70

☆ **வேளாண்மை மானியக் கோரிக்கை .......................... 71-77**

- சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்த புரட்சித் தலைவர் ......................................... 71
- தனியார் தெருக்களின் வசதிகளை விரைவுபடுத்துதல் .......................... 72
- செயற்கை மழை தேவை ................................... 72
- கடல் நீரைக் குடிநீராக்க... .................................. 72
- பழைய பைப்புகளுக்குப் பதிலாக புதிய பைப்புகள் ............................... 73
- ஆழ்துளைப் பம்புகளைப் பராமரிக்க... .................. 73
- கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் ................................ 73
- கோட்டூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் .................... 74
- ஈக்காடுதாங்கல் பாதாளச் சாக்கடைத் திட்டம் ........... 74

- பழைய கிணறுகளைப் பராமரித்தல் ........................ 74
- சாக்கடை அடைப்புகளை நீக்குவதில் புதுமை .......... 75
- வியாபாரத்திற்கே மீட்டர் வீட்டுக்கல்ல! ................... 75
- வேளச்சேரித் திட்டத்துடன் மடுவன்கரை குடிநீர் வழங்கும் திட்டம் ................................ 76
- சேகர் நகர், ரங்கராஜபுரம், அபித் காலனி போன்ற பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்க! ...................................... 76
- தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் ................................ 77

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 78-80**

- கோட்டூர், ஈக்காடுதாங்கல் பாதாள சாக்காடை, மடுவன்கரை குடிநீர் பிரச்சினை ......................... 78
- சைதையில் கூட்டுறவுத் துறை மூலம் சுயசேவை அங்காடி ..................................... 79

☆ **கவன ஈர்ப்பு .......................................................... 81-83**

- அடையாறு ஓரத்தில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டுவதில் தாமதம் ............................... 81

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 84-89**

- பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு மைய அரசின் மானியம் ................................ 84
- தாட்கோ மூலம் வீடு கட்டுதல் ............................ 85
- வரதட்சணைப் பிரச்சினைக்குப் புதிய தீர்வு! ................................................ 86
- சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் ................................ 86



- சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி ................................. 88
- சென்னை மேட்லி சாலைக்கு தார்சாலை மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் .......................... 89

☆ **கவன ஈர்ப்பு .......................................................... 90-93**

- கோட்டூர் - நந்தனம் இணைப்புப் பால வேலைகள் ........................................... 90

☆ **வினாக்கள் - விடைகள் ........................................... 94-101**

- சென்னை - விழுப்புரம் இரட்டை இரயில் பாதைத் திட்டம் ................................ 94
- வாரிசுகளுக்கு வாய்ப்புக் கொடுப்பதில் காலதாமதம் ............................................. 96
- இலவசப் பாடப்புத்தகத்திற்கு இழப்பு எவ்வளவு? ..................................... 97
- சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளை தமிழில் ஒலிபரப்புதல் .................................. 97
- தாடண்டர் நகர் சமூகக் கூடம் ............................ 99
- திறந்தவெளி சிறைச் சாலைகள் .......................... 101
- தையல் தொழிலாளர்களுக்கு வங்கிக் கடன் ........................................... 101

☆ **கவன ஈர்ப்புகள் ................................................. 102-108**

- வேளச்சேரி ஏரி நீர்பிடிப்பு மட்டத்தைக் குறைத்து வெள்ளப் பாதிப்பைத் தவிர்த்தல் ..................... 102
- அடையாறு ஆற்றின் கரையோரத்து மக்களுக்கு மாற்று இருப்பிடம் அளிக்க நடவடிக்கை ........... 104

☆ **வினாக்கள் - விடைகள் ........................................ 109-114**

- தமிழகத்தில் மீன்பிடித் தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்தல் ........................................ 109
- கரூர், தாராபுரம் போன்ற பகுதிகளில் மாணிக்கக் கற்கள் ........................................ 110
- ஊனமுற்றவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குவதில் முன்னுரிமை ............................ 111
- மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் .................... 111
- சென்னை பேசின்பிரிட்ஜ் பகுதியில் புதிய மின் நிலையம் .................................... 112
- மாவட்டங்களில் மக்கள் நீதி மன்றங்கள் ................ 113

☆ **கவன ஈர்ப்பு ........................................................ 115-117**

- சைதாப்பேட்டையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான வசதிகள் இல்லாமை ....................... 115

☆ **மாநகராட்சி மானியக் கோரிக்கை ........................... 118-127**

- சென்னை மாநகராட்சியின் 300ஆம் ஆண்டு விழா ................................. 118
- சென்னை நகர மேம்பாட்டுக் குழு ........................ 119
- மாநகராட்சி அதிகாரிகளுக்குப் பாராட்டு ............... 119
- மாநகராட்சி வருவாயில் பாதி சம்பளமாக... .......... 120
- பணியாளர்கள் நிதி பற்றாக்குறை ......................... 120
- தன்னிறைவுத் திட்டம் போன்று தனித் திட்டம் ......... 120
- நகராட்சி, ஊராட்சி, பஞ்சாயத்து அலுவலகங்களில் முதல்வர் படம் .................... 121



- நிதி ஒதுக்காததால் தேங்கிக் கிடக்கும் பணிகள் ....... 121
- பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே பெட்டர்மெண்ட் டாக்ஸ் ................................ 122
- நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து மாநகராட்சிக்கு... ........................................ 122
- வாகன வரிகள் மாநகராட்சிக்கே... ....................... 123
- ஆந்திராவைப் போன்று வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குக ....................... 123
- வட்டங்கள்தோறும் வாழுவோர் பட்டியல் .................................. 124
- சவரத் தொழிலாளர்களும், சலவைத் தொழிலாளர்களும் .......................... 124
- மேற்கு சைதையில் சலவைத் துறை ...................... 125
- மாட்டு வண்டிகளை மாற்ற வேண்டும் ................. 125
- சேலம், திருச்சி நகரசபைகளை மாநகராட்சியாக்க வேண்டும் ......................... 125
- பாதாள இரயில்த் திட்டம் ................................. 125
- மெரீனா கடற்கரையை அழகுபடுத்த மாற்றுத் திட்டம் .......................................... 126
- பூங்காக்களை தனியார் தொழிற்சாலைகள் பராமரிக்க நடவடிக்கை ................................ 126
- தியேட்டர்கள் கட்டும் பணி ............................... 127
- கொசு ஒழிப்புக்கு மாற்று வழி ............................ 127
- எழும்பூர் விளையாட்டு மைதானத்தை மாநகராட்சிக்கு மாற்றுக! ............................... 127

☆ **வினாக்கள் - விடைகள் ........................................ 128-132**

- சைதை - ஆலந்தூர் சாலை அடையார் ஆற்று மையப் பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பு .................................. 128
- சென்னையில் புதிய பால் பண்ணை .................... 130
- குதிரைப் பந்தய இடத்தைப் பற்றி... ...................... 131

☆ **கவன ஈர்ப்பு ...................................................... 133-137**

- வேளச்சேரி குடிநீர்த் திட்டத்தில் சைதை, மடுவன்கரை பகுதிகள் இணைக்கப்படாதது .......... 133

☆ **வினாக்கள் - விடைகள் ........................................ 138-140**

- திருமதி. இந்திராகாந்தி திருவுருவச் சிலை ............ 138
- பிச்சாவரத்தைச் சுற்றுலா மையமாக்க தனித்திட்டம்? .......................................... 139
- தமிழகத்தில் உள்ள பிற்பட்ட மாணவர் விடுதிகள் பற்றிய விவரம் ........................................ 139

☆ **கவன ஈர்ப்பு ...................................................... 141-144**

- திடீர் நகர், கோதாமேடு குடிசைப் பகுதிகளில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி ................ 141

☆ **காவல்துறை மானியக் கோரிக்கை ......................... 145-156**

- மக்களைப் பாதுகாத்த காவல் துறை .................... 145
- ஆபாச சுவரொட்டிகளை தடை செய்க! ................ 146
- சுவரொட்டிகளை ஒட்டுவோர் மீது நடவடிக்கை ...................................... 146
- கார்க் துப்பாக்கியைப் பயன்படுத்துக .................... 146
- மயக்க மருந்துள்ள துப்பாக்கியைப் பயன்படுத்தலாம் ........................................ 147



- நேர்மையானவர்கள் ஓய்வு பெறும்போது ஒரு லட்சம் .............................................. 147
- ஏ.சி. மாணிக்கத்தின் மனிதநேயம் ...................... 148
- சைக்கிள் கடைக்காரர்களுக்கு உதவி .................... 148
- குற்றவாளிகள் முகத்தில் பச்சை... ....................... 149
- ரயிலில் அடிபட்டுச் செத்தவர்களின் பாடி ............. 150
- கள்ளச் சாராயம் விற்பவர்கள் மீது மிசா ................ 150
- ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் காவலர்கள் எண்ணிக்கை ............................ 150
- பொதுக் கூட்டங்களுக்குக் கட்டுப்பாடு ................ 150
- காவலர்களுக்கு இலவச பஸ் பாஸ் ....................... 151
- குடும்பக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கும் காவலர்களுக்குப் பதவி உயர்வு ...................... 151
- காவல் நிலையங்களில் எமர்ஜென்சி விளக்கு .................................. 152
- ஓயர்லெஸ், ஜீப், பெட்ரோல் ............................. 152
- காவல்துறைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை ........................ 152
- சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் E.D.R. ......................... 152
- வயது நிர்யணத்தைவிட உடல் ஆரோக்கியம் ......... 153
- குடும்பச் சண்டைகளும் 75-வது பிரிவும் ............. 153
- அப்பாவிகள் மீது 41-கிளாஸ் ........................... 153
- தீயணைப்புத் துறைக்கு நவீனக் கருவிகள் ............ 154
- காவல் துறை ஊதியம் தீயணைப்புத் துறைக்கும் ..... 154
- காவல் துறையை இழிவுபடுத்தும் திரைப்படங்கள் மீது நடவடிக்கை ................... 154

- கொலை, கொள்ளை செய்திகளால் கொடியோர் தப்பித்தல் .................................. 155

☆ **வினாக்கள் - விடைகள் ....................................... 157-163**

- சைதையில் ஆற்றுமாநகர், திடீர் நகர் மற்றும் கோதாமேடு ஆகிய பகுதிகளில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள் ................. 157
- கிண்டி -அம்பத்தூர் பகுதிகளிலுள்ள டெவலப்மெண்ட் பிளாட்டுகள் ........................ 158
- மதுரை அழகர் கோவிலிலுள்ள முன் மண்டபம் ...... 161
- தாசில்தார் அலுவலகம் பெயர் மாற்றம் ................. 162

☆ **கவன ஈர்ப்பு ....................................................... 164-166**

- தொழிற்பேட்டைக் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்குதல் ............. 164

☆ **வினாக்கள் - விடைகள் ....................................... 167-181**

- சைதை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள காலியிடத்தை விளையாட்டுத் திடலுக்காக கையகப்படுத்துதல் .. 167
- சென்னையில் மினி டாக்ஸிகள் .......................... 168
- சைதை 146-வது வட்டம் ஆலந்தூர் சாலையை விரிவுப்படுத்தும் திட்டம் ............................... 169
- சைதை மேற்கு ஜோன்ஸ் சாலை, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிப் பகுதியிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காலிமனை .......... 170
- செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் - கோவளம் இடையேயுள்ள பழுதடைந்த பாலம் ..................................... 170



- கைத்தறி லுங்கிகளைஅரசே ஏற்றுமதி செய்யும் திட்டம் ............................. 171
- சென்னை மாநகராட்சியால் கால்பந்தாட்ட விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் .................................... 171
- சுற்றுலாப் பொருட்காட்சி நாட்களை அதிகரித்தல் ................................ 172
- விளையாட்டுத் துறையில் தமிழகம் ...................... 172
- சத்துணவு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு ........... 173
- சைதையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் .................................. 173
- அரசுத் துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டுதல் ............... 174
- கோவில் சிலைகள் மற்றும் நகைகளைப் பாதுகாக்கக் கண்காணிப்புக் குழுக்கள் ............... 175
- வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் .................................... 176
- புதிய இடத்தில் தலைமைச் செயலகம்? ................ 177
- உடல் ஊனமுற்றோர்கள் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் ........................ 178
- சென்னை மாநகரத் தாலுக்காக்களைப் பிரித்தமைத்தல்! ......................................... 179
- ஆலந்தூர் சாலை தரைப் பாலம் ........................ 180
- தொலைக்காட்சியில் சட்டமன்ற நடவடிக்கைகள் ..... 181

☆ **கவன ஈர்ப்பு ....................................................... 182-187**

- சென்னை வேளச்சேரி பகுதியிலுள்ள சாவடி இடத்தைக் கிராம நிர்வாக அலுவலர் சட்டத்திற்குப் புறம்பாக விற்றது குறித்து ............. 182

☆ **வினாக்கள் - விடைகள் ........................................ 188-196**

- சென்னை மாநகரில் குடிநீர் குழாய்கள் அமைக்காத பொதுத் தெருக்கள் ...................... 188
- அண்ணாசாலையில் மாற்றுவழிப் பாதை ............... 189
- தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் ......................................... 191
- தமிழகத்திலுள்ள அரசு பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் குளிர்பதன நிலையங்கள் ...................... 192
- சமூக நலத்துறையினால் பயனடைந்த உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்ற முதியோர்கள் ............................... 193
- சைதைத் தொகுதியிலுள்ள சுடுகாடுகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல் ................................... 194
- சென்னை நகர கூட்டுறவு நியாய விலைக் கடைகள் .............................. 195
- குடிசை வீடுகளை வாழுவோர்க்குச் சொந்தமாக்குதல் ......................................... 196

☆ **கவன ஈர்ப்பு ...................................................... 197-199**

- சைதைப் பகுதி தனியார் தெருக்களிலுள்ள கழிவுநீரை அகற்றுதல் குறித்து ........................ 197

☆ **வினாக்கள் - விடைகள் ........................................ 200-208**

- சென்னையில் கழிவுநீர் அகற்றும் வடிகால் வசதி இல்லாத பொதுத் தெருக்கள் ....... 200
- சென்னை அண்ணாநகர் விஸ்வேஸ்வரய்யா பூங்காவை அழகுபடுத்தும் திட்டம் .................. 201
- சென்னை மாநகரின் தண்ணீர்ப் பிரச்சினை ............ 201
- சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகம் ..... 204



- சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான இடம் ..................................... 207
- விவேகானந்தர் நினைவிடத்திற்குப் படகுப் பயணம் ........................................... 208

☆ **கவன ஈர்ப்பு ...................................................... 209-216**

- சென்னை பைராகி மடம், வெங்கடேசப் பெருமாள் கோவில் நிலத்தைத் தனியாருக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுத்துள்ளது குறித்து ............................... 209

1987



# வினாக்கள் – விடைகள்

## இயந்திர கம்போஸ் உரத் தொழிற்சாலை*

**திரு. சைத சா. துரைசாமி :** தலைவரவர்களே, சென்னை மாநகரில் நாள்தோறும் எடுத்துக் கொண்டிருக்கிற குப்பைகளை வைத்து இந்த உரத் தொழிற்சாலையைத் தொடங்க முதலிலே என் தொகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னால், இது வேளச்சேரிக்கு மாற்றப்பட்டது. குப்பையைக் கொட்டக் கூட இடம் இல்லாத நிலையில் அரசு மறுபரிசீலனை செய்து, இந்தத் தொழிற்சாலையைத் தொடங்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அடிப்படையில் குப்பைகள் இன்றைக்குத் தீவிரமாக, அழிக்கப்பட வேண்டியவை என்பதிலே இந்த அரசு கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. இதற்கு வேறு வகையிலே தீவிரமாக அரசு தீர்வு காண இருக்கிறது.

* 1987 மார்ச் 2 அன்று திரு வி.பி. சிந்தன் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி



## தமிழகத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் அரசுக்குச் சொந்தமான இடங்கள் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கோ, வீட்டு வசதி வாரியத்திற்கோ மற்றும் அரசு அலுவலகங்களுக்கோதான் கொடுக்கப்பட வேண்டும். மற்ற தனியார்களுக்கு பட்டா செய்து கொடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அத்தோடு வட்டாட்சி அலுவலர்கள், எஃப்.சி.ஆர். என்ற முறையில் சிலருக்கு அனுமதி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறார்கள் அதுவும் தடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் போன்ற பெரு நகரங்களிலுள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தாலும் சரி, உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தாலும் சரி, அவை பொதுமக்களுக்குப் பயன்படுகின்ற அளவுக்கு அமைக்கப்பட வேண்டுமே தவிர வேறு அல்ல. விளையாட்டு இடங்கள் பூங்காக்கள் போன்றவற்றை அமைக்க அந்த இடங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றுதான் இப்படிப்பட்ட பொது இடங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அப்படித்தான் அந்த இடங்கள் அமைய வேண்டிய சூழ்நிலையே தவிர வேறு அல்ல.

சென்னையைப் போன்ற பல இடங்களில் பூங்காக்கள் அழிக்கப்பட்டு, விளையாட்டுக் கூடங்கள் அழிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டு, பொது இடங்களே இல்லாத அளவுக்கு, பெரும் பெரும் நகரங்கள் ஆகிவிட்டன. எக்காரணம் கொண்டும் தனியார்களுக்கு நகரங்களில், குறிப்பாக எந்த நகரமானாலும் சரி, மாநகராட்சியானாலும் சரி, அவற்றை ஒப்படை செய்யக் கூடாது என்பதுதான் அரசினுடைய கொள்கையாகும். ஏனென்றால் வெளிநாடுகளில் இருக்கிற பெரிய நகரங்களில் பொது இடத்தை எக்காரணம் கொண்டும் பாழ்படுத்தாது இருக்கிற சூழ்நிலையைக் கையாளுகின்றார்கள். உதாரணத்திற்குச்

* 1987 மார்ச் 2 அன்று திரு மா. சின்னராசு வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

சொல்ல வேண்டும் என்றால் இங்கு நாம் நேரு பார்க் என்று வைத்திருந்தோம். அந்த பார்க்கே இப்போது இல்லை. பிராட்வேயில் ஒரு பார்க்கை வைத்திருந்தோம். அந்த பார்க் இப்போது அடியோடு ஒழிந்துவிட்டது. விளையாட்டு இடங்கள் பல இடங்களில் வைத்திருந்தோம். அவை இப்போது மாறிவிட்டன.

சென்னை போன்ற பெரிய நகரங்களில் மக்கள் மாலை வேளைகளில் ஆங்காங்கு உட்காருவதற்கும், தங்குவதற்கும், ஓய்வு பெறுவதற்கும் இடமில்லாத அளவிற்கு ஆக்கிரமிப்புகள் வந்து விடுகின்றன. தனியார் ஆக்கிரமிப்புகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று எங்கேயாவது அப்படித் தனியாருக்கு ஜாரி செய்கிற சூழ்நிலை இருக்குமானால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை நகர்ப் பகுதிகளில் பல அடுக்கு மாளிகைகள்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் 1/4 கிரவுண்ட், 1/2 கிரவுண்ட், 3/4 கிரவுண்ட், 1 கிரவுண்ட் என்று பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் வீடு கட்டும்போது, எம்.எம்.டி.ஏ. சட்டதிட்டங்கள் அதிகமான இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று விதியில் இருக்கிறது.அந்த விதியை மாற்ற வேண்டுமென்று பலமுறை கேட்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையெனில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு மாத்திரம் இதில் விதி விலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1/4 கிரவுண்ட், 1/2 கிரவுண்டிலே வீடுகள் கட்டுகிறபொழுது, கிரவுண்ட் ப்ளோர் மட்டும் கட்டுவது என்றால், கார்ப்பரேஷன் அனுமதி வாங்கினாலே போதும். ஆனால், 1/4 கிரவுண்டிலே 3 மாடி கட்ட வேண்டுமென்றால்தான் எம்.எம்.டி.ஏ. குறுக்கிட்டு விதிகளைப் புகுத்த வேண்டியிருக்கிறது.

* 1987 மார்ச் 3 அன்று திரு கே. உச்சி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



## கலப்புமணத் தம்பதிகளின் வாரிசுகள்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்து கொள்கின்றவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளைப் பள்ளியிலே சேர்க்கும்போது என்ன ஜாதி என்று கேட்கிறார்கள். அவர்கள் தந்தை வழி வந்த ஜாதியைச் சொல்லிச் சேர்க்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் சேர்க்கும்போது கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு, என்ன ஜாதி என்பதைக் கேட்காமல் கலப்புமணம் செய்தவர்கள் என்ற ஜாதியைச் சொன்னால், சலுகை வழங்க சரியாக இருக்குமே, அதை நடைமுறைப்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை ஏற்கெனவே இரண்டு மூன்று வழிகளிலே வந்து, அந்தக் குழந்தை, தாய் தந்தையரிலே எந்த ஜாதி வழி என்று குறிப்பிடுகிறதோ, அந்த ஜாதியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறை வகுக்கப்பட்டு, தந்தை உயர்ந்த ஜாதியாக இருந்து தாய் தாழ்ந்த ஜாதியா அல்லது ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்து, தான் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்தான் என்று சொல்லுமானால், அந்த வகுப்பு குறிப்பிடப்பட வேண்டுமென்ற அளவுக்கு ஆணை திருத்தப்பட்டு அந்த அடிப்படையிலே ஆங்காங்கே குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன.

* 1987 மார்ச் 4 அன்று திரு கே. சுப்பராயன் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



# ஆளுநர் உரைக்கு நன்றி★

**மா**ண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் ஆளுநர் உரையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற கடுமையான வறட்சிக்காக, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைக்கு முதலிலே நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

## சோதனைகளை சாதனைகளாக்கிய மக்களாட்சி

இந்த அரசுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கடுமையான வெள்ளச் சோதனையும், வறட்சிப் பெருக்கால் ஏற்படுகிற சோதனையும் மாறி மாறி வந்தாலும், அந்தச் சோதனை களையே சாதனைகளாக மாற்றி, மக்களைக் காப்பாற்றுவதில் புரட்சித் தலைவர் அரசு ஒரு மக்களாட்சி அரசு என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அது எந்தச் சோதனையாக இருந்தாலும், அந்தச் சோதனைகளைச் சாதனை களாக்கி மக்களது நம்பிக்கையைப் பெற்று இன்றைக்கு இந்த அரசு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

## இரட்டை வேடம் போடுவது யார்?

கள்-சாராயக் கடைகளை மூட வேண்டும் என்று முதலிலே சொன் னார்கள், தமிழகத்தினுடைய நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர்

★ 1987 மார்ச் 4





அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமான, ஆழ்ந்த பிடிப்பு கொண்டவர் என்பதை நாம் கடந்த காலத்தில் அறிய முடியும்.

குடித்தால் ஆறு மாதம் தண்டனை என்று சட்டம் கொண்டு வந்து, நாட்டில் யாருமே மது அருந்தக் கூடாது என்ற கொள்கைக்கு வலிவு சேர்த்தார்கள். ஆனால், அப்போது சொன்னார்கள், ‘‘என்ன மிகப் பெரிய பாவம் இது? குடித்தால் தண்டனையா, கொலை செய்தாரா, கொள்ளை அடித்தாரா, அவர்களுக்கு எல்லாம் சிறைத் தண்டனை கொடுக்கலாம். ஆனால், தான் உழைத்துச் சம்பாதிக்கின்ற பணத்தில், மாலை நேரத்தில் ஓய்வுக்காகக் குடிப்பவர்களுக்குச் சிறைத் தண்டனையா’’ என்று அன்றைக்குக் கேட்டார்கள்.

புரட்சித் தலைவர், இந்த மதுவிலக்குக் கொள்கையினைத் தளர்த்தியபோது, மது விலக்கைத் தளர்த்தலாமா, இது நியாயமா? தாய்மீது சத்தியம் செய்தாரே, முறைதானா இது, என்று மது விலக்கைத் தளர்த்தியபோது சொன்னார்கள்.

இன்றைக்குக் கள்-சாராயக் கடைகளை மூடிய பிறகு, இது என்ன பெரிய விஷயம். ஒயின் ஷாப்புகளைத் திறந்து வைத்திருக்கிறீர்களே என்று சொல்கிறார்கள்.

மதுவிலக்குக் கொள்கையில் என்ன நிலை இருக்க வேண்டும், கள்ளச் சாராயம் பெருகுவதை எப்படித் தடுக்க வேண்டும், மதுவிலக்குக் கொள்கையை இந்த முறையில் நடைமுறைப் படுத்தினால் நன்றாக இருக்கும் என்று அரசுக்கு ஆலோசனை சொல்ல வேண்டும். இன்றைக்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையைப் பாராட்ட வேண்டும். 200 கோடி ரூபாய் இழப்பில் மது விலக்கை ஆண்மையோடு புரட்சித் தலைவர் கொண்டு வந்திருக்கிறார் என்று சொன்னால், அதை நீங்கள் பாராட்டினீர்களா? மது விலக்கைத் தளர்த்தியபோது எதிர்த்தீர்கள்.

இன்றைக்கு மது விலக்கைக் கொண்டுவந்தபோது எதிர்க்கிறீர்கள் என்று சொன்னால் யார் இரட்டை வேடம் போடுவது? இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் மது விலக்கு. அமலில் இல்லாதபோது தமிழகத்தில்தான் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணல் காந்தி

அடிகளின் கொள்கையை நனவாக்க அதைக் கொண்டு வந்தார்கள். அதை நிறைவேற்றுவதற்காக 1980ஆம் ஆண்டு கடுமையான சட்டம் கொண்டு வந்தார்கள். எல்லோரும் எதிர்த்தார்கள்; தளர்த்தினார், குறை சொன்னார்கள். இன்றைக்கு மது விலக்கைக் கொண்டு வந்திருக்கிறார், ஆதரிக்க வேண்டுமா, வேண்டாமா? யார் போடுவது இரட்டை வேடம்? நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். நாட்டு மக்களுக்குத் தெரியும். புரட்சித் தலைவர் அவர்கள் எப்படிப்பட்ட நடைமுறைகளை இன்று நாட்டு மக்களுக்கு நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த ஆளுநர் உரை தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

## ஒரு கோடிப் பேருக்குக் காலணி

காலணி வழங்கப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் சமூகப் பார்வையோடு சமுதாயத்திலே ஒதுக்கப் பட்டிருக்கிற அதிலும் இந்தச் சமுதாயத்திலே யாரும் கவனிக்கப்படாத அந்த மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்பதில் அவர் முன்னோடியாக இருந்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு நேற்று அல்ல, திரைப்படங்களிலும் சொல்லி இருக்கிறார். ஆகவேதான், நெடுஞ்சாலைப் பணித்துறையில் சாலை போடுகின்ற அந்தத் தொழிலாளர்கள் கோணிப்பைகளைக் காலிலே கட்டிக் கொண்டு தார் ரோடு போடுவதைப் பார்த்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு மாற்றுத் திட்டமாக, உடனடியாகத் தார் சாலை போடும் தொழிலாளர்களுக்குக் காலணிகள் வழங்க வேண்டுமென்று அன்றைக்கே உத்தர விட்டார். நாட்டிலே, சமுதாயத்திலே குக்கிராமங்களில் கடுமையான வெயிலில், வேகாத வெயிலில் முட்கள் மிகுந்த காடுகளில், வயல் காடுகளில் செல்லுகின்ற தாய்மார்கள், மாணவச் சிறார்கள் காலிலே காலணி இல்லாமல் செல்லுகின்ற அந்தக் கொடுமையைப் போக்குவதற்காக இன்றைக்குச் சமுதாயத்திலே இருக்கின்ற 5 கோடி பேர்களில் கால்வாசிப் பேர், ஏறத்தாழ 1 கோடி பேர்கள் பலன் பெறுகிறார்கள்.



## தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர்

சமுதாயப் பார்வையோடு இன்றைக்கு இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவேதான் யாரும் கவனிக்காத, இந்தியத் துணைக் கண்டத்திலேயே யாருக்கும் வராத, அந்தச் சமுதாயப் பார்வை, தாயுள்ளம் கொண்டவர் புரட்சித் தலைவர் என்பதை இந்தத் திட்டம் இன்றைக்கு நிரூபித்துக் காட்டிக் கொண்டிருக் கிறது. ஆகவேதான் புரட்சித் தலைவர் அரசுக்கும், அவருக்கும் எந்தச் சோதனைகள் வந்தாலும் அவைகளைச் சாதனைகளாக மாற்றிக் கொண்டிருக்கிறார். சமுதாய நோக்கம், பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்குச் சோதனைகள் வரத்தான் செய்யும். எந்தச் சோதனையாக இருந்தாலும் அந்தச் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றி வருகிறோம்.

ஏனென்றால் எங்களிடத்திலே உள்ளத் தூய்மை இருக்கிறது; எங்களிடத்திலே நேர்மை இருக்கிறது; எங்களிடத்திலே உண்மை இருக்கிறது. ஆகவே, எந்தச் சோதனையாக இருந்தாலும், அந்தச் சோதனைகளை முறியடித்துச் சாதனைகளாக மாற்றி மக்களது நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவேதான் இன்றைக்குக் கிராமப்புறங்களில் உள்ளவர்களும், படித்தவர்களும் அத்தனைபேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவேதான் புரட்சித் தலைவர் அவர்களின் நோக்கமானது, ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, சத்துணவு, இலவச சீருடை, இலவசப் பாடப் புத்தகம், இலவசக் காலணி என்கின்ற சமுதாயப் பார்வையோடு ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவர் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவேதான் எங்களுக்கு முன்பாகப் பேசிய அத்தனைபேரும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பல விவரங்களைச் சொல்லி இருக்கிறார்கள்.

## ஈக்காட்டுதாங்கல் பகுதிக்குக் குடிநீர்

இந்த நேரத்தில் நான் எனது தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினை களையும் சொல்லி எனது உரையை நிறைவு செய்யலாம் என்று

கருதுகின்றேன். நீண்டகாலமாக இந்த மன்றத்திலேகூட பலமுறை பேசும்போது சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் சுரங்கப்பாதை அமைக்கப் பலமுறை வலியுறுத்தி வந்தேன். இன்றைக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே, நான் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல் ஈக்காட்டு தாங்கல் பகுதிக்குக் குடிநீர் வழங்க வேண்டும். சென்னை மாநகராட்சி யிலே ஏறத்தாழ 50 ஆண்டுகாலமாக அந்தப் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குக் குடிநீர் வசதி இல்லை.

ஆகவே, கிண்டி லேபர் காலனி அருகேயுள்ள பழைய பம்பிங் ஸ்டேஷனில் இருந்து குடிநீர் வழங்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## ஆழ்துளைக் கிணறுகளைப் பராமரிக்க...

சென்னை மாநகரத்தில் இண்டியா மார்க்-2 என்கிற ஆழ்துளைக் கிணறுகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை போடப்பட்டிருக்கின்றன. அவைகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை விரைந்து பராமரித்து சென்னை மாநகர மக்களது குடிநீர் பிரச் சினையைத் தீர்த்து வைக்க அதுவே போதுமான ஒன்றாக இருக்கின்ற காரணத்தால், அதற்கென்று தனியாக ஒரு செயற் பொறியாளரை நியமித்து அந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## தொடங்கப்படாத தனியார் தெருக்களின் அடிப்படை வசதிகள்

அதைப்போலவே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த தனியார் தெருக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்ற திட்டம் எல்லாவிதமான ஆய்வுப் பணிகளும் முடிவடைந்த பிறகும் இன்னும் தொடங்கப்படாமல் தாமதப்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்காகத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் அந்தப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



## தனியார் ரியல் எஸ்டேட்டுகளுக்குத் தடை

அடுத்து, சென்னை மாநகரில் மட்டுமில்லாமல், தமிழகம் முழுவதுமே இன்றைக்கு ''ரியல் எஸ்டேட்'' என்ற பெயரில் தனி நபர் வருமானத்தைப் பெருக்கி, பொதுமக்களைச் சுரண்டுகிற நிலைமை இருந்து வருகிறது. ரியல் எஸ்டேட் சொந்தக்காரர்கள் விவசாய நிலங்களையெல்லாம் வீட்டுமனைகளாகப் போட எடுத்துக் கொள்கிறார்கள். விவசாயத்திற்கே இடமில்லாமல் போகிற அளவுக்குக் கூட இன்றைக்கு ரியல் எஸ்டேட் வளர்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப் போடப்படுகிற வீட்டு மனைகளுக்கு அடிப்படை வசதிகள் கூட செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தால் இத்தகைய ரியல் எஸ்டேட் என்று செயல்படுபவர்களைத் தடை செய்ய வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வழங்கப்படுகிற மனைகளைத் தவிர, தனியார் யாரும் ரியல் எஸ்டேட் போடுவது கூடாது என்று தடை செய்ய வேண்டும் என்ற கோரிக் கையை இந்த நேரத்தில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## பிறமொழிப் படப் பெயர்களுக்கு சென்சார்

அதைப்போலவே, சென்னை நகரில் பிற மொழிப்படங்கள் திரையிடப் படும்போது அவற்றின் பெயர்களையெல்லாம் மிகவும் ''செக்சியாக'' வைக்கிறார்கள். வியாபார நோக்கத்தில் அப்படிப்பட்ட செக்சியான பெயர்களை இன்றைக்குப் பிறமொழிப் படங்களுக்குச் சூட்டப்படுகின்றன. திரைப் படங்களைத் திரையிடுவதற்கு முன்பு எப்படி சென்சார் போர்டு அனுமதி தருகிறதோ, அதைப்போலவே பிறமொழிப் படங்களுக்கு இங்கே பெயர் வைக்கும்போதும் சென்சார்போர்டுதான் அனுமதி அளிக்க வேண்டும் என்றும், அதற்குப் பிறகுதான் பிறமொழிப் படங்களைத் திரையிடலாம் என்றும் ஒரு முறையைக் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## பீக் அவர்ஸ் நேரத்தில் லாரி, மாட்டு வண்டிகளுக்குத் தடை

அடுத்து, சென்னை மாநகரில் போக்குவரத்து நாள்தோறும் பெருகிக் கொண்டே வருகிறது. அதிலும் காலையிலும் மாலையிலும்

அலுவலகத்திற்குச் செல்லுகிற அலுவலர்களும் மாணவர்களும் பயணம் செய்கிற நேரத்தில், லாரிகள் மற்றும் மாட்டு வண்டிகள் ஆகியவை அதிக அளவில் செல்வதின் காரணமாகப் போக்குவரத்தில் அதிக நெருக்கடியும் நெரிசலும் ஏற்படுகிறது. எனவேதான் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட நேரத்தில் இதுபோன்ற வாகனங்களின் போக்குவரத்தைத் தடை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மற்ற நேரங்களில் இத்தகைய போக்கு வரத்துகள் அனுமதிக்கப்படலாம். ஆனால், பீக் அவர்ஸ் நேரத்தில் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட நேரங்களில் இத்தகைய வாகனங்களின் போக்குவரத்தைத் தடை செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

## ஈக்காடுதாங்கல் மக்களுக்குச் சுடுகாடு

சென்னை நகரில் ஈக்காடுதாங்கல் பகுதியில் ஏற்கெனவே இருந்து வந்த சுடுகாட்டுப் பகுதி இப்போது அடையாறு ஆற்று பாலத்தை அகலப்படுத்தப்படுகின்ற காரணத்தால் அது அழிக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அதன் காரணமாக அந்தப் பகுதி மக்கள் சுடுகாடு இல்லாமல் பிணங்களைப் புதைப்பதற்கு ஈம கிரியைகளைச் செய்வதற்குக்கூட இட வசதி இல்லாமல் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதற்கு அருகில் இருக்கிற காலியிடத்தை மாநகராட்சியே கையகப்படுத்தி உடனடியாக அந்தப் பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

## மருந்துகளால் வளரும் கொசுக்கள்

அதைப்போலவே சென்னை நகரில் இன்றைக்குக் குடிசைகள் மிகப் பெரிய அளவில் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய் மற்றும் அடையாறு ஆறு ஆகிய பகுதிகளில் உள்ள சுற்றுப்புறங்களும் கரையோரங்களும் அசுத்தமான முறையில் இருப்பதால் அங்கே உற்பத்தியாகிற கொசுக்கள் தற்போது அடிக்கப்படுகிற மருந்துகளுக்கும் கட்டுப்படாமல் மிகப் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கின்றன. எனவே, கொசுக்களின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் தடுப்பதற்கான முறையில் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



## கரையோரக் குடிசைகளும் அறநிலையத்துறைத் துணை ஆணையரும்

இறுதியாக, குடிசை மாற்று வாரியம் தொடர்பான ஒன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தற்போது அடையாறு ஆற்றின் கரையோரமாக உள்ள குடிசைகளை எல்லாம் வெள்ள அபாயத்தில் இருந்து காப்பாற்ற அப்புறப்படுத்தி அவர்களையெல்லாம் மேடான பகுதியில் குடியமர்த்த வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அறிவித் தார்கள். அதன் அடிப்படையில் குடிசை மாற்று வாரியமும், அறநிலையத் துறைக்குச் சொந்தமான சில இடங்களை எடுத்து அந்த இடத்தில் குடிசைகளை அப்புறப்படுத்தும் பணிகளைச் செய்து வந்தார்கள்.

முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், குடிசை மாற்றுவாரியம் தலைவரும் அறநிலையத் துறை ஆணையர் அவர்களும் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளும் கலந்து பேசி அதன் அடிப்படையில் அறநிலையத் துறையின் இடத்தைக் குடிசை மாற்று வாரியம் ஏற்று கட்டிடம் கட்டிக் கொடுக்க ஒப்புக் கொண்ட பிறகு அது வெள்ள நிவாரணப் பணிப் பகுதியாக இருப்பதால் அந்தப் பணியை விரைந்து செய்ய வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளப் பட்டது.

அந்த வகையில் அந்த இடத்தில் வேலை நடந்து கொண்டிருக்கும் போது அற நிலையத்துறையின் துணை ஆணையர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அதற்கு ஒரு தடை ஆணையை வாங்கி யிருக்கிறார்கள். இதன் காரணமாக வேலை தடைப்பட்டு நிறுத்தப் பட்டிருக்கிறது. இதனால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். எனவே அறநிலையத் துறையின் துணை ஆணையர் தடை ஆணை வாங்கியிருப்பதை ரத்து செய்து குடிசை மாற்று வாரியம்

அந்தத் திட்டத்தைச் செயல்முறைப்படுத்த நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, அற்புதமான வகையில் நல்ல சமுதாய நோக்கத்தோடு கொண்டு வந்திருக்கிற இந்த ஆளுநர் அவர்களின் உரையைப் பாராட்டி (குறுக்கீடு) நீங்கள் என்றைக்கும் ஆளுநர் உரையைப் பாராட்டியதும் இல்லை. இந்த அரசை வாழ்த்தியதும் இல்லை என்றாலும், வாழ்த்துகிறவர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி அவர்களுடைய வாழ்த்துக்களோடு இந்த அரசு பீடு நடைபோடும் என்று சொல்லி என்னுடைய நன்றியைச் சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.



# கவன ஈர்ப்பு

## சி.ஐ.டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்குதல்!★

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! ''சைதை 140-வது வட்டம் சி.ஐ.டி. நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் ஒரு பகுதியினருக்குப் பட்டா வழங்கப்பட்டும், மீதிப் பகுதியினருக்குப் பட்டா வழங்கப்படாமலிருப்பதும்'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

உலக வங்கித் திட்டம் பாகம் 2-ன் கீழ் சைதை 140-வது வட்டம் சி.ஐ.டி. நகர் குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டப் பகுதியில் 249 மனைகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அங்கீகாரம் அளித்துள்ளது.

★ 1987 மார்ச் 5

அங்கீகாரத்தின்படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்படி பகுதியில் தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயாரித்து குடிசை மாற்று வாரியத்திற்கு மனைகள் ஒதுக்கீடு வழங்க அனுப்பியுள்ளார். 249 மனைகளில் குத்தகை மற்றும் விற்பனை உடன்பாட்டுத் திட்டத்தின்படி மனைகள் வழங்கத் தகுதி பெற்றவர்கள் 211 நபர்கள் ஆவர். இவர்களில் முன்பணம் கட்டி குத்தகை மற்றும் விற்பனை உடன்பாடு செய்து கொண்ட 123 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நபர்கள் முன்பணம் கட்டாத காரணத்தால் இன்னமும் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

இவை போக, மேற்படி பகுதியில் 30-6-84-க்கு முன்பிருந்தே வசித்து வந்ததற்குக் குடியிருப்புதாரர்கள் ஆதாரங்கள் காட்டாத காரணத்தால் 26 நபர்களுக்குத் தகுதி வாய்ந்தோர் பட்டியல் மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட வில்லை. இப்பகுதியில் பொது உபயோகத்திற்கு 2 மனைகளும், பொதுக் கிணற்றுக்கு 2 மனைகளும், சத்துணவுக் கூடத்திற்கு 1 மனையும் வழங்கப்பட்டுள்ளது. 7 நபர்களுக்கு அவர்களுக்குள்ளே தகராறு என்ற காரணத்தால் தகுதி வாய்ந்தோர் பட்டியல் இன்னமும் மாவட்ட ஆட்சியரால் தயாரித்து வாரியத்திற்கு அனுப்பப்படவில்லை.

எனவே, மீதமுள்ள நபர்கள் முன்பணம் கட்டி தக்க ஆதாரங்கள் கொடுத்த பின்னர் மாவட்ட ஆட்சியரால் தகுதி வாய்ந்தோர் பட்டியல் தயார் செய்யப்பட்டு, குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல 211 நபர்களில் 123 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டு, மீதி நபர்கள் முன்பணம் கட்டாத காரணத்தால் ஒதுக்கீடு செய்யப்பட வில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தத் தகவல்களை உரிய நபர்களுக்குத் தெரியப்படுத்தாத காரணத்தால் அவர்கள் எங்களுக்குப் பட்டா கொடுக்கவில்லை என்று குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விவர அறிக்கையில் இருக்கின்ற குறிப்பினைச் சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் தெரியப்படுத்தினால்,



அவர்கள் அதற்கேற்றாற்போல் நடவடிக்கை மேற்கொண்டு பட்டா பெற வாய்ப்பாக இருக்கும். எனவே, அமைச்சரவர்கள் அதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே! வீட்டு மனை கிடைக்கப் பெறாதோர் குடிசை மாற்று வாரியத்துடன் தொடர்பு கொண்டால் அவர்கள் முன்பணம் ஏறக்குறைய ரூ.89 கட்ட வேண்டும் என்ற விவரம் அவர்களுக்குச் சொல்லப்படும். தனியாக அவர்களுக்கு அனுப்ப முடியுமா என்பதைக் குடிசை மாற்று வாரியத்தோடு கலந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** துணைத் தலைவர் அவர்களே! இதே நகரில் அடுத்த பகுதி, சி.ஐ.டி. நகர் கால்வாய் அருகே அமைந்திருக்கின்ற 141-வது வட்டம் லூப் தெருவில் உள்ள 22 குடியிருப்புதாரர்களுக்கு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குக் குடிசை மாற்று வாரியம் பரிந்துரை செய்தும், அந்த இடம் கால்வாய்க்கு அருகில் இருக்கிறது என்று பட்டா வழங்க M.M.D.A. அதிகாரிகள் மறுக்கிறார்கள். எனவே, ஒரு பகுதியான சி.ஐ.டி. நகர் பகுதிக்கு வழங்கியதற்குப் பிறகு மற்றொரு பகுதியான லூப் தெருவிற்கு அந்தத் திட்டம் பொருந்துகின்ற அடிப்படையில், அந்த 22 குடியிருப்புதாரர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே! இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.



# வினாக்கள் – விடைகள்

## நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் புதிய அனல் மின் நிலையம் அமைத்தல்*

(வினா எண். 12152) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் புதிதாக அனல்மின் நிலையம் அமைக்க மைய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம், எனில் பணி எப்போது துவக்கப்படும்?

(இ) இதன் மூலம் எவ்வளவு மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்கும்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இன்னும் அரசு அனுமதி வழங்கவில்லை. (ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணுமின் நிலையம் அமைக்கக் கூடங்குளம் பொருத்தமான இடம் தான் என்பதை அரசு முடிவு செய்துவிட்டதா? அந்தப்

* 1987 மார்ச் 6



பகுதியில் பல ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறதே அந்த நிலத்தின் மொத்த பரப்பளவு எவ்வளவு? அதற்கு நிர்ணயித்த தொகை எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சைட் செலக்ட் கமிட்டி என்று மைய அரசின் அணுசக்தி இலாக்கா நியமித்த அந்தக் குழுவும் 1976-லும், 1981-லும் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிபுணர் குழுவும், கூடங்குளம் பொருத்தமான இடம்தான் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறது. ஆனால், இன்னும் மைய அரசு அதைப்பற்றி இறுதி முடிவை எடுத்து அறிவிக்க வில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்ற கொள்கை முடிவை அரசு அறிவித்தது. அதன்படி தனியார்கள் யாராவது மின்சாரம் உற்பத்தி செய்ய முன்வந்திருக்கிறார்களா? அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா? வடசென்னையில் அனல் மின் நிலையத்திற்கு 150 இலட்சம் டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணி எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மின்சாரம் நிலக்கரி அடிப்படையில் உற்பத்தி செய்வதற்கு 4 ஆண்டுகள் ஆகும் என்கிறார்கள். அணு அடிப்படையில் உற்பத்தி செய்தால் 8, 10, 12 ஆண்டுகள் ஆகுமென்று சொல்லு கிறார்கள். நீரின் அடிப்படையில் அனல் மின் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், 6, 7 வருடங்கள் ஆகுமென்று சொல்லுகிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு தேவையான நீரை இரைக்க, பம்புகளுக்கு இணைப்பு கொடுக்க நமக்கு மின்சாரம் தேவைப்படுகிறபோது, விரைவில் பெட்ரோலியம் சம்பந்தமான திரவ எரிபொருள்கள் அல்லது உயர் சக்தியுள்ள நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதி கொடுத்தால் நிச்சயம் உற்பத்தி செய்யலாம். தனியார்கள், மத்திய, மாநில அரசுகளிடமிருந்து பணத்தை

எதிர்பார்க்காமல், 110, 210, 500, 675 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையங்களைத் தமிழகத்தில் அமைக்கத் தயாராக இருக் கிறார்கள். நிலக்கரி உற்பத்தியாகும் வட புலங்களிலிருந்து தமிழ் நாடு வெகு தூரத்தில் இருப்பதால், இதை ஒரு விசேஷ காரணமாகக் கருதி, நிலக்கரியை இறக்குமதி செய்யவும், பெட்ரோலியம் திரவப் பொருள்களை - சி.எச்., எல்.எஸ்.எச். கொடுக்கவும் முன்வர வேண்டும். பலர் ஏற்கெனவே மனு போட்டிருக்கிறார்கள்.

## தீயினால் பாதிக்கப்பட்ட மூர் அங்காடி*

(வினா எண். 5787) திரு. செ. செம்மலை மற்றும் **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) எட்டாவது நிதி கமிஷனின் பரிந்துரைகளின் அடிப் படையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட ''மூர் அங்காடி'' யின் சேதத்தை ஈடுசெய்ய மத்திய அரசு உதவி அளிக்க முன்வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) இயற்கை இடர்களின் போது மத்திய அரசு, நிவாரணங்களுக்காக நிதியுதவி அளித்து வருகிறது. மத்திய அரசின் எட்டாவது நிதி கமிஷனின் பரிந்துரை களின்படி, தீ விபத்தில் ஏற்படும் இடருக்காக மத்திய அரசு நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது. எட்டாவது நிதிக் குழு பரிந்துரைத்தபடி இக்கொள்கையும், ஏற்பாடுகளும் 1-4-1985 முதல் அமலில் வரும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மூர் மார்க்கெட் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் கடைகள் ஒதுக்கிட சென்னை மாநகராட்சியின் அருகில் உள்ள அல்லிக்குளத்தில் முதல் கட்டமாக

* 1987 மார்ச் 11



இரண்டு அடுக்குக் கட்டடம் கட்டப்பட உள்ளது. இதற்குரிய செலவு 1 கோடியே 62 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் 1 கோடி ரூபாயினை நிதியுதவியாக அளிக்குமாறு மத்திய அரசிடம் கோரப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட இவ்வரசின் கோரிக்கையினை மத்திய அரசு ஏற்று, இம்மாநில அரசு ''714. சமுதாய வளர்ச்சிக் கடன்'' என்ற தலைப்பின்கீழ் செலவிட்டுக் கொள்ளவும் பின்பு அதை இம்மாநில அரசின் மார்ஜின் தொகை (Margin Money)யில் சரிக்கட்டிக் கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மூர் அங்காடிக் கடைகளின் எண்ணிக்கை எவ்வளவு? கட்டிக் கொடுக்கிற கடைகளில் எல்லாக் கடைக்காரர்களுக்கும் இந்த இட ஒதுக்கீடு செய்யப்படுமா? பாதிக்கப் பட்டவர்களுக்கு வழங்கப்பெற்ற நிவாரணம் எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கணக்கிடப்பட்ட வகையில் பாதிக்கப் பட்ட கடைகள் 857- கடை உரிமையாளர்கள். அந்த 857 கடை களுக்கும் உடனடியாக நிவாரண நிதி அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சென்று பார்த்தவுடனே ஒவ்வொரு கடைக்கும் ரூ. 2,000 வழங்கலாம் என்று குறிப் பிட்டார்கள். இந்த வகையிலே 290 கடைக்காரர்கள் உள்ளபடியே உள்ளே கடை வைத்திருப்பவர்கள். 323 கடைக்காரர்கள் ஆக்கிரமிப்பாளர்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் சேர்த்து ரூ. 17.14 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது.

பிறகு, மூர் மார்க்கெட்டில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க, பாரதப் பிரதமரால் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த 10 இலட்சம் ரூபாயும் எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஒவ்வொருவருக்கும் 1,631 ரூபாய் 30 காசு வருகிறது. அந்த அளவுக்கு எல்லோருக்கும் பிரித்துத் தரப்பட்டிருக்கிறது.

## இரவு நேர லாரி போக்குவரத்து*

**திரு. சைதை. சா. துரைசாமி:** தலைவர் அவர்களே! போக்கு வரத்து விதிகளை வாகனங்கள் சரியான முறையில் நடைமுறைப் படுத்தாத காரணத்தினால் விபத்துக்கள் அதிகம் நடைபெறுகின்றன. அதிலும் குறிப்பாக விளக்கு பகுதியில் பாதி கருப்பு பெயிண்ட் அடிக்க வேண்டும் என்ற விதியை முறையாகக் கட்டுப்பாட்டுடன் வாகனங்கள் நடைமுறைப்படுத்துவதில்லை. அதனால்தான் அதிகமான விபத் துக்கள் ஏற்படுகின்றன. அந்தச் சாலை விதிகளைக் கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.சு.முத்துசாமி:** தலைவர் அவர்களே! நான் ஆரம்பத்திலே சொன்னேன். அதற்காகத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கின்ற அந்தக் கமிட்டியிலே முடிவு எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கூட வாகனம் ஓட்டக்கூடியவர்கள் அல்லது வாகன சொந்தக்காரர்களுக்கு நான் ஓர் எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கையை அதுவும் அவர்களுடைய பாதுகாப்பைக் கருதி எடுக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பணியை நாங்கள் துவங்க இருக்கிறோம். அந்த நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் முழுமையான ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல நேரங்களிலே இந்தச் சட்ட திட்டங்களை அமுலாக்க வேண்டும் என்று சொல்லி மேலும் நடமாடும் நீதிமன்றங்கள் போன்றவையெல்லாம் வைத்து சென்னை மாநகரத்திலே நடவடிக்கை எடுக்கின்றபோது, அந்தந்த இடத்தில் இப்படிப் பிரச்சினைகளை உருவாக்குகின்றீர்களே என்று சட்டமன்றத்திலேயே திருப்பிக் கேட்கின்ற நிலைமை வருகிறது.

*** 1987 மார்ச் 11 அன்று திரு. கே. பாலாஜி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.**





எனவே, சாலை விதிகளை சென்னையாக இருந்தாலும் சரி, வேறு இடமாக இருந்தாலும் சரி, தமிழகம் முழுவதும் மிகக் கடுமையாக அமுலாக்குவதற்கு, மிக வேகமான நடவடிக்கைகளை, 20, 30 நாட்களுக்குள்ளேயே எடுக்க இருக்கிறோம். எனவே அதைத் தாங்கிக் கொள்வதேகூட இந்தத் தவறு செய்யக் கூடியவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும்கூட, அவர்களுடைய நன்மையைக் கருதி நாங்கள் செய்ய இருக்கிறோம் என்பதை இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கேற்றபடி அவர்கள் தங்களை மாற்றிக் கொள்வது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

## சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகள்*

(வினா எண் 5397) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்குக் குடியிருப்பதற்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குக் கீழ்க்கண்ட மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன :

1. செனாய் நகர்ப் பகுதியில் 75 மனை அளவு கொண்ட பரப்பு.
2. தாம்பரம் அருகில் மாடம்பாக்கம் கிராமத்தில் தொழுநோய் மருத்துவமனை அமைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 30.25 ஏக்கர் பரப்புடைய இடம்.
3. பல்லாவரம் அருகில் உள்ள பம்மல் கிராமத்தில் தங்கும் விடுதிகள் கட்டப்படுவதற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 6.44 ஏக்கர் பரப்புடைய இடம்.

* 1987 மார்ச் 11

சௌாய் நகர்ப் பகுதியில் உள்ள மனையில், அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதர இரண்டு இடங்களும் அன்பளிப்பாகப் பெற்றவை யாகையால் அவற்றில் மாநகராட்சி அலுவலர்களுக்கு வீடுகள் கட்டுவதில் சட்டப் பிரச்சினைகள் உள்ளன. எனவே, தக்க சட்ட ஆலோசனைகள் பெறுதல், கட்டடம் கட்டச் செயல் வடிவங்கள் தீட்டுவது, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் அனுமதி பெறுவது, அரசின் ஒப்புதல் பெறுவது மற்றும் தேவையான நிதி உதவி பெறுவது முதலிய நடவடிக்கைகளும் தற்போது சென்னை மாநகராட்சியால் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு.சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த மாநகராட்சி கட்டுகின்ற குடியிருப்புகளில் எந்தெந்தப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தத் திட்டப்பணி நடப்பு நிதியாண்டில் துவங்கப்படுமா என்பதையும், அதற்கெனத் திட்டமிடப்பட்டுள்ள தொகை என்ன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா?

**மாண்புமிகு திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கொள்கை ரீதியில் அவர்களுக்கு வீடு கட்ட அரசு முடிவு எடுத்து அந்தக் காரியங்களைச் செய்கிறது. மற்றவை எல்லாம் தொடர்ந்து செய்யப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் வீடுகளைக் கட்டும்போது அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாநகராட்சியால் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு முறையீடு செய்யப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.ஏ.கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அதுபற்றி என்னிடத்திலே இப்போது தகவல் இல்லை.



## சென்னை மாநகராட்சி வரைபட அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள வீடுகளின்மீது நடவடிக்கை*

(வினா எண் 3746) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1977 முதல் 1985 மே முடிய சென்னை மாநகர் அனைத்து வட்டங்களிலும், மாநகராட்சி வரைபடம் அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள வீடுகளின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதிமன்றங்களில் அபராதம் செலுத்தியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஒரு முறை அபராதம் செலுத்தியவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) தொடர்ந்து ஆறு மாதங்களுக்கொரு முறை அபராதம் செலுத்தியவர்கள் எத்தனை பேர்?

**விடை :** (அ) 28,627; (அ) 26,569; (இ) 20,931

* 1987 மார்ச் 11



# கவன ஈர்ப்பு

## சென்னையில் அரிசி விலை ஏற்றம்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘சென்னை நகரில் வெளிச் சந்தையில் அரிசி விலை ஏற்றத்தினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிறைய பெருந்தன்மையோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்-மிகுந்த பெருந்தன்மையோடு - சொன்னதால் நேற்று எல்லாவற்றையும் நீக்கிவிட்டேன். அவருடைய பெருந்தன்மைக்காகத்தான் நீக்கினேன். நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எவ்வளவோ விமர்சனம் செய்த பிறகும் அவர் பெருந்தன்மையோடு அதையெல்லாம் நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதனால்தான் நீக்கினேன். அந்தப் பெருந்தன்மையைப் பாராட்டக் கூடாதா? (குறுக்கீடு) நேற்றே எல்லாம் போய்விட்டது. நாடு தெரிந்து கொண்டது. (குறுக்கீடு) அதுவும் போய்விட்டது. வேண்டு

* 1987 மார்ச் 11



மானால் மீண்டும் ஒரு நாள் விவாதத்தை வைத்துக் கொள்ளலாம். முடிவு எடுங்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

சென்னை நகரில் வெளி அங்காடியில் புழுங்கலரிசி சாதாரண ரகம் (Common) சில்லறையில் கிலோ 3.70-லிருந்து ரூ. 3.80-லிருந்து ரூ. 3.85 வரையிலும் விற்கப்பட்டு வந்தது. தமிழகத்தில் தற்போதைய சராசரி சாதாரண ரக புழுங்கலரிசியின் சில்லறை விலை ரூ. 3.68 ஆகவும், சன்னரக புழுங்கலரிசியின் சில்லறை விலை ரூ. 4.06ஆகவும் நிலவி வருகிறது. இவற்றின் விலை சென்ற ஆண்டு இதே காலத்தில் முறையே ரூ. 3.47 ஆகவும், ரூ. 3.87 ஆகவும் இருந்தது. இந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் சராசரி விலை உயர்வு புழுங்கலரிசி சன்னரகத்திற்கு ரூ. 4.9 விழுக்காடும், புழுங்கலரிசி சாதாரண ரகத்திற்கு 6.1 விழுக்காடும், அதிகரித்துள்ளது. சென்னையில் இந்த ஓராண்டுக் காலத்தில் புழுங்கலரிசி சாதாரண ரகத்திற்கு 7.0 விழுக்காடும், புழுங்கலரிசி சன்ன ரகத்திற்கு 9.1 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி திங்கள் இரண்டாவது வாரத்தில் இருந்து ஆந்திரபிரதேச அரசு வெளிமாநிலங்களுக்கு அரிசி எடுத்து செல்வதற்கான அனுமதி வழங்கவில்லை. இதன் காரணமாக ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்கு அரிசி வருவது மிகவும் குறைந்துவிட்டது. மேலும் பணவீக்கத்தின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு விலைவாசி உயர்வது இயல்பான நிகழ்ச்சியாகும். 1986 சனவரியில் மொத்த விலைக்குறியீட்டு எண் (அனைத்துப் பொருட்கள் - All commodities) இந்திய அளவில் 358-லிருந்து 1986 அக்டோபரில் 385 ஆக, 7.5 விழுக்காடு உயர்ந்துள்ளது. இந்நிலையில் மற்ற பொருட்களின் விலை உயர்வுடன், ஒப்பிடும்போது, சாதாரண ரக அரிசியின் விலை உயர்வு அதிகமில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு, குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவர்

திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களைப் பாதுகாப்பதற்காக, நியாய விலைக் கடைகளில் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தி- பாதி விலைக்கு- பல கோடி மக்களுக்கும் விநியோகம் செய்து கொண்டிருக் கிறார். ஆனால், வெளிச்சந்தையில் உள்ள வியாபாரிகள் இந்த அரசுக்குக் களங்கம் ஏற்படுத்துகிற வகையில் அதிகமான கொள்ளை லாபம் சம்பாதிக்கும் வகையில் அதிக விலைக்கு அரிசியை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என் அனுமதியில்லாமல் எழுந்து நிற்பது முறையல்ல. ★ அது நேற்றே முடிந்துவிட்டது. நேற்று பேசியது முழுவதும் நேற்றே முடிந்துவிட்டது, நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட ஒரு பொருளைக் குறித்து விவாதம் எழுப்புவது என்பது முறையல்ல. அவைக் குறிப்பில் இருக்கிற ஒன்றை எடுத்து அதைக் குறித்து விளக்க வேண்டுமென்றால் அது நியாயம். அவைக் குறிப்பிலேயே இல்லாத, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட விஷயங்களைக் குறித்து மறுபடியும் கிளப்புவது நியாயமாகாது. (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.★ (குறுக்கீடு).

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, எனவே வெளிச்சந்தையில் விலையை அதிகமாக ஏற்றி, கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)★.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது நாட்டுப் பிரச்சினை, உங்கள் பிரச்சினை அல்ல. மீண்டும் என்னைப் பேச வைத்து விடாதீர்கள். மீண்டும் சர்வ கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எது நியாயம் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்தவரையில்... (குறுக்கீடு).

★ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினமே★ பற்றி சொன்ன கருத்துக் களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. அதைப்பற்றி இங்கே மீண்டும் கிளப்புவதற்கு உரிமையில்லை. (குறுக்கீடு) அவைக் குறிப்பில் இல்லாத ஒன்றை, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு விட்ட ஒன்றைப்பற்றி இங்கே விளக்கம் கேட்க முடியாது. அவரைப் பற்றி குறிப்பிட்ட பகுதியும் நீக்கப்பட்டுவிட்டது. மறுபடியும் கிளப்பக் கூடாது. அது நீக்கப்பட்டுவிட்டது. அதுதான் மரபு. (குறுக்கீடு)★

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் மீண்டும் வேண்டுமானால்-சர்வ கட்சித் தலைவர்களைக் கேட்கிறேன். வேண்டுமானால் பார்க்கலாம். இதையெல்லாம் பற்றி என்னுடைய அறைக்கு வந்து பாருங்கள். இது தேவையில்லை. இதையெல்லாம் நீக்கிவிடுகிறேன். அவைக் குறிப்பில் இது தேவையில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில் கடந்த பல ஆண்டுகளாக கிலோ அரிசி ரூ. 1.75 என்கின்ற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு... (குறுக்கீடு) வெளிச்சந்தையைப் பொறுத்தவரையில் வியாபாரிகள் விலையில் தலையிடுவது என்பது இயலாத காரியம். ஆனால், பொது விநியோக முறையின் மூலமாக எந்த அளவிற்கு மக்களுக்குத் தேவையோ அந்த அளவிற்கு அரிசி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலிருந்து அரிசி கொண்டு வருவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, ஆந்திர மாநில அரசோடு பேசி இங்கே அரிசி கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான அளவிற்கு அரிசி நம்மிடத்திலே இருக்கிறது. தேவைப்படுமானால் ஆந்திர அரசோடு பேசி ஆவன செய்வதறகு நமது அரசு தயாராக இருக்கிறது.

★ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



# வினாக்கள் – விடைகள்

## சிறப்பு நீதிபதிகள் அமர்த்தல்!*

(வினா எண் 8697) **திரு. சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

விசாரிக்கப்படாத பல வழக்குகளை விரைவில் விசாரித்து, தீர்ப்பு வழங்க 'சிறப்பு நீதிபதிகள்' அமர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இல்லை.

**திரு.சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நீதிமன்றங்களில் எத்தனை வழக்குகள் இன்னும் தீர்ப்பு வழங்கப்படாமலும், விசாரிக்கப்படாமலும் இருக்கின்றன? அப்படி இருக்கின்ற வழக்குகளை விரைந்து எடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? நீதிமன்றங்களில் எல்லா வழக்குகளுக்கும் தடையாணை வாங்கி விடுகிறார்கள். உதாரணமாக, அரசே ஒரு காரியத்தை நடைமுறைப்படுத்தும் போதும் சரி அல்லது மாநகராட்சி ஒரு காரியத்தை நடைமுறைப்படுத்தும் போதும் சரி அல்லது தனியார் வீட்டைக் காலி செய்கின்ற நேரத்திலேயும் சரி தடையாணைகளை வாங்கி வந்து விடுகிறார்கள். இதனால் மிகப் பெரிய பாதிப்பு

★ 1987 மார்ச் 24



ஏற்படுகிறது. அதுபோன்ற நிலையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையாக இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அதில் முதற்கண் வழக்குரைஞர்கள் அடிக்கடி வாய்தா வாங்குவதும் ஒரு பிரத்தியேகக் காரணமாக அமைந்து விடுகின்றது. நீதிமன்றங்கள் போதாமையும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது. அவற்றை எல்லாம் பரிசீலித்துத் தக்க நடவடிக்கை எடுக்க, கடந்த காலத்தில் இல்லாத அளவுக்கு 1977-ல் இந்த ஆட்சி பொறுப்புக்கு வருவதற்கு முன்பு 108 நீதி மன்றங்கள் என்ற நிலையிலிருந்து, தற்போது கூடுதலாக 162 நீதிமன்றங்கள் பல்வேறு பகுதிகளில் துவக்கப்பட்டு, அதற்கு நீதிபதி களை நியமித்து, அதன் காரணமாக வழக்குகளின் நிலுவையைக் குறைக்க அரசு தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இதற்கு முன்னால் வழக்குகள் நிலுவையில் இருந்து வந்ததற்குக் காரணம் போதிய அரசு வழக்குரைஞர்கள் இல்லையென்ற குறையும் இருந்து வந்தது. அந்தக் குறையையும் போக்குவதற்காக, சிவில், கிரிமினல் ஆகிய பல்வேறு துறைகளிலும் 295 புதிய வழக்குரைஞர் பல்வேறு மட்டங்களில் நியமிக்கப்பட்டு அதன் மூலமாகவும் வழக்குகளுடைய நிலுவையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒவ்வொரு நீதிபதியும் ஒவ்வொரு நீதி மன்றத்திலும் இவ்வளவு வழக்குகளை மாதாமாதம் முடிக்க வேண்டுமென்று ஒரு டார்கெட் பிக்ஸ் செய்து, உயர்நீதிமன்றம் நீதிபதிகளுக்குத் தக்க ஆணை பிறப்பித்து, நிலுவையைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இருப்பினும் இது பிரச்சினையாகத் தொடர்ந்து இருந்து வருகிற காரணத்தால் இன்னும் அதிகமான நீதிமன்றங்களை உருவாக்குவதுதான் இதற்குப் பரிகாரம் என்ற முறையில் அதையும் அரசும், நீதிமன்றமும் கலந்து பரிசீலித்து வருகின்றன.

**திரு.சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கூடுதலாகப் புதிதாக நீதிமன்றங்கள் அமைக்கப்படும்

என்று சொன்னார்கள். அப்படி எத்தனை நீதிமன்றங்கள் அமைக்க இருக்கிறோம் என்ற விவரத்தையும் ஒவ்வொரு வழக்கிலும் தடை ஆணை வாங்குவதற்கு, வாங்கிய தடை ஆணையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடிப்பதற்கு ஏற்ற வகையில், சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! 162 புதிய நீதிமன்றங்களை நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கிற வழக்குகளைக் குறைக்கவும், மக்களுக்கு உதவிகரமாகவும் இருக்க அரசு ஏற்கெனவே துவக்கியிருப்பதை நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். தடையாணையைப் பொறுத்த வரைக்கும் இதிலே ஒரு பிரச்சினை Discreetionary power a vested under law with the Judiciary அந்த நிலையிலே அவர்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள்.

பொதுமக்களின் பிரச்சினை, குறிப்பாக அணை கட்டுதல், அதுபோன்று ஏழைகளுக்காக நிலத்தை ஆர்ஜிதம் செய்வது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தருகின்ற அளவில், இது போன்ற வழக்குகளில் கூட நீதிமன்றம் அவ்வப்போது தடை ஆணை விதித்து, அந்தத் தடையாணையைப் போக்குவதற்காக, நீக்குவதற்காக அரசு முயல்கிறபொழுது, The stay is being made absolute என்ற முறையிலிருந்து, நீதிமன்றத்திற்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன் படுத்தி அவர்கள் செய்கின்ற காரணத்தால், பொதுமக்களுக்கு இன்னலும் இடர்ப்பாடும் ஏற்படுகிறது.

இதை உயர் நீதிமன்றத்திற்கு அரசு பலமுறை தெரிவித்து இருக்கிறது. அகில இந்திய அளவிலே நீதிபதிகள் மாநாட்டிலும்கூட இந்த முறை மாற வேண்டும், பொதுமக்களின் நலன் கருதி எடுக்கப் படும் நடவடிக்கைகளுக்கு அரசுக்கு நோட்டீஸ் கொடுக்காமல் நீதிபதிகள் தடை ஆணை வழங்குவது முறை அல்ல; அதற்கு நீதிமன்றங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்திலேயே திருத்தம் கொண்டு வந்தாலொழிய இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத நிலைமை இருக்கிறது. நீதிமன்றங்கள் மத்தியிலே மக்களின் நலன் கருதி, மனமாற்றம்



ஏற்படுகின்றபொழுது, இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமூக முடிவு ஏற்படும் என்று அரசு நினைக்கிறது.

## மொபெட், டி.வி.எஸ். 50 வாகனங்களுக்கு ஹெல்மெட் விதிவிலக்கு★

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு சக்கர வாகனங்களில், லைட் வெய்க்கில்ஸ்களான மொபெட், டி.வி.எஸ். 50 போன்ற, சாதாரண சைக்கிள்களைப் போன்ற வாகனங்கள், அதாவது அதிகமான வேகம் இல்லாமல், குறைந்த வேகத்தில் செல்லுகின்ற அந்த வாகனங்களுக்கு மாத்திரம் ஹெல்மெட்டை அணிவதிலிருந்து விதிவிலக்கு வழங்கினால் சரியாக இருக்கும். எனவே அந்த முறையில் அவைகளுக்கு விதிவிலக்கு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இதுபற்றி விவாதிக்கப்பட்டது. நான் பார்த்திருக்கிறேன். லூனாவைப் பற்றியும் எனக்குத் தெரியும். இந்த வண்டியிலே போகிறபோது அதிலே போகிற ஸ்பீட் ஸ்கூட்டரிலோ மோட்டார் சைக்கிளிலோ போகிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நகரத் திற்குள்ளே, அதிலும் சிட்டிக்குள்ளே எவ்வளவு வேகமாகப் போகிறார்கள் என்பதை, அதிலும் அந்த வண்டியை ஓட்டக்கூடியவர்கள் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள்; அதன் காரணத்தால் அவர்கள்-ஆரம்பத்தில் அப்படித்தான் இருக்கும் - பாதுகாப்பாகச் செல்லவேண்டுமென்பதுதான் நோக்கமே தவிர, அரசாங்கத்திற்கு மக்களுக்கு தொந்திரவு கொடுக்க வேண்டுமென்பது நோக்கம் அல்ல.

திரு. சுப்பராயன் அவர்கள்கூட அதற்கு விதிவிலக்கு கொடுத்து விட்டால் பரவாயில்லை என்று கருதுகிறார்கள். அவர் மொபெட் வைத்திருக்கிறார் என்று கருதுகிறேன். மொபெட் வாங்கும்போது ஒரு ஹெல்மெட்டையும் வாங்கிக் கொண்டால் நன்றாக இருக்கும் என்று நான் அவர்களுக்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

---

★ 1987 மார்ச் 25 அன்று திரு. மா. மணிமாறன் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



# கவன ஈர்ப்பு

## சைதாப்பேட்டை மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் இன்மை*

**மா**ண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ‘‘சைதாப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு. இருதய பரிசோதனைப் பிரிவு துவங்க கருவிகள் மற்றும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டும் போதிய பணியாளர்கள் நியமனம் செய்யாத காரணத்தினால் அப்பகுதிவாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

14-2-1983-ல் சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தினரால் வழங்கப்படும் நிதியைக் கொண்டு, சைதாப்பேட்டை அரசு மருத்துவ மனையில் ஒரு எக்ஸ்ரே பிரிவு துவங்குவதற்குத் தேவையான

* 1987 மார்ச் 26



கருவிகள் வழங்குவதற்கு அரசு அனுமதி அளித்தது. அவ்வாறே அச்சங்கத்தினரால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு எக்ஸ்ரே பிரிவிற்கான தேவையான கருவிகள் வாங்கப்பட்டன. எனவே, இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதயப் பரிசோதனைப் பிரிவு மற்றும் பரிசோதனைப் பிரிவு ஆகியவைகள் செயல்படுவதற்குத் தேவையான கீழ்க்கண்ட பணியிடங்களைத் தோற்றுவித்து சமீபத்தில் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது:-

1. கதிர் வீச்சாளர் - ஒன்று.
2. இருட்டறை உதவியாளர் - ஒன்று.
3. இ.சி.ஜி. நுட்பனர் - ஒன்று.
4. பரிசோதனைக்கூட நுட்பனர், தகுதி II-ஒன்று.
5. அலுவலக உதவியாளர் - ஒன்று.

எனவே சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு, இருதய பரிசோதனைப் பிரிவு மற்றும் பரிசோதனைப் பிரிவு ஆகியவைகள் விரைவில் செயல்படத் தொடங்கும். எனவே இது குறித்துப் பொதுமக்களிடையே எந்தவித அவல நிலையும் இருக்கத் தேவையில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் நியமிக்கப்பட்ட குறிப்பினைப் பார்த்தேன், நன்றி. அதிலே பரிசோதனைக் கூடத்திற்கு 3 பணியாளர்கள் தேவை என்று எழுதியிருக்கின்றார்கள். ஆனால், ஒரே ஒரு பணியாளர் நியமித்து இப்போது உத்தரவு வழங்கப்பட்டிருக்கின்றது. மேற் கொண்டு 2 பணியாளர்கள் நியமிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

இந்த மருத்துவமனை, தென் சென்னை பகுதியிலே அதிகமான நோயாளிகள் வருகின்ற மருத்துவமனையாகும். எனவே இதை 100 படுக்கைகள் கொண்ட மருத்தவமனையாக விரிவுபடுத்துகின்ற திட்டத்தினைப் பல முறைகள் அறிவித்தும் இன்னும் அந்தப் பணி தொடங்கப்படவில்லை. எனவே அங்கு 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருவிகள் வாங்கப்பட்டு, கட்டடம் கட்டப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்படுவதுபற்றிக் கேட்டிருந்தார்கள். அதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். அங்கு படுக்கைகள் அதிகப்படுத்துவதுபற்றிக் கேட்டிருக்கின்றார்கள். அதற்குத் தனிக் கேள்வி போடும்படி தெரிவித்துக் கொள்கிறேன். பரிசோதகர் 3 பேர்கள் நியமிப்பது பற்றிச் சொல்கின்றார்கள். தற்போது ஒருவர் போடப்பட்டிருக்கின்றார். அங்கே நடக்கின்ற வேலைகளைக் கருத்தில்கொண்டு வேண்டுமென்றால் நியமிக்கிறோம்.



# வினாக்கள் – விடைகள்

## அண்ணா, எம்.ஜி.ஆர். சிந்தனைகளை கல்லூரி பாடமாக்கல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே! சமுதாய விழிப்புணர்ச்சிக்கு நல்ல பல சிந்தனைகளை வழங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும் இன்றைக்கு சமுதாயநல நோக்கத்தோடு, சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற தமிழகத்துடைய நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது சமுதாயநலச் சிந்தனையையும் கல்லூரிப் பாடமாக வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சென்னை பல்கலைக் கழகத்தில் சென்டர் ஃபார் அண்ணா ஸ்டடீஸ் என்ற ஆராய்ச்சி மையம் துவக்கப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 லட்சம் ரூபாய் நிதியினை வழங்கி இருக்கிறார்கள்.

* 1987 மார்ச் 28 அன்று கேட்ட துணைக் கேள்வி

## அடையாற்றை ஆழப்படுத்தும் திட்டம்*

(வினா எண் 7695) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) அடையாறு ஆற்றினை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) பணி விரைவில் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இந்தப் பணி நடைபெற்று வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணியின் வாயிலாக அந்தப் பகுதி மக்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். அடையாறு ஆற்றினை ஆழப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அதிகமாக வெள்ளம் வரும்பொழுது, குறிப்பாக பாரி நகர், சாரதி நகர், விநாயகபுரம், ஆஸ்பத்திரி சாலை, திடீர் நகர், ஆற்றுமா நகர், கோட்டூர்புரம், செட்டித்தோட்டம், கஸ்டம்ஸ் காலனி போன்ற பகுதிகள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப் படுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளிலே ஆற்றை ஆழப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசு வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ. 12 கோடி மதிப்பிட்டு நிதி கேட்டிருந்தோம். ஆனால், அதிலே ரூ. 2 கோடிதான் ஒதுக்கீடு செய்தார்கள். அந்த ரூ. 2

* 1987 மார்ச் 28





கோடிக்கான வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஆற்றினை ஆழப்படுத்தினால் மட்டும் போதாது, நடுவிலேயுள்ள பல பாலங்களை உயர்த்திக் கட்ட வேண்டும். அதற்கு வேண்டிய நிதிகளைப் பெற்று, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு நிவாரணம்*

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தீ விபத்தால் பாதிக்கப்படுகின்ற குடிசைகளுக்காக ஒரு கதவு இலக்கத்தில் 10 குடிசைகள் இருந்தால், வழங்கப்படுகின்ற நிவாரணத் தொகை ரூ.300-ஐப் பங்கிட்டு, ரூ.30 ஆகத் தருகின் றார்கள். ஆகவே, அந்த முறையை மாற்றி, பாதிக்கப்பட்ட குடும்பங் களின் எண்ணிக்கையைக் கொண்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகையை வழங்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சாதகமாக இருக்கும். எனவே, அந்த முறையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா?

அடுத்து, எல்லாக் குடிசைகளையும் இன்ஷூர் செய்ய வேண்டு மென்ற கட்டாய நடவடிக்கையை மேற்கொண்டால் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். அந்த முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப் படுமா?

அடுத்து, திரு.பொ. உத்திராபதி அவர்கள் கேட்டதைப்போல் வங்கிகளின் வாயிலாகக் கடன் உதவி வழங்க வேண்டுமென்று அரசே ஜீ.ஓ.வாகப் போட்டு எல்லா தாசில்தார்கள் அலுவலகங்களிலும் பாதிக்கப்பட்டவர்களின் கணக்கெடுத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும்போது அவர்களது குறிப்புகளை வங்கிகளுக்கு அனுப்பிக் கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே! குடிசைகளைத்தான் கணக்கில் எடுத்துக்

*** 1987 ஏப்ரல் 1 அன்று திரு. பொ. உத்திராபதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.**

கொள்ள முடியுமே தவிர, குடும்பங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வதற்கில்லை. முழுக் குடிசையும் எரிந்து விடுமானால் அதற்கு ரூ.300 தருகிறோம். அதில் ஒரு குடும்பத்திற்குப் பதிலாக, 2 குடும்பங்கள் இருக்கிறோம் என்று சொல்லும் போது, பாதியாகக் கொடுக்கிறோம். அந்தக் குடிசைக்குள்ளேயே 4 குடும்பங்கள் இருக் கின்றன என்று 4 பேர்கள் போட்டி போட்டுக் கொண்டு வரும்போது நான்காகப் பிரித்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று எந்த ஒரு கதவு இலக்கத்திலும் 10 குடிசைகள் இருப்பதாகத் தெரியவில்லை. அது 'எக்ஸாஜரேஷன்'. கற்பனையினுடைய உச்சகட்டத்திற்குப் போயிருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்து, குடிசைகளை இன்ஷூர் செய்ய வேண்டுமென்று சொல் கிறார்கள். குடிசைகளைப் பொறுத்தவரையிலும் இன்ஷூர் செய்வதற்கு எந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியும் முன்வரவே வராது. அப்படியே வந்தால்கூட இன்ஷூரன்ஸ் கட்டணத்தை அம்மக்கள்தான் செலுத்தி வரவேண்டும். அது அவ்வளவு சாத்தியமாக வராது. கல் கட்டிடமாக இருந்தால் இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் இன்ஷூரன்ஸ் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

## தமிழகத்தில் வீடியோத் தியேட்டர்கள்*

(வினா எண் 13489) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழகத்தில் வீடியோ தியேட்டர்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அனுமதிக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு.வி.வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (அ) மற்றும் (ஆ): தமிழ் நாட்டில் வட ஆற்காடு

* 1987 ஏப்ரல் 1



மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒரு வீடியோ தியேட்டர் கட்ட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் எவருக்கும் வீடியோ தியேட்டர் கட்ட உரிமம் வழங்கப்படவில்லை.

**திரு.சைதை சா.துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! வீடியோ தியேட்டர் கட்டுவதற்கு வழங்கப்பட்டிருக்கின்ற அனுமதி எந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது? இதற்கு வரி விதிப்பு உண்டா? இன்றைக்கு மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்றவைகளுக்கு எல்லாம் அதிகமான வருவாயைத் தருவது திரை அரங்குகள்தான். அந்தத் திரையரங்குகள் தருகின்ற வருவாயைப் பாதிக்கின்ற வகையில் வீடியோ தியேட்டர் கட்ட அனுமதி வழங்கப் படுமேயானால் திரை அரங்குகள் மூலம் வரும் அந்த வரிக்கு பாதிப்பு ஏற்படாதா? எனவே அதே வரி விதிப்பு முறையானதா? வீடியோ தியேட்டர்களுக்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே! தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வீடியோ தியேட்டர் களைக் கட்ட வேண்டுமென்று 44 மனுக்கள் வந்திருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்திற்குத்தான் இந்த மனுவிற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அனுமதிக்கப்பட்ட வீடியோ தியேட்டர் சரியான தூரத்தில் இல்லை. அதைப் பார்வையிட்டு சமர்ப்பிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். பொதுவாக தற்போதுள்ள சினிமா திரையரங்குகளிலிருந்து தான் அரசுக்கு அதிக வருமானம் வருகிறது. வீடியோ தியேட்டர் அமைப் பதில் பர்மனென்ட் அல்லது செமி பர்மனென்ட் தியேட்டரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. மாவட்டங்களில் கலெக்டர் அவர்களும், மாநகராட்சியில் போலீஸ் கமிஷனர் அவர்களும் உரிமம் வழங்கு வதற்குத் தகுதியுள்ளவர்கள்.

**திரு.சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த வீடியோ தியேட்டருக்கு வரி விதிப்பு உண்டா? அதனுடைய கொள்ளளவு என்ன? எவ்வளவு நபர்கள் அதில் அனுமதிக்கப்படுகிறார்கள்? இன்றைக்கு வீடியோ தியேட்டர்

பெருமளவுக்கு வருமேயானால், திரை அரங்குகள் நசுங்கிவிடும் என்ற அச்சம் உள்ளது. திரைப்படத் தொழிலும் பாதிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. எனவே திரையரங்குகள் பாதிக்கப்படாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படுமா? வீடியோ கேசட் திருடுவதைத் தடுக்க, புதியதாகத் திரைப்படங்கள் திரையிடும்போது அந்தத் திரைப்படத்தினுடைய அனுமதி பெற்ற கேசட் 4 வாரம் அல்லது 5 வாரம் கழித்து வெளியே வர வேண்டும் என்ற முறையில் சட்டதிருத்தம் செய்யப்படுமா?

அதை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படுகின்ற வகையில், இப்போது குண்டாஸ் ஆக்ட் இருக்கிறதே, அதே போன்று கடுமையான நடவடிக்கை எடுத்தால், திரைப்படத் தொழில் நசுங்காமலும், திரை அரங்குகள் பாதிக்கப்படாமலும், மாநகராட்சி, நகராட்சி போன்றவைகளுடைய வருமானம் குறையாமலும் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே! இந்தியாவிலேயே தமிழக முதல்வர்தான் வழிகாட்டும் வகையில் தமிழ்நாடு சட்டம் 7/84 என்ற வீடியோ சம்பந்தமான கட்டுப்பாடு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பிரபல நடிகர் ராஜ்கபூர் அவர்கள், இது வழிகாட்டும் சட்டமாக இருக்கிறது, இந்திய அரசில் பல்வேறு மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் தண்டனைபற்றிய செக்‌ஷன் 10-ன் கீழ் இப்போது விதிகளை மீறுவோர் 3 மாதம் அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும் என்பதை 3 மாதம் தண்டனையும் , ஆயிரம் ரூபாய் அபராதமும் அல்லது தேவையானால் தண்டனை 3 மாதத்திலிருந்து 6 மாதமாக உயர்த்தலாமா என்று அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

அண்மையிலே திரையரங்கு உரிமையாளர்கள் இந்த வீடியோ கேஸட்கள் கள்ளத்தனமாகத் தயாரிக்கப்படுவதையும், விற்கப்படுவதையும் வாடகைக்குக் கொடுக்கப்படுவதையும் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். திரைப்படத் தயாரிப்பாளர்கள் அயல் நாட்டுக்கு உரிமம் வழங்குகின்றபோது தமிழ்நாட்டில் அல்லது இந்தியாவில் திரைப்படங்கள் திரையிடப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பே அவர்கள் அந்தத் திரைப்படங்களைக் கொடுத்து விடுவதால்,



சிங்கப்பூரிலும் கீழ்த்திசையில் அரபு நாடுகளிலும் அவைகள் திருட்டுத்தனமாக வீடியோ கேஸட்களாகத் தயாரிக்கப்பட்டு இங்கு அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுபற்றி நேற்றைய தினம்கூட பம்பாயில் உள்ள படத் தணிக்கை உயர் அதிகாரிகள் அவர்களும், தமிழ்நாட்டில் உள்ள மண்டல அதிகாரி அவர்களும் உள்துறைச் செயலாளர் அவர்களும் கலந்து பேசி இது மாதிரி கள்ளத்தனமாக வீடியோ கேஸட் படம் தயாரிப்பவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதற்கு ஆய்வு செய்து கொண்டு வருகிறார்கள்.

## வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து தனியார் நிறுவனங்களுக்கும் வேலைக்கு எடுத்தல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து அரசு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மட்டுமே வேலைக்கான 'இண்டர்வியூ' அனுப்புகிறார்கள். தமிழகத்தில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களும் இந்த வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்துதான் ஆட்களை வேலைக்கு எடுக்க வேண்டுமென்ற நிலை வந்தால் இப்படி வேலை வாய்ப்பில்லாதோருடைய பட்டியலில் உள்ள எண்ணிக்கை குறைய வாய்ப்பு இருக்கும். எனவே அந்த வகையில் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே! சட்டத்திருத்தம் தேவை. இந்திய அரசுதான் செய்ய வேண்டும்.

* 1987 ஏப்ரல் 2 அன்று திரு. க. பாரமலை வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



# வேளாண்மை மானியக் கோரிக்கை★

**மா**ண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே! வேளாண்மை மானியக் கோரிக்கையின்மீது, சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் குறித்து ஒரு சில உணர்வுகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கடுமையான வறட்சி ஏற்பட்டாலும், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டாலும் அவைகளைச் சமாளித்து மக்களைக் காத்துக் கொண்டிருக்கிறது புரட்சித் தலைவரவர்களின் அரசு என்பதற்குக் கடந்த கால நடவடிக்கைகள் எடுத்துக் காட்டாக நிரூபித்துக் காட்டுகின்றன.

## சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்த புரட்சித் தலைவர்

சென்னை பெருநகரில் குடிநீர்ப் பிரச்சினை இருந்தாலும் அந்தப் பிரச்சினையைக் குறையே இல்லாத அளவுக்குத் தெருவெங்கும் ஆழ்குழாய் பம்புகளையும், டேங்குகளையும் அமைத்து லாரிகளின் வாயிலாக சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கும் வகையில் பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து, சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துக் கொண்டிருக்கிற எங்களுடைய நாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், செம்மையாக அந்த வாரியத்தை நிர்வகித்துக்

★ 1987 ஏப்ரல் 2



கொண்டிருக்கும் வாரியத் தலைவர் ஜேப்பியார் அவர்களுக்கும், வாரியத்தின் பொறியாளர்களுக்கும், அனைத்து ஊழியர்களுக்கும் முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தனியார் தெருக்களின் வசதிகளை விரைவுபடுத்துதல்

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சென்னை மாநகரத்திலே இருக்கின்ற தனியார் தெருக்களில் எல்லாம் அடிப்படை வசதிகள் செய்ய வேண்டுமென்பதற்காக ஏறத்தாழ 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளை முடுக்கி விட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வாரிய அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

## செயற்கை மழை தேவை

இதுபோன்ற வறட்சி ஏற்படுகின்ற நேரங்களில் குடிநீர் பிரச்சினையைச் சமாளிக்கவும், விவசாயத்தைப் பாதுகாக்கவும் ஏற்கெனவே செயற்கை மழையை உருவாக்க, விமானம் மூலம் அயோடைட் தெளித்து, செயற்கை மழையை உருவாக்கும் முயற்சியை மேற்கொண்டோம். அந்த முயற்சி எந்த அளவுக்கு வெற்றி தந்தது என்பது தெரியவில்லை. அந்த முயற்சியைத் தொடர்ந்து செய்தால், கோடிக்கணக்கில் செலவு செய்வதைக் குறைப்பதோடு, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும், விவசாயத்தைப் பாதுகாக்கும். எனவே இந்த நல்ல முயற்சி நலம் பயக்கும் என்பதை வலியுறுத்திக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## கடல் நீரைக் குடிநீராக்க...

அடுத்து, கடல் நீரைக் குடிநீராக மாற்ற வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையையும் பரிசீலனை செய்து, அதை ஆய்வு செய்து, விரைந்து நடவடிக்கை எடுத்தால், அதுவும் நாட்டுக்கு நலம் தரும் திட்டமாக இருக்குமென்று கருதுகிறேன்.

## பழைய பைப்புகளுக்குப் பதிலாக புதிய பைப்புகள்

அதைப் போல இன்றைக்கு சென்னை மாநகரத்தில் பாதிக்கப் பட்டிருக்கிற குழாய்கள் எல்லாம் 30 ஆண்டுகளுக்கு முன்பாகப் பதிக்கப்பட்டவை. ஆகவே இன்றைக்கு அவைகள் துருப்பிடித்து, சரியான முறையில் சில இடங்களில் இல்லாமல் இருக்கின்றன. எனவே இதற்காக ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, சென்னை விரிவாக்கம் செய்யப்பட்ட புதிய வட்டங்களையும் இணைத்து, புதிய குழாய்கள் பதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது என்ன ஆகிறதென்றால் பைப்புகள் துருப்பிடித்து, சில நேரங்களில் பொல்யூஷன் ஏற்பட்டு குடிநீர் துர்நாற்றம் வீசும் அளவுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்கு ஒட்டுமொத்தமாகப் புதிய பைப்புகளைப் பதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## ஆழ்துளைப் பம்புகளைப் பராமரிக்க...

1982 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியின் வாயிலாக ஆழ் துளைப் பம்புகள் நிறைய அளவிற்கு, ஆயிரத்திற்கு மேற்பட்ட பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு சென்னை நகரத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது இந்தப் பம்புகள்தான். எனவே அதைப் பராமரிக்கத் தனியாக ஒரு பொறியாளரை நியமித்து அந்தப் பணியினை மாத்திரம் செய்வதற்காக நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## கிருஷ்ணா நதி நீர்த் திட்டம்

அதேபோல் இன்றைக்கு சென்னை நகர மக்களது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை விரைந்து செயலாக்க வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சென்னை நகர மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அந்த முயற்சியை விரைந்து செயலாக்க வேண்டுமென்பதில் இந்த நேரத்திலே மற்ற மாநிலங்களின் அரசுகளும் ஒத்துழைத்து சென்னை



நகர மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## கோட்டூர் பாதாளச் சாக்கடைத் திட்டம்

விவர அறிக்கையில் இருக்கின்றது. கோட்டூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. அதில் ஒரு பகுதி நடைபெற்றிருக்கின்றது. இன்னும் முழுமையாகக் கோட்டூர் பகுதி மக்களுக்குச் செய்வதாகக் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டும், அந்தத் திட்டம் நடைபெறவில்லை. அதை விரைந்து செயல்படுத்த வேண்டும். கோட்டூர் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைபெற வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## ஈக்காடுதாங்கல் பாதாளச் சாக்கடைத் திட்டம்

ஈக்காட்டுத்தாங்கல் பகுதிக்கு ஏறத்தாழ ரூ.30 இலட்சம் செலவில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுத்திருக்கின்ற சென்னை குடிநீர் வழங்கு துறையைப் பாராட்டுகிறேன். அதே சமயம் 40 ஆண்டுக் காலமாக ஈக்காட்டுத்தாங்கலில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த வாரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பார்வையிட்டார்கள். ஏறத்தாழ 15 ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தப் பகுதியில் சர்வே 147-ல் ஓர் ஏக்கருக்கு மேலாக அரசுப் புறம்போக்கு நிலம் இருக்கிறது. அங்கு பம்பிங் ஸ்டேஷன் அமைத்துப் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறை வேற்ற அந்த இடம் வாய்ப்பாக இருக்கிறது. அதையும் செயலாக்க வேண்டும். நடப்பு நிதி ஆண்டிலேயாவது அந்தப் பணியினைத் தொடங்கினால் நலமாக இருக்கும். ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு விட்டன. அரசு அதற்குத் தொகை ஒதுக்கீடு செய்து அந்தப் பணியினை நிறைவேற்றச் செய்ய வேண்டும்.

## பழைய கிணறுகளைப் பராமரித்தல்

அதேபோல சென்னை மாநகரத்தில் இருக்கின்ற பழைய கிணறு களில் நல்ல தண்ணீர் தருகின்ற கிணறுகளும் நிறைய இருக்கின்றன.

அவைகளை எல்லாம் பராமரித்து, அந்தக் கிணறுகள் வாயிலாக குடிநீர் வழங்குகின்ற பணியினைக் கடுமையான வறட்சியின்போது மேற் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

## சாக்கடை அடைப்புகளை நீக்குவதில் புதுமை

அதேபோல சாக்கடை அடைப்புகள் ஏற்படும்போது, அதிலே தொழிலாளர்கள் இறங்கி வேலை செய்கின்றார்கள். இதனால் அபாயம் ஏற்படுகிறது. அதுகூட ஒரு வட்டாரத்திற்கு 2 பேர் என்று இல்லாமல் 4 வட்டங்களுக்கு 4, 5 பேர்கள்தான் இருக்கின்றார்கள். நகரத்திலே இப்படிப்பட்ட தொழிலாளர்கள் ஒரு வட்டத்திற்கு குறைந்தது 2 பேர்களாவது நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேநேரத்திலே நவீனமான இந்தக் காலத்தில், நாகரீகமான இந்தக் காலத்தில் இன்றைக்கும் அந்த மனிதன் அந்த சாக்கடை நாற்றத்திலே மூழ்கி, பணி செய்வதைப் பார்ப்பதற்குச் சங்கடமாக இருக்கின்றது. ஆகவே அந்த முறையை நவீனப்படுத்தி, அப்படி முழுகுகின்றவர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## வியாபாரத்திற்கே மீட்டர் வீட்டுக்கல்ல!

அதேபோல இன்றைக்கு வீடுகளுக்கெல்லாம் மீட்டர்களைப் பொருத்தி இருக்கின்றார்கள். வீடுகளுக்கு அது தேவையில்லை. கடைகள், ஓட்டல்கள், குளிர்பானக் கடைகள் இப்படிப்பட்ட வியாபார நிலையங்கள் தண்ணீரை அதிகமாகப் பயன்படுத்துகின்றன. தண்ணீரை எங்கே அதிகமாகப் பயன்படுத்துகிறார்களோ அங்கே மீட்டரைப் பொருத்தினால் சரியாக இருக்கும். அதைச் சாதாரண வீடுகளில், ஒண்டுக்குடித்தனம் இருக்கின்ற இடங்களிலே பொருத் துவது சரியல்ல. அதைப்பற்றி இந்த அவையிலேயே பலமுறைகள் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த மீட்டரைப் பொருத்துவதைத் தவிர்க்கலாம். வியாபாரம் நடக்கின்ற இடங்களில் பொருத்தலாமே



தவிர வீட்டிற்குத் தேவையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கான அறிவிப்பையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## வேளச்சேரித் திட்டத்துடன் மடுவன்கரை குடிநீர் வழங்கும் திட்டம்

அதேபோல, மடுவன்கரை பகுதி 40 ஆண்டுக்காலமாக சென்னை நகரின் பகுதியாக இருக்கின்ற பகுதி. அந்தப் பகுதிக்கு இன்றைக்கு டேங்குகள் மூலமாகக் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதிக்குப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம் பெருமுயற்சி எடுத்து, ஏற்கெனவே பதிக்கப்பட்ட பைப்புகளைப் பயன்படுத்தி முட்டுக்காட்டுப் பகுதியில் இருந்து குடிநீர் வழங்கிக் கொண்டிருக் கின்றார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் அந்தப் பகுதியிலே புதிய பைப்புகள் பதிக்கப்படாமல் இருக்கின்றன. தெருக்களுக்கெல்லாம் புதிய பைப்புகள் பதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ரூ.250 இலட்சம் செலவில் வேளச்சேரி திட்டம் தொடங்கப் பெற்று நிறைவேறிக் கொண்டிருக் கின்றது. அத்துடன் இந்தத் திட்டத்தையும் இணைத்துச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

## சேகர் நகர், ரங்கராஜபுரம், அபித் காலனி போன்ற பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்க!

அதேபோல தனியார் தெருக்கள். இந்தத் தனியார் தெருக்களில் இரண்டுவிதமான பிரிவுகள் இருக்கின்றன. இரண்டாகப் பிரித்திருக் கிறார்கள். தனியார் தெருக்களில் 200 தெருக்களுக்கு வாரியம் இப்போது அங்கீகாரம் வழங்கியிருக்கிறது, அடிப்படை வசதிகளைச் செய்யலாம் என்று. அப்படி வழங்கியிருக்கிற அந்தத் தனியார் தெருக்களில் ஃபிசிபிலிட்டி, நான் ஃபிசிபிலிட்டி என்று சொல்லிப் பிரித்து, ஃபிசிபிலிட்டி இருக்கிற அந்தத் தெருக்களுக்கு முதலில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்கப்படும் என்று சொல்லப் படுகிறது.

உதாரணமாக, சேகர் நகர், ரங்கராஜபுரம், அபித் காலனி போன்ற பகுதிகளில் எல்லாம் இதிலே எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். அதைப் பொறியாளர்கள் எப்படிச் செய்வார்களோ தெரியாது. அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளைத் தர வேண்டும். உங்களுடைய பொறியியல் திறனைப் பயன் படுத்தி எப்படியாவது அந்தத் தெருக்களுக்குப் பாதாளச் சாக்கடை வசதியைச் செய்து தர வேண்டும்.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள்

அதேபோல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் வாரிய உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பது பல சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்து. மிகப் பெரிய வாரியத்திற்குச் சட்டமன்ற உறுப்பினர்களை வாரிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எந்தெந்த இடங்களில் எப்படிக் குடிநீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்யலாம் என்று பார்த்துச் செய்வார்கள். எனவே இதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



# வினாக்கள் – விடைகள்

## கோட்டூர், ஈக்காடுதாங்கல் பாதாள சாக்கடை, மடுவன்கரை குடிநீர் பிரச்சினை*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது ஏற்கெனவே நான் கேட்டிருந்த கோட்டூர் பாதாள சாக்கடைத் திட்டம் குறித்தும், ஈக்காடுதாங்கல் பாதாள சாக்கடைத் திட்டம் குறித்தும், மடுவங்கரை குடிநீர் பிரச்சினை குறித்தும் பதில் சொல்லவில்லை இப்பணிகள் நடப்பு நிதியாண்டிலாவது துவங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்களுடன் 3 மணி நேரம் இந்த சைதாப்பேட்டை பகுதி பூராவும் சுற்றிப் பார்த்தேன். முதலில் குடிக்கத் தண்ணீர் வேண்டும். பாதாள சாக்கடைத் திட்டம் அடுத்தாற் போல வந்தால் போதும். தண்ணீர் இல்லாமல் பாதாளச் சாக்கடை கட்டி எதிலே தண்ணீர் ஓடுவது?

* 1987 ஏப்ரல் 2 அன்று திரு. பெ. உத்ராபதி உரையின் இடையே கேட்ட துணைக் கேள்வி

## சைதையில் கூட்டுறவுத் துறை மூலம் சுயசேவை அங்காடி*

(வினா எண். 12155) **திரு சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சைதைத் தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் புதிய சுயசேவைப் பிரிவு அங்காடி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மொத்தம் எத்தனை சுயசேவைப் பிரிவு அங்காடிகள் கூட்டுறவுத் துறையில் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? விரிந்து, பரந்துகொண்டிருக்கிற சென்னை மாநகரின் நுழைவாயிலாக இருக்கிற எனது தொகுதியில் புதிதாக சுய சேவைப் பிரிவு அங்காடி திறக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, அண்ணாநகர், திருவல்லிக்கேணி நுகர் கூட்டுறவுச் சங்கம், அண்ணாசாலை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி, மற்றும் பெசன்ட் நகர், திருவல்லிக்கேணி, அசோக் நகர் ஆகிய இடங்களிலும் கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன.

பூங்காநகர் மொத்த விற்பனைப் பண்டகசாலை சுய சேவைப் பிரிவை வைத்து நடத்திக் கொண்டு வருகிறது. சென்னை நகரைப் பொறுத்த வரையில் காமதேனு மொத்த விற்பனைச் சிறப்பங்காடி யானாலும் சரி, திருவல்லிக்கேணி டி.யு.சி. எஸ். ஆனாலும் சரி இரண்டும் பெரும் நஷ்டத்தில்தான் இயங்கி வருகின்றன. இந்த

*1987 ஏப்ரல் 3



நிலையிலே விரிவாக்கம் செய்ய வேண்டுமா, சைதைக்குப் போனால் இலாபகரமாக இருக்குமா என்பன எல்லாம் சந்தேகத்திற்குரியன வாகத்தான் இருக்கின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, காமதேனுவும், டி.யு.சி.எஸ்-ம் நஷ்டத்தில் இயங்குவதற்கு என்ன காரணம்? அப்படி நஷ்டத்தில் இயங்குவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரணங்கள் பலப்பல இருக்கின்றன. அவை அத்தனையையும் எடுத்துச் சொன்னால் நேரம் இடம் தராது. ஆகவே, அவற்றை எல்லாம் ஆராய்ந்து நட்டத்திலிருந்து மீட்டு இலாபகரமாக ஆக்கவேண்டும்; அதனுடைய முழுப்பலனை மக்கள் பெறவேண்டும் என்ற அடிப்படையில் முறைப்படியான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்படி மேற்கொள்ளப் பட்டு வருகிறபோது சைதைப் பகுதியும் பலன் பெறும்.



# கவன ஈர்ப்பு

## அடையாறு ஓரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதில் தாமதம்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ''அடையாறு ஆற்றின் ஓரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுகிற பணி துவங்குவதில் காலதாமதம் ஏற்படுவதால் அப்பகுதிவாழ் மக்களுக்கு ஏற்படும் வெள்ள அபாயம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை**

சென்னையில் உள்ள அடையாறு ஆற்றுக்கு கடந்த 1985 நவம்பர்-டிசம்பர் வெள்ளத்தால், பெரும் சேதம் ஏற்பட்டது. அடையாறு ஆற்றினை மேம்பாடு செய்ய மைய அரசு ரூ. 2 கோடி வழங்கியது. அடையாறு வெள்ளச் சேதங்களை தவிர்ப்பதற்கான

* 1987 ஏப்ரல் 3





சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தர அரசு 1986 பிப்ரவரி மாதம் ஒரு வல்லுநர் குழு நியமித்தது. அடையாறு ஆற்றுக்கு மேம்பாடு செய்ய ரூ. 12 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. வல்லுநர் குழு அறிக்கையின் அடிப் படையில், சில முக்கியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள ரூ. 2 கோடி மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதில் அடையாற்றின் இடது கரையில் ஜாபர்கான்பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை தடுப்புச் சுவர் கட்டுதலும், நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றை அகலப்படுத்தி, ஆழப்படுத்துதலும் முக்கியமான பணிகளாகும். முதல் கட்டமாக, அடையாற்றில் ஜாபர்கான்பேட்டை முதல் கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை துவங்கப்பட்டுள்ளது.

தடுப்புச் சுவர் கட்டும் பணியினை விரைவாக முடிக்கும் பொருட்டு, இப்பணி 11 சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, கடைக்கால் முழுவதும் தோண்டப்பட்டு, ஆறு பகுதிகளில் கடைக்கால் கற்காரை (Foundation Concrete) போடப்பட்டுள்ளது. மூன்று பகுதிகளில் கருங்கல் கட்டிடப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிக்கு 28-2-1987 வரை ரூ. 50.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இப்பணி 31-3-1987-க்குள் முழுமையாக முடிக்கப்படும்.

இதுதவிர, மறைமலை அடிகள் பாலத்திற்கு கீழ் கோட்டூர்புரம், நந்தனம் பகுதிகளில் ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர்/ கரைகள் அமைத்தல் சம்பந்தமாக பூண்டியில் மாதிரிப் படிவங்கள் ஆராய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தரைப்பாலம் வரை கரை கட்டவும், அகலப்படுத்தி ஆழப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே கத்திப்பாரா தரைப்பாலத்தின் அருகாமையில் ஆற்றின் நடுவில் தனியார் சொந்தமாக இடத்தை வைத்துக் கொண்டு பயிர் செய்து

கொண்டிருக்கின்றார்கள். அது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கின்றது. அரசுக்குச் சொந்தமான ஆற்றின் நடுவிலே தனியார் எப்படி சொந்த பட்டா பெற முடியும். மணல் திட்டாக அந்த பகுதி இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அடிக்கடி வெள்ள அபாயம் ஏற்படுகின்றது. ஆஸ்பிட்டல் சாலை மற்றும் கஸ்டம்ஸ் காலனி பாதிக்கப்படுகின்றன. அங்கு தனியார் சொந்தமாக்கிய அந்த நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல அங்கே அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தை தனியார் ஆக்கிரமித்து பயிர் செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்று அரசுக்கு தெரியவந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கரை கட்டுகின்ற வேலை கத்திப்பாரா தரைப் பாலத்தில் இருந்து நடைபெற்று வருவதாகவும் அது மறைமலை அடிகளார் பாலம் வரை நடப்பு ஆண்டில் தொடங்கி நடைபெறுவதாகவும் இருக்கின்றது. அங்கே கரை கட்டுவதால், இந்த ஆற்றிலே துணி துவைக்கின்ற சலவையாளர்கள் உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிக் கட்டப்படுகின்ற கரையில் சலவையாளர்கள் ஆற்றிலே இறங்கி துணி துவைக்கின்ற அளவுக்கு படி வசதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அதிகாரிகளோடு கலந்துகொண்டு சாத்தியக்கூறுகள் அறிந்து வேண்டிய நடவடிக் கைகளை எடுக்கலாம்.



# வினாக்கள் – விடைகள்

## பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு மைய அரசின் மானியம்*

(வினா எண் 8729) **திரு. சைதை சா. துரைசாமி** - மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

டில்லி மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு மைய அரசு மானியம் வழங்குவதைப்போல் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு மானியம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் இயங்குகிறதா? எத்தனை வண்டிகள் சென்னை நகரத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன? இந்த வாகனங்களில் எல்லாம் சில நேரங்களில் சுவரொட்டிகளை ஒட்டி விடுகிறார்கள். அப்படி அனுமதியில்லாமல் ஒட்டுவதைத் தடுக்கின்ற வகையிலும், போக்குவரத்துக் கழகத்திற்கு இலாபம் வருகின்ற வகையிலும்,

* 1987 ஏப்ரல் 6

பின்புறத்தில் விளம்பரப் பகுதி என்று ஒதுக்கி, அதிலே விளம்பரப் படுத்துபவர்களுக்கு இவ்வளவு கட்டணம் என்று நிர்ணயித்தால் இன்னும் அதிகமான வருவாய் வரும். எனவே இந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு.முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி மானியத்தைப் பற்றிய கேள்வி. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சில முக்கியமான பிரச்சினைகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். பல நேரங்களிலே அந்த வாகனங்களின் பின்னாலே போஸ்டர்களை ஒட்டுகின்ற காரணத்தினால் அந்த வண்டிகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகமான செலவுகள் ஏற்படுகின்றன. நாம்கூட, பின்னால் விளம்பரத்திற்கு என்று ஒரு இடத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று யோசித்தோம்.

ஆனால், முறையாக அது பயன்படுத்தப்பட வேண்டுமென்பது தான் அரசினுடைய கோரிக்கையாக இருக்கிறது. எனவே, அதைப் பற்றி எதிர்காலத்திலே யோசிக்கப்படும். ஏறத்தாழ சென்னையிலே மட்டும் 2,300 வண்டிகள் வரை-சுமாராகச் சொல்லுகிறேன். சரியான கணக்கு இப்பொழுது இல்லை. 2,300 வண்டிகள் வரை இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எனவே, 2,300 வண்டிகளிலேயும் பின்னாலே விளம்பரப்படுத்துவதற்கான ஏற்பாடு செய்வதைப் பற்றித் தனியாக ஆய்வு செய்யப்படும்.

## தாட்கோ மூலம் வீடுகட்டுதல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ நிறுவனம் வெளி மாவட்டங்களில் இந்தப் பணிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரில் வீடு கட்டுகின்ற பணி துவக்கப்படவில்லை. எனவே, குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வாயிலாக இங்கே வீடுகள் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். தனியாக ஆதிதிராவிடர் காலனி என்று பல இடங்களில் இங்கே இருக்கின்றன. அப்படிப்பட்ட காலனிகளை எடுத்து தாட்கோ மூலம் வீடு கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

* 1987 ஏப்ரல் 6 அன்று திரு ஆ. சிவக்குமார் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



**மாண்புமிகு திரு. எ. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு மூலம் அவர்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் இருக்கிறது. ஆனால் தாட்கோ பணி அந்த மக்களுக்குப் பயன்பட வில்லை என்று சொன்னார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் 5 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கின்ற திட்டத்தின் வாயிலாக முழு மானியம் என்ற வகையில் ஒவ்வொரு ஆதிதிராவிடருக்கும் சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு இங்கே லோன் கொடுக்கப்படுகிறது. அதே போல் அவர்கள் கடைகளை வைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு லோன் வழங்கப்படுகிறது.

## வரதட்சனைப் பிரச்சினைக்குப் புதிய தீர்வு!*

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, மணமகன் மணமகளைத் திருமணம் செய்து கொள்ளும்போது, மணமகன் மணமகளை மட்டும் பெறவேண்டும். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, திருமணங்கள் பதிவு செய்யப் படும்போது மணமகன் பெண்ணை மட்டும் எடுக்க வேண்டும், வேறு எந்தப் பொருளையும் பெண் வீட்டில் பெறக்கூடாது. வரதட்சணை என்ற வகையில் வேறு எந்த உதவியையும் வாங்கி வரக்கூடாது என்ற ஷரத்தை, சட்டத் திருத்தம் கொண்டு வரும்போது சேர்த்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே இதில் பிரச்சினைகள் எழும்.

## சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம்**

(வினா எண் 8970) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா?

* 1987 ஏப்ரல் 7 அன்று திரு ஜி.கே.ஜெ. பாரதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

** 1987 ஏப்ரல் 7

சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதை மாநகராட்சி மாந்தோப்பு மேல்நிலைப் பள்ளியில் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பணி 31-8-1986 அன்று முடிவடைந்துள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கப் பட்டிருப்பது உண்மை. ஆனால், அந்த மைதானம் அமைக்கும்போதே அதற்கு மின் விளக்குகள் பொருத்திய நிலை வேண்டுமென்று ஏற்கெனவே கேட்கப்பட்டது. மாலை நேரத்தில் தான் விளையாட முடியும். ஆகவே, மின்விளக்கு வசதிகள் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இன்னும் அந்தப் பணி நடைபெறவில்லை. எனவே, மின்விளக்கு பொருத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, ரூ. 89,005 மதிப்பீட்டுச் செலவில் ஒளி விளக்கு பொருத்துவதற்காக சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அந்த விளையாட்டுக் குழு நண்பர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே கைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கேட்கப்பட்டது. எனவே, அந்தக் கைப்பந்து விளையாட்டு மைதானத்தையும் அமைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நன்றிக்கு நன்றி. இது கூடைப்பந்து பற்றிய கேள்வி. கைப்பந்து பற்றி தனியாகக் கேள்வி போடவும்.

## சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி*

(வினா எண் 5420) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னையில் மேலும் ஒரு பல் மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவரவர்களே, இப்போது இருக்கும் பல் மருத்துவக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள்? எத்தனை பேர் ஆண்டுதோறும் விண்ணப்பம் செய்கிறார்கள்? என்ன தகுதி அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** தலைவரவர்களே, சென்னையில் இருக்கிற பல் மருத்துவக் கல்லூரியில் இருக்கிற இடங்கள் 45. ஆண்டுதோறும் 45 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால், எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்கிறார்கள் என்ற விவரம் இல்லை. அந்த 45 பேர்களில் மத்திய அரசுக்கு 4 இடங்கள்; இராணுவத்தில் பணியாற்றும்போது இறந்துபோன தமிழ் வம்சாவழியினருக்கு 1 இடம்; வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் வம்சாவழியினருக்கு 1 இடம்; பி.எஸ்.சி. பட்டதாரிகளுக்கு 2 இடங்கள்; மற்றவர்களுக்கு 37 இடங்கள்; ஆக மொத்தம் 45 இடங்கள் இருக்கின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இடங்களுக்கு முன்னுரிமை வழங்கி ஒதுக்கீடு

* 1987 ஏப்ரல் 8

செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு அதிலே வழங்கப்படும் என்ற குறிப்பு இல்லை. எனவே, அவர்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அந்தக் குறிப்பு இல்லை.

## சென்னை, மேட்லி சாலைக்கு தார்ச்சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல்*

(வினா 3724) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தியாகராயநகர், மேட்லி சாலையில் உள்ள ஜெயின் கல்லூரி மற்றும் அடுக்குமாடி வீடுகள் உள்ள குறுக்குத் தெருவிற்கு தார்ச்சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எப்போது நடவடிக்கை எடுக்கப் படும்?

**விடை-** (அ) தியாகராய நகர், மேட்லி சாலையில் உள்ள ஜெயின் கல்லூரி மற்றும் அடுக்குமாடி வீடுகள் உள்ள குறுக்குத் தெருவிற்கு தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது இல்லை. தெரு விளக்குகள் அமைக்கும் திட்டம் உள்ளது. (ஆ) தியாகராய நகர், மேட்லி சாலையில் உள்ள ஜெயின் கல்லூரி மற்றும் அடுக்குமாடி வீடுகள் உள்ள குறுக்குத் தெருவிற்கு மூன்று புதிய குழல் விளக்குக் கம்பங்கள் அமைக்க ரூ. 11,936 அடங்கிய திட்டம் மாநகராட்சியால் வரையறுக்கப்பட்டு உள்ளது. இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டிற்குள் நிறைவேற்றி வைக்கப்படும்.

*1987 ஏப்ரல் 8



# கவன ஈர்ப்பு

## கோட்டூர் - நந்தனம் இணைப்புப் பால வேலைகள்*

**திரு.சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! ''கோட்டூர் - நந்தனம் இணைப்புப் பாலம் கட்டுகின்ற பணிகள் விரைவில் முற்றுப் பெறாமல் இருப்பதால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு.சு.முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

அடையாற்றின் குறுக்கே கோட்டூர்புரம் அருகே டர்ன் புல்ஸ் சாலை வழியாக அடையாறு பகுதிக்கு நேரடிப் போக்குவரத்து ஏற்படும் வகையில் ரூ.74.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் பெற்று ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இப்பணி செயல்பட்டு வருகிறது. இப்பணி ஜூன் 1981-ல் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கூடுதலான இருவழித்

* 1987 ஏப்ரல் 9

தடம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிக்கும் சேர்ந்து திருத்திய நிர்வாக ஒப்பளிப்பாக ரூ.157 இலட்சத்திற்கு 1986-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அளிக்கப்பட்டது. இப்பணியின் தொடக்க காலத்தில் இருந்தே பல்வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் சற்று தாமதமாகச் செயல்பட்டு வருகிறது. காரணங்கள் பின்வருமாறு:

1. நவம்பர் 1983 முதல் மார்ச் 1984 வரை, இதற்கு முன் இருந்திராத அளவு பெய்த மழையின் காரணமாகவும், வெள்ளத்தின் காரணமாகவும் பணி வெகுவாகப் பாதிக்கப்பட்டது.
2. அஸ்திவாரக் கிணறு அமைப்பதில் இடையூறுகளும் மற்றும் கிணற்றில் இருந்து விஷவாயு வெளிப்பட்டமையாலும் கிணறு இறைக்கும் பணியும் தடைப்பட்டது.
3. சிமெண்ட் தட்டுப்பாட்டாலும் சிறிது காலம் தடைப்பட்டது. சிமெண்ட் கலவைக்கான சுத்தமான தண்ணீர் கிடைக்காமையாலும் தாமதம் ஏற்பட்டது.
4. உத்திரம் மேல் ஏற்றும் அமைப்பு (Launching Structure) உருவாக்குவதில் தாமதம் ஏற்பட்டதால் முன் வலுவேற்றப்பட்ட கான்கிரீட் (P.S.C.) உத்திரங்களை ஏற்றும் பணி தடைப்பட்டது.

தற்போது பாலத்தின் மேற்புறப் பகுதிகளுக்கான (Super Structure) பணிகள் முடிவடைந்துள்ளன. 23 உத்திரங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றில் 10 உத்திரங்கள் முதல் கண்ணில் நிலைப்படுத்தப்பட்டுள்ளன. நடுக்கண்ணுக்கான 5 உத்திரங்களை நிலைப்படுத்தும் பணிகள் முடிவுற்று மீதி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கோட்டூர்புர பக்க அணுகுசாலை முடியும் தருவாயில் உள்ளது. நந்தனம் பகுதி அணுகுசாலைப் பணி தொடங்க உள்ளது. மேலும் 740-வது மீட்டரில் உள்ள (நந்தனம் பகுதி அணுகுசாலையில்) அமைய விருக்கும் ரூ. 2,73,765 மதிப்புள்ள சிறு பால வேலைக்கான பணியைத் தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைப்பதற்கான நியமன ஒப்பந்தத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மார்ச் 1986 வரை ரூ. 115.56 லட்சங்கள் இவ்வேலைக்காக செலவு செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ஜனவரி 1987 முடிய ரூ. 28.16 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளையும் வேகமாக செயலாக்கம் செய்து முடிக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! அந்த விவர அறிக்கையில் 1981ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட அந்தப் பணி இன்றைக்கும் முடிவு பெறாமல் இருக்கின்ற நிலையை அறிய முடிகிறது. அதற்கான பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ரூ.75 இலட்சத்தில் நிர்ணயிக்கப்பட்ட அந்தப் பணி தற்போது 115 இலட்சம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் ஓடும் பல்லவன் போக்குவரத்துப் பேருந்துகள் வேகம் குறைவாக ஒவ்வொரு இடத்திலும் நின்று நின்று செல்லுவதன் காரணமாக ஓர் இடத்தை அடைய எப்படிக் காலதாமதம் ஆகிறதோ, அதைப் போல் அல்லாமல் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகள் - எப்படி நெடுஞ்சாலையில் போக்கு வரத்துத் தொல்லைகள் பல இருந்தாலும் வேகமாகச் சென்று குறித்த நேரத்தில் செல்கின்றனவோ, அதைப்போல் இந்தப் பணியை விரைவில் முடித்துத் தருவதற்கான வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் போல் வேலைகளைச் செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசையும் கூட. ஆனாலும் வேகமாகப் போகிற நேரத்தில் எங்கேயும் இடிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பணியில் எதனால் இடையூறுகள் ஏற்பட்டன என்பதைப்பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன்.

1983-84-ல் மிக அதிகமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் அந்தப் பாலத்தை முடிக்க முடியாமல் தாமதம் ஏற்பட்டது. சில காரணங்களாலேதான் அந்தத் தாமதம் ஏற்பட்டிருக்கிறதே தவிர,

அரசாங்கம் இதில் சுணக்கம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து மீண்டும் வேகமாக எப்படிச் செயல்படுத்துவது என்பதைப்பற்றிப் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! அதிவேகமான முறையில் இந்தப் பணியினை மேற்கொண்டாலும் கூட ஒரு கால அளவுக்குள் இந்தப் பணி முடிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒரு வரையறை நிர்ணயித்து இவ்வளவு நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டால்தான் அந்தப் பணி விரைவாக முடிவடையும் என்று நான் கருதுகிறேன். எனவே அந்தப் பணி நிறைவேறுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே! பாலம் கட்டப்படுகிற அந்த இடம் ஒரு சமமான இடம். மொத்தமாக எல்லா வேலைகளையும் செய்ய தேவையான இடம் அங்கேயில்லை. நிறைய சிரமம் இருக்கிறது என்பதை நானே நேரில் சென்று பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினரும் பார்த்திருக்கிறார்.

எனவே அதற்கு ஒரு காலத்தைச் சரியாக நிர்ணயிக்க முடியாது இருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, சட்டமன்ற உறுப்பினரையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு அதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம். அதற்குப் பின்னால்தான் கால அளவை நிர்ணயிக்க முடியும்.



# வினாக்கள் – விடைகள்

## சென்னை – விழுப்புரம் இரட்டை இரயில் பாதைத் திட்டம்*

(வினா எண் 12160) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை - விழுப்புரம் இரட்டை இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை விரைவில் துவங்கிட, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இதுபற்றி இவ்வரசு மத்திய அரசை அவ்வப்போது வற்புறுத்தி வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இதுபோன்ற இரட்டை இரயில் பாதைத் திட்டங்கள் எத்தனை இடங்களில் தமிழகத்தில் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசினிடத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், இந்தப் பணிகள் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு விட்டதா அல்லது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரங்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

* 1987 ஏப்ரல் 10

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே! குறுகிய இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டு மென்றும், இன்னும் பல வழிகளை அமைக்க வேண்டுமென்றும் நாம் பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அந்தப் பட்டியல் இப்போது என்னிடத்தில் இல்லை. சென்னை யிலிருந்து விழுப்புரம் விரைவில் பலவழிப்பாதை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தோம். சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளி வரையில் இரட்டை இரயில் பாதை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டோம்.

இவ்வாறு அவர்களிடத்தில் நாம் கேட்கிறபோது அவர்கள் சொன்ன பதில் ஏற்கெனவே அதிகமான நெரிசல் இருக்கிற இடம் சென்னை கடற்கரை - தாம்பரம் பாதைதான் என்றும், மேலும் திருச்சி - பொன்மலை பகுதியில் அதிகமான நெரில் இருக்கிறது என்றும், ஆக இந்த இரண்டு இடங்களில்தான் அதிகமான நெரிசல் இருக்கிறது; அதாவது இரட்டை இரயில் பாதைக்கு மேலேயே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

மற்றவற்றை இரட்டை இரயில் பாதையாக அமைக்க வேண்டு மென்று நாம் அவர்களிடத்தில் கேட்டபோது அதற்கு இப்போது சாத்தியம் இல்லை; மொத்தமாக நிதிப் பிரச்சினையை வைத்துப் பார்க்கிறபோது அவற்றிலே போக்குவரத்தை அதிகப்படுத்தினால்தான் சரியாக இருக்குமே தவிர, இரட்டை இரயில் பாதையாக அமைப்பதில் இலாபம் இருக்காது என்று அவர்கள் ஆய்வு செய்து நமக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்று திண்டுக்கல் - கரூர் - தூத்துக்குடி இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டுமென்று நாம் கேட்டதற்கிணங்க - சென்னையிலிருந்து திண்டுக்கல் வரையில் திருச்சி வழியாக அகல இரயில் பாதையாக அமைக்க வேண்டுமென்று நாம் கேட்டதற்கு அவர்கள் ஆய்வு செய்வதாகச் சொல்லி நமக்குப் பதில் அளித்திருக்கிறார்கள். ஆனால் எடுத்துக் கொள்கிறபோது நிதிப் பிரச்சினை இருக்கிறது என்றும் செங்கற்பட்டிலிருந்து தாம்பரம் வரையில் மட்டும் மீட்டர் கேஜ் பாதையை இரட்டிப்பு பாதையாக



அமைக்க ஆய்வு செய்திருக்கிறோம். அதை இந்த ஆண்டிலே முடிக்கலாம் என்பதாக அவர்கள் தகவல் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! கரூர்- திண்டுக்கல் அகல இரயில் பாதைத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிற நிதி போதுமானதாக இல்லை என்று சொல்லு கிறார்கள். அது உண்மையா? அதனுடைய விவரம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே! அதற்கான விவரம் இதில் இல்லை. ஆனால் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது என்பது உண்மை. நிதி அதிகம் ஒதுக்க வேண்டும். வேலைகளை இன்னும் துரிதப்படுத்த வேண்டும், வேகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

## வாரிசுகளுக்கு வாய்ப்புக் கொடுப்பதில் காலதாமதம்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்து விட்டால், அவர்களது துணைவியார்களுக்கு அல்லது வாரிசு தாரர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் வேலை கொடுக்கும் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படாமல் சில இடங்களில் காலதாமதப்படுத்தப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி, உடனடியாகப் பணி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியிலிருந்து இறந்து விடுபவர்களின் வயது, பணிபுரிந்த காலம், அவர்கள் குடும்பத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், அவர்களில் எத்தனை பேர் வேலையில் இருக்கிறார்கள், எத்தனை பேர் வேலை செய்யாமல் இருக்கிறார்கள், அந்தக் குடும்பத்தை பாதுகாக்கும் சூழ்நிலை

* 1987 ஏப்ரல் 10 அன்று திரு எஸ். வேணுகோபால் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இளமையிலே அரசு ஊழியர் இறந்து, அவரது துணைவியாரும் படித்திருந்தால், வயது வரம்பைத் தளர்த்தி, கல்வித் தகுதியைத் தளர்த்தி, ஓரளவுக்கு அவர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் அளவுக்கு விதிமுறைகளைத் தளர்த்தி வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவர்கள் வேலை பார்த்த துறையிலேயே இவர்களுக்கும் வேலை தருகிறோம். சில தேர்வுகளில் அந்தத் துறையில் தர முடியாத நிலைமை ஏற்பட்டால், மனிதாபிமான அடிப்படையில் வேறு துறைகளில் வேலை கொடுக்க முயற்சி எடுக்கப்படுகிறது. எனவே, உடனடியாக என்று சொல்ல முடியாது. உடனடியாகத் தரவேண்டு மென்று எண்ணினாலும், சிலபல மாதங்கள் அதில் கழிந்து விடுகிறது.

## இலவசப் பாடப்புத்தகத்திற்கு இழப்பு எவ்வளவு?*

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டின் நாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்திற்கு பாடநூல் நிறுவனம் எவ்வளவு புத்தகங்களை வழங்குகிறது? அதற்கு உண்டான தொகை எவ்வளவு? அதனால் அரசுக்கு ஏற்படுகிற இழப்பு எவ்வளவு என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, சுமார் 8 கோடி ரூபாய்ச் செலவிலே இலவசப் பாடநூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளைத் தமிழில் ஒளிபரப்புதல்**

(வினா எண் 13417) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளைத் தமிழில் ஒளிபரப்பு செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

* 1987 ஏப்ரல் 11 அன்று திரு இரா. தாமரைக்கனி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

** 1987 ஏப்ரல் 20





**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! முதல்வரின் ஆணைப்படி 23-2-1987 முதல், தொலைக்காட்சியில் காலையில் இந்தி மொழியில் ஒளிபரப்பப்படும் தேசிய நிகழ்ச்சி வரவேற்கத்தக்க ஒன்று அல்ல என்றும், தேசிய நிகழ்ச்சியில் பொருத்தமான நேரத்தில், தமிழிலும் செய்தி ஒளிபரப்ப வேண்டும் என்றும் மாநில அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களின் உள்ளக் கிடக்கையை எடுத்துக்காட்டுகின்ற வகையில் கடிதம் மூலம் எழுதியிருக்கின்ற அந்தக் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப் படாமல் இருப்பதை அறிந்து, தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து, காலையிலே ஒளிபரப்புகின்ற அந்த நிகழ்ச்சியானது தமிழிலே வந்தால் பொதுமக்கள் அனைவருக்கும் பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் ஏதுவாக இருக்கும். தொலைக்காட்சிப் பெட்டி இப்போது இதுபோன்ற ஒளிப்பரப்புகளால் மக்கள் மத்தியிலே ‘‘தொல்லைக் காட்சிப் பெட்டியாக’’ ஒளிபரப்புவதற்கு மீண்டும் வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழ்நாடு அரசு தனது கடிதத்தில் சென்னை தொலைக்காட்சியில் இரண்டாவது அலை வரிசை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும்போது, அதையும் சமீபத்தில் சென்னை - கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் மின்னலை மூலம் இணைக்கப்பட்டுள்ள தருணத்தில் இத்தகைய புதிய நிகழ்ச்சி வரவேற்கத்தக்கதல்ல என்றும், மாலை 5-30 மணி வரையிலும் சென்னை தொலைக்காட்சியில் மாலை நிகழ்ச்சிகள் எதுவும் இல்லாத காரணத்தால் காலை தேசிய நிகழ்ச்சியில் தமிழ் செய்திக்கு முக்கியத் துவம் கொடுத்து ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், இந்தியும், ஆங்கிலமும் தெரியாத மக்கள் தமிழ்நாட்டில் பலர் இருக்கின்றனர் என்றும், தமிழ்நாட்டில் 60 முதல் 70 சதவீதம் வரை

தொலைக்காட்சியில் ஒளிபரப்பு உள்ளதென்றும், இந்தப் புதிய நிகழ்ச்சியைப் பலர் விரும்பவில்லை என்றும், காலையில் ஒரு புதிய நிகழ்ச்சியைத் தொடங்குவதாக இருந்தால் அது வரவேற்கத்தக்க ஒன்றாக அமைய வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி கடிதத்தினை ஆய்ந்து நடவடிக்கை எடுப்பதாக 27-2-1987 அன்று பதில் வந்திருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்றைக்குத் தமிழக மெங்கும் ஊராட்சி மன்றங்கள்தோறும் நாம் வைத்திருக்கிறோம். ஆகவே இப்படிப் பொது மக்கள் மத்தியிலே எல்லோரும் பார்த்து ரசிக்கவும் விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வகையிலே இருக்கின்ற காரணத்தால், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை நேர்முகமாக ஒளிபரப்பு செய்கின்றபோது, ஏன் சட்டமன்ற நிகழ்ச்சி களைக்கூட பொதுமக்கள் அறிந்து கொள்கின்ற வகையிலே ஒளி பரப்புவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும், தமிழ்நாட்டு மக்களுடைய கருத்தையும் நிச்சயம் தமிழக அரசு மைய அரசுக்கு வலியுறுத்தும்.

## தாடண்டர் நகர் சமூகக் கூடம்*

(வினா எண். 13390) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தாடண்டர் நகர் பகுதியில் உள்ள சமூகநலக் கூடத்தை விரிவு படுத்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

* 1987 ஏப்ரல் 21



**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்ட கேள்விக்கு 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் திருமண மண்டபம் அந்தப் பகுதியில் இருக்கின்ற குடியிருப்புகளில் வசிப்பவர்கள் மாத்திரமல்லாமல், பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களும் பயன்படுத்துகின்ற திருமணக் கூடம்.

மழை பெய்தால் பிரச்சினை ஏற்படுகிறது. மேலே உள்ள உணவு பரிமாறும் இடம் எல்லாம் திறந்த வெளியாக இருக்கிறது. எனவே மாடியில் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டில் கூரை அமைக்கவும். சுற்றுப் புறத்தைச் சுகாதாரமாக வைத்துக் கொள்ளவும், மதிற்சுவரை எழுப்பவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதை அபிவிருத்தி செய்வதற்காக நான் அதிகாரிகளிடத்திலே பேசியபொழுது நான்கு இலட்சம் ரூபாய் தேவை என்று சொன்னார்கள். எனவே, இந்த வருடமோ அல்லது அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ நிதிநிலைமையைப் பொறுத்து ஆவன செய்யப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் செய்கின்ற பணிகளில் முதலில் மேல் தளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதிநிலைமை சரியானவுடன் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## திறந்தவெளி சிறைச் சாலைகள்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் உள்ளனவா? இல்லையென்றால், திறந்தவெளிச் சிறைச்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் ஏற்கெனவே இருக்கிறது. மேலும் திறந்தவெளிச் சிறைச் சாலைகள் திறப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

## தையல் தொழிலாளர்களுக்கு வங்கிக் கடன்**

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தையல் கலைஞர்களை ஒன்று சேர்த்து ஆங்காங்கே தையல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவர்களுக்கு எம்.சி.சி. வங்கி, டி.என்.எஸ்.சி. வங்கி அல்லது தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளிலிருந்து அவர்களே சொந்தமாக அந்தத் தையல் மெஷின்களை வாங்கித் தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே அவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், தொழிலாளர் நல அமைச்சர் நடவடிக்கை எடுக்க முடியாது.

---

* 1987 ஏப்ரல் 21 அன்று திரு ஜி.கே.ஜெ. பாரதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

** 1987 ஏப்ரல் 21 அன்று திருமதி பா. வளர்மதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



# கவன ஈர்ப்புகள்

## வேளச்சேரி ஏரி நீர்ப்பிடிப்பு மட்டத்தைக் குறைத்து வெள்ளப் பாதிப்பைத் தவிர்த்தல்!*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! ''வேளச்சேரி ஏரியில் நீர்ப் பிடிப்பு மட்டத்தைக் குறைப்பதற்கான பணிகள் விரைவில் துவக்கப்படாததால் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

வேளச்சேரி ஏரியின் எதிர்வாயிலில் உள்ள குடியிருப்புகளின் வெள்ளப் பாதிப்புகளைக் களைய வேளச்சேரி ஏரியின் முழு நீர் மட்டத்தை 4' குறைக்க தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் அனுப்பிய ரூ.4.80 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு அரசு ஆணை எண். 712 பொதுப் பணித்துறை, நாள் 21-3-1986-ல் ஒப்புதல்

---

* 1987 ஏப்ரல் 22

வழங்கியுள்ளது. இவ்வேலைக்கான ஒப்பந்தங்கள் நிச்சயிக்கப்பட்டு வளைவு கரைபணிகள் முடிந்து மற்ற வேலைகள் துவக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மழைக்காலத்திற்குள் வேலைகள் முடிவு பெறும். வேளச்சேரி குடியிருப்போர் நலச் சங்கத்தின் கோரிக்கையின்படி, கலுங்கலினின்று உபரி நீர்க் கால்வாய் அமைத்து, அருகில் உள்ள சதுப்பு நிலத்தில் சேர்த்துவிடத் திட்டம் பொதுப்பணித் துறை அதிகாரிகளால் தீட்டப்பட்டு வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்த விவர அறிக்கையில் 21-3-1986 அன்று உத்தரவு வழங்கப்பட்டும், இன்னும் அந்தப் பணி முழுமை பெறவில்லை என்பது மாத்திரமல்ல, துவங்கப்பட்ட நிலையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, வருகின்ற காலம் மழைக்காலமாக இருக்கிற காரணத்தால், விரைந்து அந்தப் பணியை முடித்து வைக்கவும், அதே நேரத்திலே அந்தக் கலுங்கலிலிருந்து உபரி நீர்க் கால்வாய் அமைப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

அதற்கு எவ்வளவு நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது, அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்தத் திட்டப் பணியை வேகமாக ஆரம்பித்து முடிக்க வேண்டும் என்ற உணர்வை அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறோம். புதிதாகக் கலுங்கல் கட்டுவதற்கு முன்பாகத் தண்ணீர் உள்ள அந்தப் பகுதியிலே கரையை வெட்ட வேண்டியதாக இருப்பதால் வளைவாக அந்த மண் அணைப்பை இப்போது அமைத்திருக்கிறார்கள். வேகமாக வேலையைச் செய்ய வேண்டும் என்ற உணர்வை அந்த அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். கால்வாய் வெட்ட வேண்டுமென்று சொன்னாலும், அதற்கு நிரம்பப் பணம் ஆகும் என்பதால், நிதி நிலைமை சீரான பிறகு அந்த வேலையை எடுக்கலாம் என்று வைத்து இருக்கிறோம்.



## அடையாறு ஆற்றின் கரையோரத்து மக்களுக்கு மாற்று இருப்பிடம் அளிக்க நடவடிக்கை*

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! ''மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தபடி அடையாறு ஆற்றின் கரையோர மக்களுக்கு மேடான பகுதிகளில் மாற்று இடம் கொடுக்க, குடிசை மாற்று வாரியம் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கெனவே பெற்ற அனுமதியின்பேரில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் பாதியிலேயே அறநிலையத் துறை தடை ஆணை பிறப்பித்த காரணத்தினால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

மேற்படி கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ச. எண்.21-ல் சுமார் 1.25 ஏக்கர் நிலத்தையும், வேளச்சேரி அருள்மிகு யோகநரசிம்ம சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான ச.எண்.252-ல் உள்ள சுமார் 60 செண்ட் நிலத்தையும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தனது உபயோகத்திற்காக கேட்டு வந்தது. அத்துடன் கோட்டூர் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலைச் சேர்ந்த 2.04 ஏக்கர் நிலத்தையும், மேட்டுப்பாளையம் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலின் 17 கிரவுண்டு நிலத்தையும் குடிசை மாற்று வாரியம் கேட்டது.

இதுபற்றி நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் இந்த நிலங்கள் மிக மதிப்பு வாய்ந்த காலி மனைகள் என்றும், மனை ஒன்றுக்கு ரூபாய்

* 1987 ஏப்ரல் 22

ஒரு இலட்சத்திற்கு மதிப்புள்ளவை என்றும், குடிசை மாற்று வாரியத்திடம் எடுத்துச் சொல்லப்பட்டது. பின்னர் இது குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் முன்பாக 3-11-1986-ல் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் திருக்கோயில் நிலங்கள் மனை ஒன்றுக்கு ரூ.20,000-லிருந்து ரூ.1,00,000 வரையில் மதிப்புடையவை என்பதை அறநிலையத் துறை சுட்டிக்காட்டி,

குடிசை மாற்று வாரியம் இந்தத் தொகையை தருவதற்குத் தயாராக இருந்தாலொழிய திருக்கோயில்களின் இந்த நிலங்களைத் தருவதற்கு விருப்பமில்லை என்று மேலும் சுட்டிக்காட்டி, இந்த நிலங்களைக் கையகப்படுத்த நில ஆர்ஜித நடவடிக்கையைத்தான் மேற்கொள்ள வேண்டும் என்றும், அதை விடுத்து அவர்களின் ஒப்புதலைப் பெற்றோ அல்லது வேறு விதமாகவோ இந்த நிலங்களைக் கையகப் படுத்த முயல்வது தவறானது என்று குடிசை மாற்று வாரியத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

இப்படியிருந்தும் இந்து சமய அறநிலையத் துறையின் அனுமதி பெறாமலும், திருக்கோயிலின் அனுமதியின்றியும், அரசு அனுமதியின்றியும், குடிசை மாற்று வாரியம், வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு யோகநரசிம்ம சுவாமி திருக்கோயில் நிலங்களில் புகுந்து சாலைகள் அமைத்தும் மற்றும் பல வேலைகளைத் தன்னிச்சையாகச் செய்வதாகத் தெரிவித்ததின் பேரில் இந்தத் திருக்கோயில்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்காக இதைத் தடுத்து நிறுத்தத் தகுந்த நடவடிக்கை எடுக்க செயல் அலுவலருக்குத் தெரிவிக்கப்பட்டது.

அவரும் ஓ.எஸ்.எண். 1554/87 என்ற வழக்கினை சிட்டி சிவில் கோர்ட்டில் தாக்கல் செய்து அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலைப் பொறுத்தவரை ஐ.ஏ.எண்.3903/87 என்ற விண்ணப்பத்திலும், அருள்மிகு யோக நரசிம்ம சுவாமி திருக்கோயிலைப் பொறுத்தவரை ஐ.ஏ.எண்3902/87 என்ற விண்ணப்பத்திலும் குடிசை மாற்று வாரியத்தின்மீது தடை உத்தரவுகள் பெற்று இருக்கிறார். இந்தத் தடை உத்தரவுகள் குடிசை மாற்று வாரியத்திற்குச் சார்பு செய்யப் பட்டுள்ளன.



மேலும், சென்னை நகரில் இருக்கிற பல கோயில்களுக்குச் சொந்தமான குடிசைப் பகுதிகளைத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் எடுத்துக் கொண்டுள்ளது. இதில் மனை ஒன்றுக்கு ரூ.7,000 வீதம் விலை நிர்ணயம் செய்து அரசாணை எண். 337, நாள் 18-5-1981-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நீண்ட நாட்களாக ஈட்டுத் தொகை பெறப் படாமல் நிலுவையில் இருப்பதால், பல திருக்கோயில்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுத் தொகையான ரூ.7,000 மிகக் குறைந்த விலை என்று முறையீடுகள் வந்துள்ள நிலையிலும், இது ஓர் அரசின் கொள்கைத் திட்டம் என்பதால் உடனடியாகத் தீர்வு காண வேண்டுமென்று கருதி அரசு நிர்ணயித்துள்ள ஈட்டுத் தொகை ரூ.7,000-த்தையாவது நிர்ணயித்து உடன் செலுத்துமாறு குடிசை மாற்று வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இந்து சமய அறநிலையத் துறைக்கு, குடிசை மாற்று வாரியத்திடமிருந்து, சென்னை நகரிலுள்ள 15 திருக்கோயில்களுக்கு மட்டும் ரூ.33,06,828.70 கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. ஆனால், இது சம்பந்தமான நிலங்களைக் குடிசை மாற்று வாரியம் 1970-71 ஆம் ஆண்டிலேயே அனுபோகம் செய்து கொண்டு விட்டது. இந்த 15 ஆண்டுகளில், 33 இலட்சத்தை வங்கிகளில் முதலீடு செய்தி ருந்தால் குறைந்தது மூன்று மடங்கு தொகையாவது ஆகியிருக்கும்.

இந்த நிலையில், திருக்கோயில் நிலங்களில் குடிசை மாற்று வாரியம் பிரவேசிக்க முயன்றதினால் கோயில் நிர்வாகம் மேற்படி வாரியத்தின் மீது வழக்கு தொடர்ந்து தடை உத்திரவு பெற்றுள்ளது. எனினும் மேற்படி நிலை பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து பேசி ஆலயத்திற்குச் சேர வேண்டிய பணத்தை வாரியம் அளித்த பின்னர் நிலத்தை வாரியத்திடம் ஆலயங்கள் ஒப்படைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களில் மாறுபாடுகள் உள்ளன. வீட்டு வசதி வாரியமோ அல்லது குடிசைப் பகுதி மாற்று வாரியமோ, சென்னை நகரத்திற்

குள்ளேயோ அல்லது வெளியேயோ நிலத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், ரூ.7,000 என்றுதான் அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. அதை அதிகரிக்கவோ, குறைக்கவோ இந்த வாரியங் களுக்கு அதிகாரம் கிடையாது. அப்படி இருக்கையில், அறநிலையத் துறை ஏற்கெனவே பல இடங்களை வழங்கியிருக்கிறது.

வழங்கியிருக்கின்ற இடங்களுக்கு ரூ.7,000 என்று நிர்ணயித்து இருக்கிறபோது, இப்போது எடுத்திருக்கின்ற அந்த இடத்திற்கு ரூ.20,000 என்றும், ரூ.1 இலட்சம் என்றும் மதிப்பீடு என்று விவர அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரப் பதிவுத் துறையை வைத்துச் செய்கிறார்களா அல்லது வெளி மார்க்கெட்டிலே உள்ள நிலையை வைத்து முடிவு செய்கிறார்களா என்றும் தெரிய வில்லை. இருந்தாலும் இது மக்கள் பிரச்சினையாக இருப்பதினாலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு நடக்கும் பணி இது.

ஏற்கெனவே இருந்த அறநிலையத் துறை அமைச்சர் அவர்களோடும், அதிகாரிகளோடும், முன்னாலே இருந்த வாரியங் களின் தலைவர்களோடும் நேரடியாகப் பேசி, செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே பாதியிலே தடை வாங்கி இன்றைக்கு வேலைகளை நிறுத்தி இருக்கிறார்கள்.

காலதாமதம் ஏற்படுவதால் இந்த வேலைகளின் மதிப்பீடும் அதிகமாகும். பொது மக்களும் அடையாறு ஆற்றில் வெள்ளம் வரும்போது அந்த அபாயத்திற்கு ஆட்படுவார்கள். எனவே அந்த மக்களை மாற்று இடத்தில் குடியமர்த்த இந்தத் திட்டம் விரைந்து நடைபெற, தடையாணை வாங்கியிருக்கின்ற அறநிலையத் துறை, உடனடியாக அந்தத் தடையாணையை ரத்து செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! மனை ஒன்றுக்கு ரூ.7,000 என்பது,



விலை நிர்ணயம் செய்த அரசாணை எண்.337, நாள் 18-5-1981படி கோயில் நிலங்களில் ஏற்கெனவே ஆக்கிரமித்திருக்கின்ற நிலங்களைப் பொறுத்து, அந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பே இல்லாத நிலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற பிரச்சினை இருக்கிறது.

அந்த நிலப் பிரச்சினையில், மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை நிர்ணயிக்கிற விலைக்கு அறநிலையத் துறை ஒத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி, ஒரு கூட்டு ஆலோசனைக் கூட்டம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், அறநிலையத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கூட்டம் கூட்டப்பட்டு, அதற்கு ஒரு பரிகாரம் கண்டு, விரைவில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணை நிறைவேற்றப்பட்டு, அதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.



# வினாக்கள் – விடைகள்

## தமிழகத்தில் மீன்பிடித் தொழிற்பயிற்சிப் பள்ளி அமைத்தல்*

(வினா எண் . 5412) **திரு.சைதை சா.துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு.ப.உ.சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தமிழ்நாட்டில் கடற்கரையோரப் பகுதிகளில் ஏற்கெனவே மீன்துறையின் கட்டுப்பாட்டில் ஆறு மீனவர் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் புதிதாக மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏதும் அமைக்க உத்தேசம் தற்போதில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிற விவரத்தைச் சொன்னார்கள். அவை எந்த, எந்த இடங்கள் அதிலே ஒவ்வொன்றிலும் எவ்வளவு பேர்கள் பயிற்சி பெறுகிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

* 1987 ஏப்ரல் 22



**மாண்புமிகு திரு.ப.உ. சண்முகம்:** தலைவர் அவர்களே! சென்னை, கடலூர், நாகப்பட்டினம், மண்டபம், குளச்சல், தூத்துக்குடி ஆகிய 6 இடங்களிலே இப்பொழுது இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு இடத்திலும் 50, மண்டபத்தில் மட்டும் 60ஆக இருக்கிறது.

## கரூர், தாராபுரம் போன்ற பகுதிகளில் மாணிக்கக் கற்கள்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கரூர் வட்டத்தில் சின்ன தாராபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அருகே ஒரு மிகப் பெரிய காடு, பெப்பிலிமேடு என்று அழைக்கப்படும் அந்த இடத்தில் இதுபோன்ற கற்கள் கிடைக்கிறது. அந்த இடத்தை ஆய்வு செய்தால் மிகப் பெரிய அளவுக்கு விலை உயர்ந்த கற்கள் கிடைக்குமென்று தெரிகிறது. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சின்ன தாராபுரம், காங்கேயம் (பெரியார் மாவட்டத்திலும்), மணவாடி, கரூர், ஐயர்மலை (திருச்சி மாவட்டத்திலும்) ஆகிய இடங்களில் மாணிக்கக் கற்களில் மணிக் கற்கள் என்று கிடைக்கின்றன. அதுவும் சிதறிய நிலையில்தான் இருக்கிறது. பெரிய அளவில் செயல்படுவதற்கான நிலைமைகள் இல்லை. அந்தப் பகுதிகளிலே சிலர் வசதியாக இருப்பதாகச் சொல்கிறார்கள். பலத்த மழை பெய்யும் காலத்தில், அந்தக் கற்கள் மேலே தெரிகிறது. நிலத்தின் சொந்தக்காரர்கள் அவைகளை எடுத்து, விற்று காசாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது பெரிய அளவுக்கு உள்ள சுரங்கத் தொழிலாக எண்ணும் அளவுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 1987 ஏப்ரல் 23 அன்று திருமதி பா. வளர்மதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

## ஊனமுற்றவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குவதில் முன்னுரிமை*

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, பஸ் பாஸ் வழங்குவதில் உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படுமா? தற்போது இந்த பஸ்களில் இரண்டு வழிகள் இருக்கின்றன. முன்பக்கம் ஒரு வழியும், பின்பக்கம் ஒரு வழியும் இருக்கிறது. முன்பக்கத்தில் பெண்களும், பின்பக்கத்தில் ஆண்களும் ஏறவேண்டு மென்ற முறையை கொண்டு வந்தால் இந்த இடநெரிசலைத் தவிர்க்கலாம். எனவே, இந்த முறை நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, ஒரு வழியிலே ஏறி இன்னொரு வழியிலே இறங்குவதற்காகதான் அந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பெண்களுக்கென்று தனியாக முன்பக்கம் அமைப்பது என்பது சில சிக்கல்களை ஏற்படுத்திய காரணத்தால்தான் அது மீண்டும் கைவிடப்பட்டிருக்கிறது.

உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். மாணவர்களைப் பொறுத்தவரையில் 300 பேருக்கு ஒரு தொகுதியாக இருக்கிறதால் உடல் ஊனமுற்றவர்கள் வருகிறபோது சிரமம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. வேண்டுமானால் அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு உடல் ஊனமுற்றவர்கள் வருகிறபோது முன்னாலே கொடுத்து அனுப்ப வேண்டுமென்று சர்க்குலர் அனுப்புகிற நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.

## மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்**

(வினா எண். 13021) திரு. செ. செம்மலை மற்றும் **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் அரசிடம் உள்ளதா?

*1987 ஏப்ரல் 24 அன்று திருமதி பா. வளர்மதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

**1987 ஏப்ரல் 24



(ஆ) ஆம் எனில், அவர்களுக்கென்று தனி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் அரசிடம் உள்ளது. (ஆ) அவர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 39 இனங்கள் இருப்பதாக இங்கே சொன்னார்கள். அந்த இனங்கள் எவை எவை என்று அறிய விரும்புகிறேன். கர்நாடகா மாநிலத்தில் ஏ,பி,சி, டி என்று பிரித்து ஒவ்வொரு இனத்திற்கும் இவ்வளவு இடங்கள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இங்கேயும், அதேபோன்ற நடைமுறையைப் பின்பற்றினால் குறிப்பாக சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள், வன்னியர்கள், வேட்டு வர்கள், சாணார், முக்குலத்தோர், மீனவர், நாயக்கர் போன்ற பொருளாதாரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலிருக்கின்ற மக்கள் பயனடைய வாய்ப்பாக இருக்கும். ஆகவே அந்த நடைமுறையை இங்கேயும் மேற்கொள்ள இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.ப.உ.சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாநிலத்தில் இருப்பதுபோல செய்கின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. அவர் இங்கே கேட்ட பட்டியல் விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

## சென்னை பேசின்பிரிட்ஜ் பகுதியில் புதிய மின் நிலையம்*

(வினா எண் 12153) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

*1987 ஏப்ரல் 24

(அ) சென்னை பேசின்பிரிட்ஜ் பகுதியில் புதிதாக மின்நிலையம் அமைக்க மைய அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மாவட்டங்களில் மக்கள் நீதிமன்றங்கள்*

(வினா எண். 10805) **திரு. சைதை சா. துரைசாமி :** டி.ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

மாவட்டத் தலைநகரங்களில் மக்கள் நீதிமன்றங்கள் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு.சி.பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ஆம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த மக்கள் நீதிமன்றங்கள் எப்போது துவக்கப்படும்? எந்தெந்த மாவட்டத் தலைநகரங்களிலே முதன் முதலிலே அமைக்க உத்தேசிக்கப்பட்டு இருக்கிறது என்கிற விவரத்தையும், இந்த மக்கள் நீதிமன்றத்தில் என்னென்ன வழக்குகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.சி.பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பரிட்சார்த்தமாக 15-2-1986 அன்று தமிழகத்திலே மக்கள் நீதிமன்றம் முதன் முதலாகத் துவக்கப்பட்டு அது நல்ல வெற்றியை, பலனைத் தந்திருப்பதை அரசு அறிந்திருக்கிறது. அதன் காரணமாக அனைத்து மாவட்டத்திற்கும் இதை நீட்டிக்க வேண்டும் என்று அரசு முடிவு எடுத்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. தகராறுகளைச் சமூகமாகத் தீர்த்து

*1987 ஏப்ரல் 28





வைப்பதின் மூலம் நீதிமன்றங்களில், வழக்காடுவதைத் தடுத்திடுவது இதனுடைய முதல் நோக்கம். அடுத்து, நீதிமன்றங்களிலும், நடுவர் மன்றங்களிலும் முடிவுறாமல் இருக்கும் வழக்குகளையும், தகராறுகளையும் உயர்நீதி மன்றம் ஏற்கெனவே அனுமதித்திருக்கிற நடைமுறையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடைய இசைவைப் பெற்றுத் தீர்த்து வைத்தல் இந்த மக்கள் நீதிமன்றத் தினுடைய அடுத்த நோக்கம். இதில் குறிப்பாக ஏழைகள், தாழ்த்தப் பட்ட மக்கள், பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு முன்னுரிமை தந்து, முதற்கட்டமாக எடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த நீதிமன்றங்கள் பெண்கள் வழக்குகளை விசாரிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெண்கள் வழக்குகள் என்றால், வரதட்சணை போன்ற அந்த வழக்குகளையா அல்லது மாமியார் - மருமகள் தகராறில் தீ வைத்துக் கொளுத்திக் கொள் கிறார்களே, அதுபோன்ற வழக்குகளையா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.சி.பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பத் தகராறு வழக்குகளை இதில் முன்னுரிமை கொடுத்து விசாரிக்க வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வரதட்சணை, கற்பழிப்பு போன்ற கொடிய வழக்குகள் சம்பந்தப்பட்டவை பொறுத்தவரைக்கும், தனியாக, பெண்களுக்காக - பேமிலி கோர்ட்ஸ் - குடும்ப நீதி மன்றங்கள் என்று அனைத்து மாவட்ட அளவிலேயும் கொண்டுவர அரசு முடிவு எடுத்து இருக்கிறது.



# கவன ஈர்ப்பு

## சைதாப்பேட்டையிலுள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான வசதிகள் இல்லாமை*

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ‘‘சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இயங்கும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குத் தனியாக அங்கீகாரம் வழங்கியும், புதிய கட்டிடங்கள், ஆய்வகங்கள், விளையாட்டு மைதானம் மற்றும் மாணவிகளுக்கு இருக்கை வசதிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு.சி.பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

சைதாப்பேட்டையில் உள்ள அரசு கல்வியியல் கல்லூரியைச் சார்ந்த மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு வரை பயின்று

*1987 ஏப்ரல் 28



வந்த மாணவியர்களுக்கு என்று தனியே அரசு (பெண்கள்) உயர் நிலைப் பள்ளி தொடங்க ஆணையிடப்பட்டு அப்பள்ளி 1984-85-லிருந்து தனி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக இயங்கி வருகிறது.

அப்பள்ளி தற்சமயம் மாதிரி மேல்நிலைப் பள்ளி கட்டிடத்தில் ஒரு பகுதியிலேயே செயல்பட்டு வருகிறது. அரசு கல்வியியல் கல்லூரி வளாகத்தில் மேற்சொன்ன பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு என்று குறிப்பாக ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்ய கல்லூரிக் கல்வி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

1986-87-ல் மேற்கண்ட சைதாப்பேட்டை அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.1.30 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கட்டிடம் கட்டவும், ரூ.30,000 செலவில் ஆய்வுக்கூடத் தளவாடங்கள் அளிக்கவும் ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரசு நிதிநிலை இடம் தருவதற்கேற்ப இனிவரும் ஆண்டுகளில் அப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் மற்றும் ஏனைய வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அந்த விவர அறிக்கையில் கட்டிடம் கட்டுவதற்கான இட ஒதுக்கீடு அரசு பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக் கின்றார்கள். அந்தப் பரிசீலனையை விரைவில் முடித்து இடம் ஒதுக்கீடு செய்யவும், ஆய்வகங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும், புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் நடப்பு ஆண்டிலேயே பணிகளைத் தொடங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.சி.பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அரசு கல்வியியல் கல்லூரி வளாகத்தில் தனியாக ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்ய கல்லூரி இயக்குநர் அவர் களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. அரசு விரைவில்

நடவடிக்கை எடுக்கும். ரூ.ஒன்றரை இலட்சம் மதிப்பில் அந்தப் பள்ளியினுடைய ஆய்வுக் கூடக் கட்டிடம் கட்டுவதற்கும், ஆய்வு கூடத் தளவாடங்களுக்கும் 1986-87 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. மேற்கண்ட வசதிகளைச் செய்துதர அரசு தக்க நடவடிக்கையை ஆய்ந்து எடுக்கும்.



# மாநகராட்சி மானியக் கோரிக்கை*

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாநகராட்சி மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில உணர்வுகளைச் சொல்லி, எனது உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

## சென்னை மாநகராட்சியின் 300ஆம் ஆண்டு விழா

இந்தியாவிலேயே சென்னை மாநகராட்சிதான் இன்றைக்கு முதன் முதலாக அதனுடைய 300-வது ஆண்டினைக் கொண்டாடுகிற வகையில், பழம் பெரும் மாநகராட்சியாக விளங்கிக் கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட மாநகராட்சியினுடைய அந்தத் தொன்மையை நினைவுபடுத்துகிற வகையில் மாநகராட்சியினுடைய பணிகளைச் செம்மையாகவும், சிறப்போடும் சென்னை மாநகர மக்களுக்காக, நல்ல முறையில் செய்ய வேண்டும் என்ற அந்த அடிப்படையில், மாநகராட்சி, அரசுக்கு அனுப்பியிருக்கிற நல்ல பல திட்டங்களை முழுமையாக ஏற்று, இந்த 300-வது ஆண்டு விழா நிகழ்ச்சியின் வாயிலாக அவைகளைச் செய்யவேண்டும், நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

*1987 ஏப்ரல் 28

## சென்னை நகர மேம்பாட்டுக் குழு

தமிழகத்தினுடைய நாயகன், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது தலைமையில் சென்னை நகர மேம்பாட்டுக் குழு என்ற ஒரு குழுவை ஏற்கெனவே அமைத்து, பல வளர்ச்சித் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஆகவே அந்தக் கூட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு கூட்டி, 300-வது ஆண்டு விழா நினைவின் வாயிலாக, என்னென்ன அபிவிருத்தித் திட்டங்களை சென்னை மாநகராட்சி நிறைவேற்றலாம் என்பதையும், எப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றினால், 300-வது ஆண்டு விழா பயன் உள்ளதாக இருக்கும் என்பதையும் ஆராய்ந்து, அந்தக் காரியத்தை மேற் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எங்களைப் பொறுத்தமட்டில் என்றைக்கும் ஆக்கபூர்வமான பணிகளை, மக்களுக்குத் தேவையான பணிகளைச் செய்வதில் இந்த அரசு குறியாக இருந்து பணியாற்றிக் கொண்டு வருகிறது என்பதற்காகத்தான், 300-வது ஆண்டு விழாவினை வைக்க வேண்டும் என்ற அடிப்படைக் கருத்தை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

## மாநகராட்சி அதிகாரிகளுக்குப் பாராட்டு

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், சிறப்பாகவும், செம்மையாகவும், அதுவும் குறிப்பாக மாநகராட்சியினுடைய தனி அதிகாரி அவர்களும், ஆணையாளர் அவர்களும் அவர்களோடு இணைந்து பணியாற்றுகிற அனைத்து அதிகாரிகளும் செயல்படு கிறார்கள். காலையிலே 7 மணிக்குப் பார்ப்பீர்களேயானால், ஏதாவது ஒரு சாலையிலே நின்று கொண்டு அங்கே மக்களது குறைகளைப் பார்வையிட்டு, மக்கள் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



## மாநகராட்சி வருவாயில் பாதி சம்பளமாக...

இன்றைக்கு மாநகராட்சியினுடைய வருவாய் எந்த அளவிற்கு இருக்கிறது என்றால், அந்த வருவாயில் பாதிக்கு மேல் சம்பளமாகவே போய்விடுகிற நிலைமையிருக்கிறது. மீதிப் பணத்தை வைத்துக் கொண்டுதான் இங்கே இவ்வளவு நல்ல காரியங்களை - வல்ல வனுக்குப் புல்லும் அயுதம் என்று சொல்வார்களே, அதைப்போல இன்றைக்கு மாநகராட்சி தனது காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. பம்பாய் மாநகராட்சியை எடுத்துக் கொண்டால் அதற்கு 800 கோடி ரூபாய் வருமானம். ஆனால் நமது மாநகராட்சி யினுடைய வருவாய் 40 கோடி ரூபாய்தான். இந்த நிலையில் சென்னை மாநகரின் மக்களது தேவைகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

## பணியாளர்கள், நிதி பற்றாக்குறை

90 வட்டங்களாக இருந்தது 120 ஆக மாறி இன்றைக்கு 150 வட்டங்களாக ஆகி பல புதிய பகுதிகளையும் சேர்த்து மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கும் போது, அதற்குப் போதுமான பணியாளர்கள், போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், இன்றைக்குப் பல வளர்ச்சிப் பணிகள் தடைபடுகின்றன. ஆகவே வருவாயைப் பெருக்கியாக வேண்டும். 15 ஆண்டுக் காலமாக சென்னை மாநகரத்து மக்களுக்குப் புதிய வரிகளை நாம் போடவில்லை. எந்த வரியும் இல்லாமல், இன்றைக்கு மாநகராட்சி பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

## தன்னிறைவுத் திட்டம் போன்று தனித் திட்டம்

தினமும் சென்னைக்கு வருகின்ற மக்கள் தொகை, இருக்கின்ற மக்கள் தொகை இத்தனை பேர்களுக்கும் சேர்த்து அடிப்படை வசதி களைக் குறைந்த வருவாயில் சென்னை மாநகராட்சி நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது. எனவே அதிக அளவு பணிகளை நிறைவேற்ற தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எப்படித் தமிழகத்தினுடைய நாயகர், புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டு வந்து, ஊராட்சி மன்றங்களுக்கு எல்லாம் நிதி ஒதுக்கீடு செய்து, சாலை வசதிகளையும், மருத்துவ வசதிகளையும் செய்தார்களோ, அதைப்போல, சென்னை மாநகராட்சிக்கு என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, இந்த 300-வது ஆண்டு விழாவிலே தேவையான அனைத்துத் திட்டங்களையும் நிறை வேற்றுகிற வகையில், தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

## நகராட்சி, ஊராட்சி, பஞ்சாயத்து அலுவலகங்களில் முதல்வர் படம்

அதைப்போல் தமிழகத்தினுடைய அனைத்து நகராட்சி, ஊராட்சி மன்றங்களிலும், பஞ்சாயத்து அலுவலகங்களிலும் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய படம் வைக்கப் படவேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

## நிதி ஒதுக்காததால் தேங்கிக் கிடக்கும் பணிகள்

தனியார் தெருக்களுக்குத் தமிழகத்தினுடைய நாயகன் அவர்கள், தாயுள்ளத்தோடு 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் 5 கோடி ரூபாய் திட்டத்தில் சென்னை மாநகரத்தில் இருக்கின்ற அனைத்துத் தனியார் தெருக்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டுமென்ற உத்தரவினை வழங்கி இருக்கிறார்கள். உத்தரவு வழங்கப்பட்டு மாநகராட்சியாலும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு துறையாலும் இன்றைக்கு அந்தப் பணிகளெல்லாம் ஆயத்தமான நிலையிலே இருக்கின்றன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கிடைக்காத காரணத்தால் அந்தப் பணி துவங்கப்படாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து அந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்து, அந்த அளப்பரிய பணியை இதுவரையில் யாரும் நினைக்காத அந்தப் பணியைத் தமிழகத்தினுடைய மூலவர் அவர்கள் செய்திருக்கிறார்கள். எனவே



அந்தப் பணியை விரைவாகத் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## பத்திரப் பதிவு அலுவலகத்திலேயே பெட்டர்மெண்ட் டாக்ஸ்

இனிமேல், சென்னை மாநகரத்தில் புதிதாக எந்தத் தனியார் லே-அவுட்டும் வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், தனியார் தெருக்கள் வராமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், மாநகராட்சியும், பத்திரப் பதிவுத்துறையும் இணைந்து பணியாற்ற வேண்டும். காலியாக இருக்கின்ற மனைகள் பதிவு செய்யப்படும் போது, அந்தப் பெயர் மாற்றம் செய்யும்போது, அதை இன்னொரு வருக்கு விற்கும் போது அதற்குத் தேவையான 'பெட்டர்மெண்ட் டாக்ஸ்' அவர்கள் செலுத்த வேண்டிய வரி முழுவதையும் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்தில் செலுத்திவிட்டால் அது மாநகராட்சிக்கு வந்து சேர்ந்துவிடும். மாநகராட்சி அடிப்படை வசதிகளைச் செய்து தந்துவிடுவார்கள். ஆகவே தனியார் தெருக்கள் என்ற பிரச்சினையே வராது.

இன்றைக்கு 'ரியல் எஸ்டேட்' என்ற பெயரில் அவர்கள் பல நேரங்களில் சம்பாதிப்பதற்காக எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல் ஆங்காங்கே நிலங்களை விற்று விடுகிறார்கள். வருவாய் உள்ளவர்கள், ஏதோ இடம் கிடைத்தால் போதும் என்று குறைந்த விலையிலே எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் இடத்தை வாங்கி விடுகிறார்கள். இவ்வாறு வாங்கப்படுவதால் அரசுக்கு அந்தத் தொல்லை வந்து சேருகிறது. ஆகவே, நாம் அதிகமாக அதிலே கவனம் செலுத்தி, கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

## நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து மாநகராட்சிக்கு...

அதேபோல் சென்னை மாநகரத்தினுடைய அனைத்துச் சாலைகளையும் மாநகராட்சியே பராமரிக்க வேண்டும். உதாரணமாக,

அண்ணா சாலையையும், பூந்தமல்லி நெடுஞ்சாலையையும் 'நேஷனல் ஹை-வேஸ்' பராமரித்துக் கொண்டிருக்கிறது. இதனால் பல சிரமங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இவ்வளவு மிகப் பெரிய சாலைகளில் மரங்கள் இல்லை.

ஆகவே மற்ற பகுதிகளையெல்லாம் பராமரித்துக் கொண்டிருக் கிற மாநகராட்சியே, சென்னை மாநகரத்திற்குள்ளாக இருக்கின்ற அனைத்துச் சாலைகளையும் பராமரிக்க வேண்டுமென்கிற வகையில் திருத்தம் கொண்டுவந்து நெடுஞ்சாலைத் துறையிடமிருக்கின்ற அந்தப் பொறுப்பை மாநகராட்சி பெற வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## வாகன வரிகள் மாநகராட்சிக்கே...

அதைப்போல் வாகன வரி, ஒட்டுமொத்தமாக மாநகராட்சிக்கு வருவாய் இல்லாமல் இருக்கின்ற நேரத்தில், அனைத்து வாகன வரிகளிலும் பெரும் பகுதியை மாநகராட்சிக்கே செலுத்த வேண்டு மென்ற முறையைக் கட்டாயமாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

## ஆந்திராவைப் போன்று வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குக

அதைப்போல், சென்னை மாநகராட்சியினுடைய தேர்தலை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சி யினுடைய தேர்தலை நடத்தலாம். இன்றைக்கு ஆந்திராவிலேகூட நடத்தியிருக்கிறார்கள். அங்கே வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. பலமுறை இது குறித்து இந்த மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அடையாள அட்டை சென்னை மாநகரத்தில் உள்ள வாக்காளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கிய பிறகுதான் தேர்தலை நடத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



## வட்டங்கள்தோறும் வாழுவோர் பட்டியல்

அதைப்போல், சென்னை மாநகரத்திலே இருக்கின்ற குடியிருப்புகள் நாள்தோறும் பெருகி வருகின்றன. எத்தனை வீடுகள் இருக்கின்றன; எவ்வளவு பேர் வாடகை வீடுகளில் குடியிருக் கிறார்கள் என்கிற விவரங்கள் தெரியவில்லை. சென்னை மாநகரத் திலே இருக்கின்ற ஒவ்வொரு வட்டத்திலும் அந்த வட்டங்களில் எத்தனை வீடுகள் இருக்கின்றன; அத்தனை வீடுகளிலும் எத்தனை வாடகை வீடுகள் இருக்கின்றன; அந்த வாடகை வீடுகளில் யார் யார் குடியிருக்கிறார்கள்; அவர்கள் எத்தனை ஆண்டுக் காலமாகக் குடியிருக்கிறார்கள்; வேறு எங்கே வீடு மாற்றிச் சென்றிருக்கிறார்கள் என்கின்ற விவரங்களையெல்லாம் அந்த வட்ட அலுவலகத்திலே குறித்து வைத்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## சவரத் தொழிலாளர்களும், சலவைத் தொழிலாளர்களும்

அதேபோல் இன்றைக்கு முடிதிருத்துவோர் கடைதிறக்க விண்ணப்பிக்கிறார்கள். அதிலும் சில சட்ட விதிகளைச் சொல் கிறார்கள். சவரத் தொழிலாளர்கள் புதிதாக பார்பர் ஷாப் அமைக்க வேண்டும் என்று சொன்னால் கட்டிட வரைபடம், கழிப்பறை, குளியல் அறை, கழிவு நீர் வடிகால் வசதி இவைகள் எல்லாம் இருந்தால்தான் அனுமதி வழங்கப்படுகிறது.

ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்வது இந்த முறை இருந்தால் நிச்சயமாக சவரத் தொழிலாளர்கள் கடை வைக்க முடியாது. காரணம் வாடகைக்கு அவர்கள் கடை உரிமையாளரிடம் சென்று இடத்தைக் கேட்கிறார்கள். வாடகைக்கு இருக்க வேண்டிய இடத்தில் இத்தனை வசதிகளையும் செய்து தர முடியுமா? ஆகவே இந்த விதிகளைத் தளர்த்த வேண்டும். இந்த விதியைத் தளர்த்தி அவர்கள் தொழில் தொடங்க ஏதுவாக சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## மேற்கு சைதையில் சலவைத் துறை

எனது தொகுதி சலவைத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதி. அங்கே மேற்கு சைதாப்பேட்டைப் பகுதியில் மாநகராட்சி ஆணையாளர் அவர்களும், தனி அதிகாரி அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். சலவைத் தொழில் செய்வதற்கு இன்றைக்குச் சரியான இடம் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் சிரமப்படுகிறார்கள். சீனத்துப் பெரும் சுவரைப்போல் இன்றைக்கு சென்னையில் அடையாறு ஆற்றில் கரை கட்டுகிற காரணத்தால் அங்கே சலவைத் தொழிலாளர்கள் ஆற்றில் இறங்கி துணிகளைத் துவைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு உடனடியாக ஒரு சலவைத் துறையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

## மாட்டு வண்டிகளை மாற்ற வேண்டும்

அதேபோல் சென்னை மாநகரத்தில் குப்பைகளை அகற்றுவதற்கு மாட்டு வண்டிகளை உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம்.இந்த மாட்டு வண்டிகளை எல்லாம் இந்த 300-வது ஆண்டு விழாவில் மாற்றிவிட்டு புதிய வண்டிகளை மாநகராட்சியின் எல்லா வட்டத்திற்கும் வாங்கி, இந்த மாட்டு வண்டிகளை 300-வது ஆண்டு விழாவின் நினைவாக ஒழிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

## சேலம், திருச்சி நகரசபைகளை மாநகராட்சியாக்க வேண்டும்

சேலம், திருச்சி போன்ற நகரசபைகளை மாநகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## பாதாள இரயில்த் திட்டம்

கல்கத்தாவிற்கு நான் மதிப்பீட்டுக் குழுவில் சென்றிருந்தேன். அங்கே பாதாள இரயில்த் திட்டம் மிக நல்ல முறையில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே வளர்ந்து



வருகின்ற சென்னை மாநகரம் இன்னும் எதிர்பார்க்கும் அளவுக்கு மேல் மக்கள் தொகை வந்து குவிகின்ற சென்னை மாநகரம் எதிர்காலத்தில் போக்குவரத்து நெருக்கடியிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்று சொன்னால் அப்படிப்பட்ட ஒரு இரயில்த் திட்டத்தை மேற்கொள்ள அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## மெரீனா கடற்கரையை அழகுபடுத்த மாற்றுத் திட்டம்

சென்னை மாநகரத்தில் இயற்கை எழிலோடு கூடிய மெரீனா கடற்கரை - இன்றைக்கும் எல்லோரையும் உலகத்தில் இருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கக் கூடிய இயற்கையான அந்த மெரீனா கடற்கரையை அழகுபடுத்தவும், எழில் ஊட்டவும் சுற்றுலாப் பயணிகள் அதைப் பார்த்து பரவசப்படுகின்ற வகையில் இன்னும் மிகப் பெரிய அளவில் அதற்கு ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்து அந்தக் கடற்கரையை அழகுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## பூங்காக்களை தனியார் தொழிற்சாலைகள் பராமரிக்க நடவடிக்கை

அதேபோல் சென்னை மாநகரத்தில் பல பூங்காக்கள் இன்றைக்குத் தக்க பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. சென்னை மாநகர மக்களின் ஓய்வுக்காக, கடற்கரைக்கு வர இயலாதவர்கள் ஆங்காங்கு அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற பூங்காக்களுக்குச் சென்று ஓய்வு எடுக்கவும், மாணவர்கள் படிக்கவும், மாலை நேரத்தில் ஓய்வாக இருக்க இந்தப் பூங்காக்களைப் பராமரிக்க வேண்டும். அதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால், சென்னையில் உள்ள ஒவ்வொரு தனியார் தொழிற்சாலையும் இந்தப் பூங்காக்களைப் பராமரிக்க வேண்டும். அதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால், சென்னையில் உள்ள ஒவ்வொரு தனியார் தொழிற்சாலையும் இந்தப் பூங்காக்களைப் பராமரிக்க வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுத்தால் பயன் உள்ளதாக

இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

### தியேட்டர்கள் கட்டும் பணி

சென்னை மாநகரத்தினுடைய வருவாயைப் பெருக்க தியேட்டர்கள் கட்டப்படும் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது. ஆகவே தியேட்டர்களைக் கட்டுகின்ற முடிவு என்ன ஆனது என்று தெரியவில்லை. அதையும் விரைந்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

### கொசு ஒழிப்புக்கு மாற்று வழி

அதேபோல் சென்னை மாநகரத்தினுடைய கொசுத் தொல் லையைப் போக்க ஏதாவது ஒரு புதிய மாற்று வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இன்றைக்குப் பல ஆறுகள் சென்னை மாநகரத்திலே கொசுக்களை உற்பத்தி செய்கின்றன. எனவே வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் கொண்டு வந்து அவைகளை நாம் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### எழும்பூர் விளையாட்டு மைதானத்தை மாநகராட்சிக்கு மாற்றுக!

சென்னை எழும்பூர் விளையாட்டு மைதானம் இன்றைக்குத் தனியார் ஒருவருடைய நிர்வாகத்தில் இருக்கிறது. அந்த முறையை மாற்ற வேண்டும். டென்னிஸ் என்ற பெயரில் தனியார் ஒருவர் அதில் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார். எனவே அந்த ஸ்டேடியத்தை மாநகராட்சியே நேரடியாக நிர்வாகம் செய்து விளையாட்டு வீரர்களுக்குப் பயன் தருகின்ற வகையில் அதை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



# வினாக்கள் – விடைகள்

### சைதை - ஆலந்தூர் சாலை அடையார் ஆற்று மையப் பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பு*

(வினா எண்.12157) **திரு. சைதை சா.துரைசாமி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சைதை - ஆலந்தூர் சாலை கஸ்டம்ஸ் காலனிக்கும், ஓல்டாம்ஸ் பாட்டரி கம்பெனிக்கும் நடுவிலுள்ள அடையாறு ஆற்றின் மையப் பகுதிகளைத் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (அ) தனியார் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நான் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கின்ற இடத்தை, தனியார் சொந்தமாக்கி வைத்திருக்கிறார்கள். அடையாறு ஆற்றின் இரண்டு

---

* 1987 ஏப்ரல் 29

பக்கத்திற்கு நடுவே, அதன் மையப் பகுதியிலே விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆற்றின் நடுவே இருக்கின்ற ஓர் இடம் எப்படித் தனியாருக்குச் சொந்தமாக இருக்க முடியும்? ஆகவே, அப்படி ஓர் இடத்திற்குப் பட்டா வழங்கியிருந்தால், அதை எப்படி வழங்கினார்கள் என்ற விவரத்தை அறிவதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்.

எனவே, அந்த இடத்தில் இப்போதுகூட நீங்கள் பார்வை இடலாம். இன்றைக்குப் பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை. நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களேகூட அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். அவர்கள் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிந்து, பட்டா வழங்கியிருந்தால், அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே! நிலவரித் திட்ட அளவையின்படி 1966 ஆம் ஆண்டு புல எண்கள் 12 மற்றும் 13 உருவாக்கப்பட்டு, புல எண் 12 ரயத்துவாரி புஞ்சையாகவும், புல எண் 13 சர்க்கார் புறம் போக்காகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1966ஆம் ஆண்டு நிலவரித் திட்ட அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் அடிப்படையில் மேற்படி பல எண்கள் உள்பிரிவும், வகைப்பாடு மாற்றங்களும் செய்யப்பட்டுப் பதிவேட்டில் ஏற்றப்பட்டுள்ளன. 1966 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட பட்டா ஆவணங்கள் எல்லாம் தற்போது கிடைக்கப் பெறவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. மேற்படி பல எண் 12/1977-ல் 12-1 முதல் 12/14 வரையிலும் உள்பிரிவு செய்யப் பட்டு, பல்வேறு நபர்கள் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ரயத்துவாரி புஞ்சை என்று வகைப்பாடு செய்யப்பட்ட புல எண் 12 இல் மட்டுமே இத்தகைய உள் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புல எண் 1 மற்றும் 13 ஆகிய இரண்டும் சர்க்கார் புறம்போக்கு (அடையாறு) என்று வகைப்பாட்டுடன் தொடர்ந்து பதிவேட்டில் இருந்து வருகின்றன. இவ்விரு புல எண்கள் எவருக்கும் உள் பிரிவு செய்து பட்டா வழங்கப்படவில்லை. தனியார் நிலமாக வகைப்படுத்





தப்பட்டுள்ள புல எண் 12-ல் காய்கறி, கீரை முதலியன பயிரிடப்பட்டு வருகின்றன. அந்த 12 புல எண் தனியர் பெயரிலே இருந்து வருவது ஆக்கிரமிப்புதான் என்று இருக்குமானால், அதன்மீது நடவடிக்கை எடுக்க நாம் முயற்சி செய்யலாம். அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை; அதைப்பற்றி ஆராய்ந்து வேண்டுமானால், அது ஆக்கிரமிப்பாக இருந்தால், அதை அகற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாற்றின் இரண்டு கரைகளையும் அளந்து பார்த்தால் எவ்வளவு இடம் இருக்கிறது என்பதையும், அப்படி அந்த அடையாற்று அளவைத் தெரிந்து கொண்டால், இப்போது நான் சொல்கிற இடம் ஆக்கிரமிப்பா அல்லது தவறுதலாகப் பட்டா வழங்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்த இடத்திற்குத் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டிருக் கிறது என்பது உண்மையா என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு புகாராக என்னிடத்தில் எழுதித் தருவாரானால், அதைப்பற்றிய குறிப்புகளைப் பெற்று நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னையில் புதிய பால் பண்ணை*

(வினா எண் 2567) திரு.இரா. தாமரைக்கனி மற்றும் **திரு. சைதை சா.துரைசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னையில் மேலும் புதிதாகப் பால் பண்ணைகள் தொடங்கப்படுமா?

(ஆ) தற்போது எத்தனை பால் பண்ணைகள் உள்ளன?

* 1987 ஏப்ரல் 29

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (அ) ஆம். சென்னையில் மேலும் புதிதாக ஒரு பால் பண்ணை துவங்கப்பட இருக்கிறது. (ஆ) சென்னையில் உள்ளது இரண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் - விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவங்கப்பட இருக்கின்ற பால் பண்ணை எப்போது துவங்கப்படும்? சென்னை நகரில் தானியங்கி பால் நிலையங்கள் பெருமளவிற்கு மக்களுக்குப் பயன்படும் என்ற காரணத்தால் அந்தத் தானியங்கி பால் நிலையங்களை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தானியங்கி பால் அகத்தால் பயனும் இருக்கிறது. அதனால் சமூக விரோதிகள் அதிகமான பாலை எடுத்துத் தனியாக வியாபாரமும் செய்கிறார்கள் என்ற இந்த இரண்டையும் உத்தேசித்துப் புதிதாக மேலும் விஸ்தரிக்கலாமா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## குதிரைப்பந்தய இடத்தைப்பற்றி...*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தய சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற மொத்த இடத்தின் பரப்பளவு எவ்வளவு? அதே இடத்திற்கு அதிகமாகவே அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

---

**★ 1987 ஏப்ரல் 29 அன்று திருமதி பா. வளர்மதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.**



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 160.86 ஏக்கர் நிலம் அவர்களுக்குக் குத்தகையாக 99 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதைவிடக் கூடுதலாக ஆக்கிரமித்திருக்கிறார்களா என்ற விவரம் என்னிடம் இல்லை. அப்படி ஆக்கிரமித்திருப்பார்களேயானால், அதுபற்றி தனி நடவடிக்கை எடுக்கப்படும்.



# கவன ஈர்ப்பு

## வேளச்சேரி குடிநீர்த் திட்டத்தில் சைதை, மடுவன்கரை பகுதிகள் இணைக்கப்படாதது*

**திரு.சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே! சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கும் வாரியத்தின் வேளச்சேரி குடிநீர் வழங்கும், திட்டத்தில் சைதை, மடுவன்கரை பகுதிகள் இணைக்கப் படாததால் குடிநீர்ப் பற்றாக் குறையினால் இப்பகுதிவாழ் மக்களுக்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு.க.இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

மடுவன்கரை, சென்னை நகரப் பழைய பகுதியின் தெற்குக் கோடியில், வட்டம் 147இல் வேளச்சேரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி

* 1987 ஏப்ரல் 29



இப்பகுதியின் மக்கள் தொகை 22,771 ஆகும். தற்போது இப்பகுதிக்கு மண்டலம் 8 'சி' பிரதானக் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. நீர் வழங்கும் அமைப்பின் கடைக்கோடியில் இருப்பதால் இப்பகுதிக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை இருந்து வருகிறது.

ஆகவே மாற்று ஏற்பாடாக 147 ஆம் வட்டத்தில் ஆங்காங்கே 39 நீர்த் தொட்டிகள் வைத்து லாரிகளின் மூலம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் குடிநீர் வழங்குகிறது. 1978-ல் சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக்களில் வேளச்சேரியும் ஒன்றாகும். இப்பஞ்சாயத்துக் களுக்கு, ஒருங்கிணைந்த பொதுக் குழாய்கள் மூலமாகக் குடிநீர் விநியோகிக்க ரூ.206 இலட்சத்திற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆனால் வேளச்சேரிப் பகுதியில் நிலத்தடி நீர் குடிநீருக்கு உகந்ததாக இல்லாததால் கீழ்நிலைத் தொட்டி, மேல்நிலைத் தொட்டி மற்றும் குடிநீர் வழங்கும் குழாய்கள் பதித்தல் ஆகிய வேலைகள் மட்டும் எடுத்து முடிக்கப்பட்டன. தற்பொழுது சென்னை நகருக்கு வழங்கப் பெறும் குடிநீரை அதிகப்படுத்துவதற்காகத் தெற்குக் கடற்கரையோரப் புதிய மகாபலிபுரம் சாலையின் 5 கிலோ மீட்டரிலிருந்து 9 கிலோ மீட்டருக்குள் 14 ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்காக ரூ.250 இலட்சத்துக்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கான வேலையும் குழாய்கள் பதிப்பதற்கான வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

இத்திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது கானகம், தரமணி, வேளச்சேரி பகுதிகளுக்கு நீர் வழங்கப்படும் வாய்ப்புள்ளது. அத்தருணத்தில், பழைய சென்னை நகர விநியோகக் குழாய்களை இத்திட்டத்துடன் இணைத்து மடுவன்கரைப் பகுதிக்கும் வழங்கும் குடிநீரை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இது தவிர, தற்சமயம் புது மகாபலிபுரம் சாலையின் 9 கிலோ மீட்டரிலிருந்து 13 கிலோ மீட்டருக்குள் உள்ள அக்கரைமுட்டுக்காட்டின் நிலத்தடி நீர் ஐ.ஐ.டி., மத்திய பாலிடெக்னிக் முதலியவைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

தற்காலிக ஏற்பாடாக, அக்கரைமுட்டுக்காட்டில் கூடுதலாக 5 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து அதிலிருந்து எடுக்கப்படும் நீரின் ஒரு பகுதியை வேளச்சேரிக்கு முதற்படி திட்டமாக வழங்கப்படும். இந்த வேலை முடிவடைந்து பரீட்சார்த்த நீரேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே! விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போல 39 தொட்டிகள் வைத்துக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே பல்லாண்டுக் காலமாக அந்தப் பகுதிக்குக் குடிநீர்க் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. முட்டுக்காட்டுப் பகுதியிலேயிருந்து ஆலந்தூர் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கிக் கொண்டு இருந்தார்கள். ஆலந்தூர் நகராட்சிக்கு இப்பொழுது பாலாற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கின்ற காரணத்தால் முட்டுக்காட்டுத் தண்ணீரை மடுவன்கரை பகுதிக்கு வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஆரம்பத்திலே வலியுறுத்தப் பட்டது. அப்பொழுது வேளச்சேரி திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

ஆகவே, ஆரம்பத்திலேயிருந்து இந்தக் கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டு வருகின்ற காரணத்தினாலும், 39 டேங்குகளின் மூலம் குடிநீர் வழங்குவதால் நாளொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் செலவாகின்றது. ஒரு மாதத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகின்றது. வருடத்திற்கு 36 இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகின்ற காரணத்தினால் ஒரு நிரந்தரத் தீர்வாகவும் இருக்கும்.

அதேநேரத்திலே இந்தக் குடிநீரை யாரும் விற்பனை செய்யாமல் இருக்கவும் நடவடிக்கையெடுக்க ஏதுவாகவும் இருக்கும். எனவே, 147-வது வட்டம் மடுவன்கரை பகுதி முழுமைக்கும் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே! தமிழ் நாட்டில் எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குவதில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் நல்ல புள்ளி விவரங்களை எல்லாம் சொன்னார்கள். அங்கே வைக்கப்பட்டிருக்கிற 39 தண்ணீர் டாங்குகள்பற்றியும் அவற்றிற்கு ஆகின்ற செலவுபற்றியும் எடுத்துச் சொன்னார்கள். அந்த 39 டாங்குகளும் தற்காலிகமானவையே தவிர, நிரந்தரமானவை அல்ல. நிரந்தர ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது. தற்காலிக ஏற்பாடு கோடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கிற கடுமையான வறட்சியின் காரணமாகச் செய்யப்பட்டுள்ளது; அது தவிர்க்க முடியாதது ஆகும்.

**திரு. சைதை சா.துரைசாமி:** துணைத் தலைவரவர்களே! நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அந்தத் தொட்டிகள் நிரந்தரமாக வைக்கப்பட்டிருக் கின்றன. அவை வைக்கப்பட்டது இன்று அல்ல, நேற்று அல்ல; 20 ஆண்டுகளாக வைக்கப்பட்டுக் குடிநீர் வழங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

ஆகவே, அவற்றை அகற்றிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக முட்டுக் காட்டுத் தண்ணீரை வேளச்சேரி திட்டத்தோடு இணைத்து ஏற்கெனவே குழாய்கள் பதிக்கப்பட்டிருக்கிற பகுதிகள் தவிர குழாய்கள் பதிக்கப்படாத மேட்டுப்பாளையம், நரசிங்கபுரம் விரிவுப் பகுதி, மத்த காலனி, ரேஸ்வியூ காலனி, பாரதி நகர், மாந்தோப்பு, 1, 11 தெருக்கள் போன்ற பகுதிகளையும் இணைத்து, எல்லாப் பகுதிகளுக்கும் சேர்த்துக் குடிநீர் வழங்க வேளச்சேரி திட்டத்தோடு இணைத்து, அந்தப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

250 இலட்சம் ரூபாய் செலவில் இப்போது புதிதாக 14 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டும் பணி 13 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கிறது. முட்டுக்காட்டில் தொடங்கப்பட்டிருக்கிற காரணத்தால் அதோடு இதை இணைத்துக் கொண்டால் இந்தப் பணி சுலபமாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குழாய் பதிக்காத 147-வது வட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குழாய்கள் பதித்து, நிரந்தரமாகக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே போடப்பட்டிருக்கிற திட்டத்தில் இந்தப் பகுதிகள் இணைக்கப் படவில்லை. குழாய்கள் பதிப்பது பெரிய காரியம் அல்ல. தண்ணீர் அங்கே வர வேண்டும். அதற்காகத்தான் தேவையான இடங்களைப் பார்த்து, எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து, அதற்கான திட்டங்களைத் தீட்டி, அதன் பிறகுதான் அறிவிக்க முடியும். வெகுவிரைவில் அதற்கான திட்டத்தைத் தீட்ட நான் முயற்சி செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# வினாக்கள் – விடைகள்

## திருமதி இந்திரா காந்தி திருவுருவச் சிலை*

(வினா எண் 12454) **திரு. சைதை சா. துரைசாமி** மற்றும் திரு. எஸ்.பி. மணவாளன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் திருஉருவச் சிலையினை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த இடத்தில் அந்தச் சிலை நிறுவப்பட இருக்கிறது என்பதையும், அந்தச் சிலை எப்போது திறக்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர்

---

* 1987 மே 4

அவர்களுடைய பெருமதிப்புக்கும், நன்றிக்கும் உரித்தான காலம் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களுடைய திருவுருவச் சிலையினை தலைநகரின் முக்கியமான இடத்தில் வைக்க வேண்டுமென்ற குறிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. எந்த இடம், எப்படிப்பட்ட உருவம் என்பதை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிச்சாவரத்தைச் சுற்றுலா மையமாக்க தனித்திட்டம்?*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சாவரம் பகுதியைச் சுற்றுலா மையமாக்க தனித் திட்டம் அறிவிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. எனவே, அந்தத் தனித்திட்டம் தயாரித்து, செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித் திட்டம் தயாரிக்கப்பட்டு, இது இறுதி வடிவம் பெறும் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு முதல் வரவர்களின் இசைவைப் பெற்று மத்திய அரசுக்கு அது அனுப்பப்படும்.

## தமிழகத்தில் உள்ள பிற்பட்ட மாணவர் விடுதிகள் பற்றிய விபரம்**

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள மொத்த பிற்பட்ட மாணவர் விடுதியினுடைய எண்ணிக்கை

---

* 1987 மே 4 அன்று டாக்டர் த. முகம்மது சலீம் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

** 1987 மே 4 அன்று திரு என்.எஸ்.வி. சித்தன் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



எவ்வளவு? சென்னை நகரத்தில் எத்தனை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, பிற்பட்டோர் இல்லங்கள் 558 இருக்கின்றன. சென்னையிலே எத்தனை என்பதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.



# கவன ஈர்ப்பு

## திடீர் நகர், கோதாமேடு குடிசைப் பகுதிகளில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திடீர் நகர் மற்றும் கோதாமேடு குடிசைப் பகுதிகளுக்கு மாற்று குடியிருப்புகள் கட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டும் பணிகள் துவங்கப்படாமல் இருப்பதால் பகுதிவாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டை திடீர் நகர், கோதாமேடு மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு நிரந்தர நிவாரணமாகக் குடியிருப்புகள் கட்ட குடிசைப்பகுதி மாற்று வாரிய தீர்மான எண் 43, நாள் 27-2-1986-ல் சென்னை மாநக

---

* 1987 மே 4



ராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்டுள்ள இரு இடங்களில் 1,152 குடியிருப்புகள், 'அட்கோ' நிறுவனத்தின் கடன் உதவியுடன் ரூ. 187.83 இலட்சம் செலவில் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது-

1. ரிச்சர்டு பூங்கா
   (மாநகராட்சி பொது நிலம்) 512 குடியிருப்புகள்
2. வண்ணான்துறை
   (மாநகராட்சி தனியார் நிலம்) 640 குடியிருப்புகள்

மொத்தம் 1,152 குடியிருப்புகள்

ரிச்சர்டு பூங்கா, அறிவிக்கப்பட்ட பூங்கா பகுதி என்பதால் அப்பகுதியில் குடியிருப்புகள் கட்ட இயலாது என சென்னை மாநகராட்சி தெரிவித்து விட்டமையால், குறித்த காலத்தில் பணியினை வாரியத்தால் துவங்க இயலவில்லை. பின்னர் ரிச்சர்டு பூங்காவிற்கு பதிலாக, சைதை கொத்தவால்சாவடி தெருவில் சென்னை மாநகராட்சி இடம் ஒதுக்கீடு செய்தமையால், வாரியம் முதற் கட்டமாக இப்பகுதியில் 480 குடியிருப்புகள் கட்ட உத்தேசித்து 10-1-1987 அன்று பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

சைதை கொத்தவால்சாவடி தெருவில் உள்ள சென்னை மாநகராட்சியின் (பொது) நிலத்தில் 480 குடியிருப்புகள் கட்டவும், வண்ணான்துறை பகுதியில் 672 குடியிருப்புகள் கட்டவும், குடிசை மாற்று வாரியம் திருத்திய செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளது.

வண்ணான்துறை திட்டத்திற்குத் தேவைப்படும் மாநகராட்சி (தனியார்) நிலம் இதுவரை வாரியத்தின் வசம் ஒப்படைக்கப்பட வில்லை. மேற்கூறிய நிலத்தினை உரிமை மாற்றம் செய்ய வாரியம் நடவடிக்கை மேற்கொண்டபோது, தனது ஊழியர்களுக்கு 25 சதவீதம் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்தால் மேற்கூறிய நிலம் வாரியத்தின் வசம் ஒப்படைக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி தெரிவித் துள்ளது.

மேலும் அந்நிலங்களுக்காக சந்தைவிலை தரவேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்து சென்னை மாநகராட்சி வலியுறுத்தி வருகிறது.

சென்னை மாநகராட்சியின் கோரிக்கையின்படி மாநகராட்சி ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வாரியம் ஒப்புக்கொண்டுள்ளது. மாநகராட்சி (தனியார்) நிலங்களுக்கான விலை நிர்ணயம் செய்வது குறித்து அதைத் தனியே அரசு பரிசீலனை செய்து வருகிறது. இருப்பினும் மேற்கூறிய சூழ்நிலைகளினால் மேற்கூறிய நிலங்களுக் கான விலை நிர்ணயம் செய்வது குறித்து ஒரு முடிவு எடுக்கும் வரை காத்திராமல் மேற்கூறிய நிலத்தினை வாரியத்திடம் ஒப்படைக்குமாறு சென்னை மாநகராட்சியை கேட்டுக்கொள்வதற்கும், 25 சதவீதம் குடியிருப்புகளை மாநகராட்சி ஊழியர்களுக்கு ஒப்படைப்பதற்கு அனுமதி அளிப்பது குறித்தும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, வண்ணான்துறை (மாநகராட்சி தனியார்) நிலம் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டவுடன், மீதமுள்ள 672 குடியிருப்புகளை வண்ணான்துறை திட்டப் பகுதியில் கட்ட வாரியம் உடனடியாகச் செயல்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல கொத்தவால்சாவடி தெரு பகுதியில் ஒரு பகுதி வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோதாமேடு பகுதியில் கட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இடம் குறித்து அதிகாரிகள் மத்தியில் கோப்புகளின் வாயிலாக காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. விலை நிர்ணயம் செய்வதில் காலதாமதம் ஆகிறது என்று நினைக்கிறேன்.

எனவே, இதை ஒரு துரிதப் பணியாக எடுத்துக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட காலகட்டத்திற்குள்ளாக இந்தப் பணிகள் நடக்கவில்லை என்று சொன்னால், அரசுக்கு அதிகமான நிதி பின்னால் தேவைப்படும் என்ற காரணத்தால் இந்தப் பணிகளைத் துரிதப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டுவசதித் துறைச் செயலாள ரையும், உள்ளாட்சித் துறை ஆணையாளரையும், வருவாய்த் துறை ஆணையாளரையும் கூட்டமாகக் கூட்டி நடவடிக்கை எடுத்தால் விரைவாக இந்தப் பணிகளைத் தொடங்க ஏதுவாக இருக்கும். எனவே, இந்தப் பணிகளை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவர அறிக்கையில் குறிப்பிட் டதைப் போல மொத்தம் 1,152 குடியிருப்புகளில் சுமார் 480 குடியிருப்புகள் துவங்கப்பட்டிருக்கின்றன. மீதம் 672 குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், சென்னை மாநகராட்சியினர் அதற்குரிய விலையை மார்க்கெட் ரேட்டிலேயே கேட்கிறார்கள். முதலில் அதிகாரிகள் மத்தியில் பேச்சு வார்த்தை நடத்தி அதற்குப் பிறகு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சொன்னதைப்போல அதிகாரிகளை அழைத்துப் பேசி மீதம் 672 குடியிருப்புகளையும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை நிர்ணயம் செய்வதை எப்போது வேண்டு மானாலும் செய்து கொள்ளலாம். அரசு நிர்ணயிக்கின்ற தொகையைக் குடிசை மாற்று வாரியம் செலுத்த வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பெயரில் குறிப்பிட்ட இடத்தில் குடிசை மாற்று வாரியம் பணிகளைத் துவங்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி தம் பணியாளர்களுக்கு 25 சதவீதம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தது. அதைக்கூட ஒப்புக்கொண்டு விலை பின்னால் என்ன நிர்ணயம் செய்யப்படுகிறதோ அதைக் குடிசை மாற்று வாரியம் தரும். ஆனால், அந்த இடத்தை முதலிலே குடிசை மாற்று வாரியத்திற்குத் தாருங்கள் என்று கேட்டு மாநகராட்சிக்கு எழுதியிருக்கிறோம். அந்த வகையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. முதலிலே அந்த இடத்தைப் பெற்று, அதற்குப் பிறகு குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.



# காவல் துறை மானியக் கோரிக்கை★

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில உணர்வுகளைச் சொல்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

## மக்களைப் பாதுகாத்த காவல்துறை

காரணம் உலகத்தில் உள்ள மிகச் சிறந்த காவல் துறைக்கு இணையாக பெயர் பெற்ற ஒன்றாகத் தமிழகக் காவல் துறை பணியாற்றிக்கொண்டு இருக்கிறது. அதை நான் பாராட்டுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் பார்ப்பீர்களானால் பல கொள்ளை, கொலை, ரயில் கவிழ்ப்பு, குண்டு வெடிப்பு சம்பவங்கள் என்று நாடு முழுவதும் ஒரு பீதியை உருவாக்கி மக்களுக்குத் தொல்லை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு பலர் செயல்பட்ட நேரத்தில் அந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களை எல்லாம் துரிதமாகக் கண்டுபிடித்து மக்களுக்கு எந்தவிதமான பீதியும் ஏற்படாமல், ரயிலில் செல்வதற்கு, பஸ்ஸில் செல்வதற்கு விமானத்தில் செல்வதற்குக்கூட அஞ்சிய நேரத்தில் அஞ்ச வேண்டாம் என்ற வகையில் மக்களை பாதுகாக்கின்ற

★ 1987 மே 4





முறையில் துரிதமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இல்லாமல் செய்து இருக்கின்ற காவல் துறையை நான் பாராட்டுகிறேன்.

குறிப்பாக சமீபத்தில் திருச்சிக்கு அருகில் நடைபெற்ற ரயில் கவிழ்ப்பு சம்பவத்தில் குற்றவாளிகளைத் துரிதமாகக் கண்டுபிடித்தது மட்டும் அல்லாமல் இன்றைக்கு எங்கேயும் அதுபோன்ற சம்பவங்கள் இல்லாமல் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள். அதற்காகக் காவல் துறையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## ஆபாச சுவரொட்டிகளை தடை செய்க!

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆபாச சுவரொட்டிகளைப் பற்றி சொன்னார்கள். ஆபாச சுவரொட்டிகளை தடை செய்ய வேண்டும், ஆபாச சுவரொட்டிகள் எங்கேயும் இருக்கக் கூடாது என்ற வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## நீதியை இழிவுபடுத்தும் சுவரொட்டிகளை ஒட்டுவோர் மீது நடவடிக்கை

அதே நேரத்தில் நீதிக்குத் தண்டனையா என்று சொல்லி இடது கையில் பணம், வலது கையில் நீதி என்ற வகையில் நீதிமன்றத்தைக் குறை சொல்லுகின்ற வகையில் சுவரொட்டிகளை ஒட்டுகின்ற சமூகவிரோதிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## கார்க் துப்பாக்கியைப் பயன்படுத்துக

சமுதாயத்தில் இன்றைக்கு காவல்துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கைகள் எடுக்கும்போது வன்முறையாளர்கள் சூழ்ந்து கொண்டு தாக்குகிறார்கள். அந்த நேரத்தில் துப்பாக்கிகளைப் பயன்படுத்த வேண்டி வருகிறது. இதனால் துப்பாக்கிச் சாவுகள் ஏற்படுகின்றன.

ஆகவே, அரசுக்கு இதிலே கெட்ட பெயர் ஏற்படுகிறது. யாரோ சில சமூக விரோதிகள் செய்கின்ற நேரத்தில் துப்பாக்கியைப் பயன்படுத்துவதைத் தவிர காவல்துறைக்கு வேறு வழி இல்லை என்ற நேரத்தில் அதை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அதனால் சாவு ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்காக இங்கிலாந்து நாட்டிலே ஒரு முறை வைத்திருக்கிறார்கள். கார்க் என்கிற துப்பாக்கி ரவை வைத்திருக்கிறார்கள். அந்த ரவையினால் சுட்டால் உயிர்ச் சேதம் ஏற்படாது.

## மயக்க மருந்துள்ள துப்பாக்கியைப் பயன்படுத்தலாம்

அதுபோன்ற முறையையோ அல்லது, ஒரு பெரிய வன்முறை கும்பல் சூழ்ந்து கொண்டு பொதுமக்களுக்குத் தொல்லை தருகின்ற வகையில், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கின்ற நேரத்தில், மயக்க மருந்துள்ள துப்பாக்கி ரவைகளைப் பயன் படுத்தினால், சாவு இல்லாமல் மக்களைப் பாதுகாக்கலாம், சமூக விரோதிகள் யார் என்றும் கண்டுபிடிக்கலாம். எனவே, அந்தப் புதிய முறையை, நவீன முறையை, துப்பாக்கி ரவைக்குப் பதிலாக, காவல்துறையிலே கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

## நேர்மையானவர்கள் ஓய்வு பெறும்போது ஒரு லட்சம்

காவல்துறையைச் சார்ந்தவர்கள் குறைந்த வருவாயுள்ளவர்களாக 24 மணி நேரமும் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி பணிபுரிந்து கொண்டிருப்பவர்கள், சமுதாயத்தில் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், பணி செய்யும் வகையில் காவல்துறையைச் சார்ந்தவர்களை உற்சாகப் படுத்துகின்ற வகையில், ஓய்வு பெறும்போது, அவர்களுக்கு அரசு கொடுக்க வேண்டிய எல்லா தொகையோடு சேர்த்து, தனியாக அந்த காவல்துறையைச் சார்ந்த அதிகாரி நல்ல முறையில், நேர்மை யுள்ளவராக, ஒழுக்கமுள்ளவராக எந்தவிதமான தவறுகளுக்கும் ஆட்படாது இருந்தால், அவர்களுக்கு அரசின் சார்பாக ரூபாய் 1



இலட்சம் பணம் கொடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்யும் விதத்தில், தவறு செய்யும் அதிகாரிகள் தவறு செய்வதை விட்டுவிட்டு, தன்னுடைய இறுதி நாளில் தானும் அந்தத் தொகையைப் பெறவேண்டுமென்பதற்காக, நாணயமாகவும், நேர்மையாகவும் அவர் பணியாற்ற ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்த முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

## ஏ.சி. மாணிக்கத்தின் மனிதநேயம்

'பல்லாண்டு வாழ்க' என்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் சமூக விரோதிகளைத் திருத்துவதற்காக அந்தத் திரைப் படத்தைக் கொண்டு வந்தார்கள். அதைப்போன்று இன்று காவல்துறையைச் சார்ந்தவர்கள், அந்த முயற்சியின்கீழ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். நான் சமீபத்தில்கூட ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். ஒரு இளம் குற்றவாளி, பல தவறுகளைச் செய்து, சிறை சென்றவன். அவனைத் திருத்தி, ஒரு வேலையில் அமர்த்தி, அவனுக்கு ஒரு திருமணத்தையும் காவல் துறையைச் சேர்ந்தவர் நடத்தியிருக்கின்றார். எனது தொகுதியைச் சார்ந்த ஏ.சி. மாணிக்கம் என்பவர் செய்திருக்கிறார்.

அதைப்போன்று மற்ற இடங்களிலும் இப்படி சமுதாய விரோதச் செயல்களைச் செய்தவர்களை, குற்றவாளிகளாக இருப்பவர்களைத் திருத்துவதற்கு காவல்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காவல்துறை உங்களுடைய நண்பன் என்ற அடிப்படையில் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளை மேலும் நல்லமுறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## சைக்கிள் கடைக்காரர்களுக்கு உதவி

அதைப்போன்று இன்றைக்கு சென்னை மாநகரத்தில் சிலர் வங்கிகளில் கடன் வாங்கி, சைக்கிள் கடைகள் வைத்திருக்கிறார்கள்.

அந்த வங்கிகளில் கடன் வாங்கி, வைத்திருக்கின்ற கடைகளில் இருக்கின்ற சைக்கிளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். அப்படிச் செல்கின்றபோது அவர்களில் சிலர் சமுதாய விரோதச் செயல்களைச் செய்கிறார்கள் அல்லது தகராறுகளைச் செய்கிறார்கள் ஏதாவது ஒரு வழக்கிலே மாட்டிக் கொண்டு விடுகிறார்கள்.

பிறகு அந்த சைக்கிளைப் பெறுவதற்கு ஆறு மாதம் அல்லது ஒரு வருடமாகின்றது. அதற்குள் அந்த சைக்கிள் வீணாகிப் போய்விடுகிறது. யார் குற்றவாளியோ, அந்த குற்றவாளி அந்த சைக்கிளை எடுத்தவன் என்று அந்தக் கடைக்காரர் கோர்ட்டிலே சாட்சி சொன்னால் போதும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து, அந்த சைக்கிள் கடைக்காரருக்கு உரிய சைக்கிள்தானா என்ற விபரத்தை சரி பார்த்துவிட்டு, வண்டியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

## குற்றவாளிகள் முகத்தில் பச்சை...

அதே போன்று இன்றைக்குப் பல சமுதாய விரோதச் செயல் களைத் தொடர்ந்து செய்பவர்கள், குறிப்பாக ஜேப்படித் திருடர்கள், இப்படிப்பட்டவர்களை எல்லாம் மக்கள் அடையாளம் கண்டு கொள்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று பார்க்கக்கூடாது. குற்றவாளிகள் முகத்திலே, இந்தத் தவறுகளை செய்தவர்கள் என்று பச்சை குத்தவேண்டும். அப்போதுதான் மீண்டும் தவறு செய்ய மாட்டான்.

முகத்தில் பச்சை குத்தி, அவன் ஜேப்படித் திருடன், கொள்ளைக் காரன், கொலைகாரன் என்று தொடர்ந்து செய்கின்ற குற்றவாளிகளை, திருத்தவே முடியாத குற்றவாளிகளை, இந்த சமுதாயத்தில் குற்றங் களைப் புரிந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களை, அவர்களுடைய முகத்தில் இப்படிப்பட்ட பச்சை குத்தினால், நிச்சயமாக மக்கள் கண்டுகொண்டு அவர்களை எச்சரிக்கையுடன் பார்த்து நடந்து கொள்வார்கள். எனவே, அந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



## ரயிலில் அடிபட்டுச் செத்தவர்களின் பாடி

அதுபோன்று ரயிலிலே அடிபட்டு இறந்தால், இன்றைக்கு அந்த இறந்த உடலைப் பெறுவதற்கு 2, 3 தினங்கள் ஆகின்றன. அதை உடனடியாக ரயில்வே காவல்துறை மருத்துவமனைக்கு அனுப்பி, அந்த பாடியை ‘போஸ்ட் மார்ட்டம்’ செய்து உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படியில்லாமல் அந்த பாடியை அங்கேயே ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## கள்ளச் சாராயம் விற்பவர்கள் மீது மிசா

கள்ளச் சாராயம் விற்பவர்களை மிசா சட்டத்தில் போட வேண்டும். கடுமையான மிசா சட்டத்தில் போட்டால் கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழித்து விடலாம்.

## ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் காவலர்கள் எண்ணிக்கை...

தமிழகத்தில் இன்றைக்கு ஜனத்தொகை பெருகி வருகின்றது. பெருகி வருகின்ற ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் காவல்துறை எண்ணிக்கையையும் அதிகப்படுத்த வேண்டும். சென்னை நகரம் அதிகமான மக்கள்தொகை கொண்ட பகுதி. ஒவ்வொரு காவல் நிலையத்தையும் பார்ப்போமானால் காவலர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. ஆகவே, அந்த குறைவான எண்ணிக் கையை அதிகப்படுத்துகின்ற வகையில் காவலர்களையும் நேரடியாக சப்-இன்ஸ்பெக்டர்களையும் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## பொதுக் கூட்டங்களுக்குக் கட்டுப்பாடு

அதேபோல, எல்லா அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேசி, பொதுக்கூட்டத்தை 10 மணிக்குள்ளாக முடிக்க வேண்டுமென்று வரைமுறை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் பொது மக்களுக்கும் இடையூறு இருக்காது.

அரசியல்வாதிகளுக்கும் இடையூறு இருக்காது. காவல்துறைக்கும் இடையூறு இருக்காது. சென்னை நகரத்தில் இரவு 12 மணி, 1 மணி வரை பொதுக்கூட்டம் நடத்துவதால் பொது மக்களுக்கும் தொல்லையாக இருக்கிறது. காவல் துறைக்கும் தொல்லையாக இருக்கிறது. எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும் தொல்லையாக இருக்கிறது. அதற்கு மறுநாள் மக்கள் பணிகளைப் பார்க்க சிரமமாக இருக்கிறது. எனவே, இதை வரைமுறைக்கு கொண்டு வந்து 10 மணிக்குள்ளாக பொதுக் கூட்டங்களை முடிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## காவலர்களுக்கு இலவச பஸ் பாஸ்

காவல்துறையைச் சார்ந்த அனைத்து காவலர்களுக்கும் பஸ் பாஸ் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது மாண வர்களுக்கு பாஸ் வழங்குகின்றோம். உடல் ஊனமுற்றோர்களுக்கு வழங்குகின்றோம். ஆனால், சமுதாயத்தில் 24 மணி நேரமும் பணிசெய்து கொண்டிருக்கின்ற காவலர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதால் பெருத்த நஷ்டம் வந்துவிடாது. எனவே, இதைப் பரிவுடன் கவனித்து இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## குடும்பக் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கும் காவலர்களுக்குப் பதவி உயர்வு

காவல்துறையைச் சார்ந்தவர்கள் குறிப்பாக அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவேதான் இன்றைக்கு அவர்களுக்கு பொருளாதாரத்திலே சிரமம் ஏற்படுகிறது. குழந்தைகள் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அவர்கள் 1, 2 குழந்தை களுக்கு மேல் பெற்றுக்கொள்ளக் கூடாது என்று கட்டாயப்படுத்துவது மாத்திரம் அல்ல, அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு பதவி உயர்வு என்று சட்ட திருத்தம் கொண்டு வருமோமேயானால் பயன் உள்ளதாக இருக்கும். எனவே, இதைக் கட்டாயப்படுத்த வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



## காவல் நிலையங்களில் எமர்ஜென்சி விளக்கு

அனைத்து காவல் நிலையங்களிலும் எமர்ஜென்சி விளக்கு தேவைப்படுகிறது. சில நிலையங்களில் மின்சாரம் பழுதடைந்து போய்விட்டால், ஸ்டேஷன்கள் இருளில் மூழ்கிவிடுகின்றன. ஆகவே, எமர்ஜென்சி விளக்குகள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## ஒயர்லெஸ், ஜீப், பெட்ரோல்

எல்லா காவல் நிலையங்களிலும் ஒயர்லெஸ் கருவி அமைக்க வேண்டும். எல்லா காவல் நிலையங்களுக்கும் ஜீப்புகள் வழங்கப்பட வேண்டும். முன்பு ஜீப்புகளுக்கு கொடுத்த பெட்ரோல் அளவை இப்போது குறைத்து இருக்கிறார்கள். அதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஒருநாளைக்கு 4, 5 முறைகள் ஏரியாக்களில் ரௌண்ட்ஸ் வந்தால்தான் குற்றவாளிகள் எந்தவிதமான தவறும் செய்யாமல் இருப்பார்கள். பெட்ரோலைக் குறைக்கின்ற காரணத்தினால் காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஏரியாக்களில் அதிகமாக ரவுண்ட்ஸ் வருவதில்லை. இதனால் குற்றவாளிகளுடைய கொட்டம் அதிகமாகி விடுகிறது. எனவே, காவல் துறைக்கு அதிகமான அளவிற்கு பெட்ரோலை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

## காவல்துறையைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்கு முன்னுரிமை

இராணுவத்தில் பணிபுரிகின்ற ஒரு வீரரின் குழந்தைக்கு முன் னுரிமை வழங்குவதைப் போல, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் காவல் துறையைச் சார்ந்தவர்களுடைய குழந்தைகளுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன்.

## சப் - இன்ஸ்பெக்டர்களுக்கும் E.D.R.

காவல்துறையில் காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரை ஓய்வு நாட்களில் பணிபுரிந்தால் அவர்களுக்கு E.D.R. 10 ரூபாய்

வழங்கப்படுகிறது. ஆனால், அந்தத் தொகை சப்-இன்ஸ்பெக்டர் களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே, அந்தத் தொகை அவர் களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## வயது நிர்யணத்தைவிட உடல் ஆரோக்கியம்

காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு வயது நிர்ணயம் என்பதைவிட அவர்கள் உடல் ஆரோக்கியம் நல்லமுறையில் உள்ளது வரை காவல்துறையில் பணிபுரியலாம். அதற்கு பிறகு அவர்கள் வேறு அரசுத்துறையில் பணிபுரிகின்ற ஒரு வரைமுறையைக் கொண்டு வந்தால், அது காவலர்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும். இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே, அந்த முறையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

## குடும்பச் சண்டைகளும் 75-வது பிரிவும்

குடும்பச் சண்டை காரணமாக, இன்றைக்கு காவல் நிலையங் களில் 75-வது பிரிவில் வழக்கைப் பதிவு யெ்கிறார்கள். அந்த முறையை அறவே ஒழிக்க வேண்டும். வேறு ஏதாவது அடிதடி தகராறைத் தவிர, வாய்ச் சண்டை, குடும்பச் சண்டை என்பதில் சாதாரண, மிக ஏழ்மையான நிலையிலே உள்ளவர்கள்மீது காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று வழக்கைப் போடுவதால், அவர்களுக்கு மறுநாள் நீதிமன்றத்திற்குச் சென்று பணம் கட்டுவதற்கு வசதி இல்லாத நிலைமை இருக்கின்றது. எனவே, அந்த 75-வது பிரிவை குடும்பச் சண்டைகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் போடக்கூடாது என்பதையும் கேட்டுக் கொள்கிறேன்.

## அப்பாவிகள் மீது 41-கிளாஸ்

அதேபோல், 41-கிளாஸ்- சந்தேக வழக்குகள். அந்த சந்தேக வழக்குகளை பல நேரங்களில் காவல்துறையைச் சார்ந்தவர்கள் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். அந்த 41- கிளாஸ் என்ற முறையை ஒழிக்க வேண்டும். குற்றவாளிகள் யார் என்று காவல்



துறைக்கே தெரியும். அவர்கள்மீது 41 கிளாஸை போடலாம். அப்பாவிகள், இரவில் சினிமா பார்த்துவிட்டு வருபவர்கள், மாணவர்கள் இப்படிப்பட்டவர்களை இரவு நேரங்களில் பிடித்துக் கொண்டு வந்து அடைத்து விடுவதும், பிறகு உரிய முகவரி தந்தாலும், அவர்களை விட மறுப்பதும், தேவை இல்லாத ஒன்று. எனவே, அந்த 41-கிளாஸ் என்ற பிரிவை எடுத்து விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## தீயணைப்புத் துறைக்கு நவீனக் கருவிகள்

இன்றைக்கு தீயணைப்புத் துறை, சென்னை மாநகரத்தில் மிகவும் அத்தியாவசியமான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. கடந்த வருடம் எனது தொகுதியிலே தீப்பிடித்தபோது, அந்த தீயணைப்புப் பணியில் காவல் துறையினரும், தீயணைப்புத் துறையினரும் ஒன்றாக இணைந்து நல்ல முறையில் பணியாற்றினார்கள். அந்தத் தீயணைப்புத் துறைக்கு இன்னும் நவீனமான கருவிகளை வாங்க வேண்டும். தீயணைப்புத் துறையில் எல்லாவிதமான நவீன கருவிகளை வாங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறைக்கு ஒயர்லெஸ் கருவிகளைப் பயன் படுத்தினால் விரைந்து வந்து தீயை அணைக்க வாய்ப்பாக இருக்கும். ஒயர்லெஸ் பொருத்திய அந்த வாகனங்களையும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## காவல் துறை ஊதியம் தீயணைப்புத் துறைக்கும்

காவல் துறைக்கு ஊதியம் வழங்கப்படுவதைப் போல், தீயணைப்புத் துறை ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## காவல் துறையை இழிவுபடுத்தும் திரைப் படங்கள் மீது நடவடிக்கை

காவல்துறையை இந்த அளவுக்கு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இன்றைக்குச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தி

மக்களைப் பாதுகாப்பதற்கு நல்ல பல பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை எல்லாம் கொச்சைப்படுத்துகின்ற வகையில், கேவலப்படுத்துகின்ற வகையில் இன்றைக்கு ஆபாசமான முறையில் திரைப்படங்கள்-அரசியல்வாதிகளைப் பற்றியும் எடுக்கிறார்கள்; காவல்துறையைப் பற்றியும் எடுக்கிறார்கள்; எனவே, அப்படி திரைப்படம் எடுப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு காவல்துறை என்று சொன்னால், அது கண்ணியத்திற்குரியதாகவும், காவல்துறை என்று சொன்னால் அது ஒரு கட்டுப்பாடுள்ளதாகவும், காவல்துறை என்று சொன்னால், பொதுமக்கள், அவர்களைக் கண்டு என்றைக்கும் எந்தவிதமான தவறும் செய்யக் கூடாது என்ற நிலையை உருவாக்குகின்ற வகையில் மக்களுக்கு அந்த உணர்வை ஏற்படுத்த வேண்டுமே தவிர, காவல்துறை என்று சொன்னாலே, ஒரு கேவலமான நிலைக்குக் கொண்டு வருகிற வகையில் இன்றைக்கு திரைப்படங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையை மாற்றியமைக்க வேண்டும். அப்படிப்பட்ட திரைப்படங்கள் திரையிடுவதைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தினுடைய காவல்துறை மிகச் சிறந்த காவல்துறையாக எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. எந்தக் குற்றம் நடைபெற்றாலும், அந்தக் குற்றத்தை உடனுக்குடன் கண்டுபிடித்து விடுகிறார்கள். எங்கே தவறு நடந்தாலும் அந்தத் தவறுகளை உடனடியாகக் கண்டுபிடித்து, இன்றைக்கு எல்லாத் தரப்பு மக்களையும் பாதுகாக்கின்ற வகையில் பணியாற்றி வருகிறார்கள்.

## கொலை, கொள்ளை செய்திகளால் கொடியோர் தப்பித்தல்

இன்றைக்கு பார்ப்பீர்களேயானால், ஒரு கொலை நடக்கிறது; கொள்ளை நடக்கிறது; இவைகளைப் பற்றி செய்திகள், இன்வெஸ்டிகேஷன் என்ற நிலையிலே இருக்கும்போதேகூட, செய்தியாக



வெளியே வந்து விடுகின்றன. இதனால் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் அடுத்தமுறை அவர்கள் கொலை, கொள்ளையடிக்கத் திட்டமிடும்போது அப்படிப்பட்ட குறைகளை எல்லாம் அவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிலையை உருவாக்காமல், அப்படிப்பட்ட செய்திகளை வெளியே சொல்லாமல், இந்தக் கொலை, கொள்ளைகளைச் செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது.)*



# வினாக்கள் – விடைகள்

## சைதையில் ஆற்றுமாநகர், திடீர் நகர் மற்றும் கோதாமேடு ஆகிய பகுதிகளில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள்*

(வினா எண் 8699) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சைதை ஆற்றுமாநகர், திடீர் நகர், கோதாமேடு ஆகிய பகுதிகளில் ''தீ பிடித்த குடிசை வீடுகளுக்கு பதிலாக'' மாடி வீடுகள் கட்டித்தரும் என்று அறிவித்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்திற்கு ''ஹட்கோ'' அனுமதி வழங்கியுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதே கேள்வி நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு, பதில் சொல்லியிருக்கிறேன். அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தக் குடியிருப்புகளைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கும்.

---

* 1987 மே 5



**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல நேற்றே விரிவான விளக்கத்தை கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகச் சொல்லிவிட்டார்கள். ஹட்கோ மூலம் கடன் பெறும் குடிசை மாற்று வாரியம், அப்படி வாங்கும் தொகையை எப்படி திருப்பிச் செலுத்துகிறது என்பதையும், இந்தத் திட்டத்தின்கீழ் அரசினுடைய உதவி எவ்வளவு ஹட்கோ மூலம் பெற்றது எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு ஹட்கோ கடனுதவி ஏறத்தாழ ரூ. 157 லட்சம் ஆகும். இதிலே அரசு மானியம் தருகிறது. மீதம் வீடு கட்டியதற்குப் பின்னாலே வசூல் செய்து அந்தக் கடன் திருப்பி அடைக்கப்படுகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் திட்டத்தின்கீழ் மேம்பாடு மனைத்திட்டம் வழங்கப்படுகிறது. இந்த உலக வங்கி திட்டத்தின் மூலம் செயல்படுத்துகின்றபோது அந்தத் தொகை எவ்வாறு பெறப்பட்டு திருப்பிச் செலுத்தப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நாளைக்கு மானியக் கோரிக்கை வருகிறது. அதிலே பேசுகிறபோது விரிவாகப் பேசி பதில் கூறலாம்.

## கிண்டி-அம்பத்தூர் பகுதிகளிலுள்ள டெவலப்மெண்ட் பிளாட்டுகள்*

(வினா எண். 9418) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

---

* 1987 மே 6

கிண்டி-அம்பத்தூர் தொழிற்பேட்டையில் சிட்கோவிற்குச் சொந்தமான தொழிற்கூடக் கட்டிடங்களையெல்லாம் சொந்த மாக்கித் தந்ததுபோல், டெவலப்மெண்ட் பிளாட்டுகளுக்கு முழுத்தொகை கட்டியவர்களுக்கு விற்பனைப் பத்திரங்களை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண். 383, தொழில் துறை, தேதி 19-3-1982-ன் மூலம் அரசிற்குச் சொந்தமான தொழிற்கூடக் கட்டிடங்களைச் சொந்தமாக்கிக் கொடுக்கும் திட்டம் அமுலாக்கப் பட்டது. ஆனால், மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவில்லை. இதுகுறித்து அரசு ஆய்வு செய்து மேம்படுத்தப்பட்ட மனைகள் தற்போதுள்ள குறிப்பிட்ட நிபந்தனை களுடன் கூடிய அனுபோக பாத்தியதை உரிமையிலேயே (Conditional assignment basis) தொடர்ந்து இருக்கலாம் என அரசு ஏற்கெனவே முடிவு எடுத்துள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுபோக பாத்திய உரிமை பெற்றவர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் தரப்பட வேண்டும் என்பதுதான் இந்தக் கேள்வியின் நோக்கம். விற்பனைப் பத்திரங்களை வழங்குவதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு தொழிற்கூடங்களுக்கு வழங்கியதைப்போல், மேம்படுத்தப்பட்ட மனைகளுக்கும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கூடமாகக் கட்டப்பட்டது அந்தக் குறிப்பிட்ட பணிக்கான டிசைன் செய்யப்பட்டுக் கட்டி விட்டோம். எனவே, அதை மாற்ற வாய்ப்பு இருக்காது. கட்டாயமாகத் தொழிலை ஆரம்பிக்க முடியும். எனவே முழுமையாகப் பணத்தைக் கட்டும்போது சொந்தமாக உரிமையாளர்களுக்கே கொடுத்து விடுகிறோம்.

மேம்படுத்தப்பட்ட மனைகளைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட தொழிலுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அந்தத் தொழிலை



ஆரம்பிக்க மட்டுமே அவர்கள் கட்டிடங்களைக் கட்ட வேண்டும். வேறு எந்தப் பணிக்காகவும் பயன்படுத்தக் கூடாது. தொழிலை ஆரம்பிக்கிறோம் என்று சொல்லி நிலத்தை அரசாங்கத்திடமிருந்து வாங்கி விற்று விடக் கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் அனுபவ பாத்தியமாக வைத்துக் கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம்.

கட்டிடங்கள் கட்டித் தொழிலை ஆரம்பித்த பின்பு மனு செய்தால் அதிலே ஏதாவது முடிவு எடுக்கலாம் என்ற உணர்வோடு, அந்தத் தொழில் வர வேண்டும் என்பதற்காகத்தான், அவர்களே அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கட்டுப்பாட்டை அரசாங்கம் விதிக்கிறது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல அந்த மேம்படுத்தப் பட்ட மனைகளில் தொழில் செய்கிறவர்களுக்கு மாத்திரம்தான் விற்பனைப் பத்திரம் கொடுக்கப்படும் என்று ஒரு வரையறையை நிர்ணயம் செய்து வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்த இடத்தைப் பயன்படுத்தக் கூடாது என்ற கட்டுப்பாட்டின்கீழ் விற்பனைப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதோடு அந்தப் பகுதியில் இருக்கின்ற தொழிலாளர்கள் குடியிருப்புகள் அவர்களுக்கே சொந்தமாக்கித் தரப்பட வேண்டும் என்று பலமுறை கேட்கப்பட்டபோது மன்றத்திலே அந்தக் குடியிருப்புகள் இவர்களுக்கு சொந்தமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சொந்தமாக்கித் தரும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி மேம்படுத்தப் பட்ட மனைகளில் அவர்கள் தொழிற்சாலையை அமைத்து வேலைகள் துவக்கப்பட்டிருந்தால் அதிலே தடை இருப்பதற்கு வாய்ப்பில்லை. நாம் என்னதான் திட்டங்கள் போட்டு உரிமையைக் கொடுத்தாலும் அதற்குப் பிறகு அரசாங்க நிர்வாகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களைப் பின் தொடர்ந்து செல்வது

சிரமமான காரியமாக இருக்கிறது. இப்போது ஒரு புதிய கட்டுப்பாட்டைக் கொண்டு வர வேண்டும் என்று கருதுகிறோம். மனை கொடுத்த குறிப்பிட்ட காலத்திற்குள் பணியைத் துவக்காமல் இருந்தால் அதைக் கான்சல் செய்வது நல்லது என்று கருதுகிறோம். யாருக்கு அவசியம் இருக்கிறதோ அவர்களுக்கு ஒதுக்குவது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறோம். எனவே இந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

குடியிருப்புகளைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கான விவரம் என்னிடத்திலே இல்லை. ஏற்கெனவே சட்டமன்றத்திலே தெரிவிக்கப் பட்டிருக்குமேயானால் அதற்கேற்ப முறையான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

## மதுரை அழகர்கோவிலிலுள்ள முன் மண்டபம்★

(வினா எண். 5434) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மதுரை அழகர்கோவிலின் முன்பகுதியில் இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் உள்ள மண்டபம் அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் உள்ளதா?

(ஆ) இல்லையெனில், இதனைப் பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் அழகர்கோயிலின் முன் பகுதியில் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ள மண்டபம் தற்போது அறநிலையத் துறை நிர்வாகத்தின்கீழ் இல்லை. (ஆ) மேற்படி மண்டபத்தை மராமத்து செய்து பாதுகாக்க 1979-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. மதுரை அழகர்கோயில் முன் பகுதியிலுள்ள

---

★ 1987 மே 6





மண்டபத்தைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்க ரூ. 5,000-க்கு (ரூபாய் ஐயாயிரத்துக்கு மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. மேலும் அபாயகரமாக உள்ள மண்டபத்தின் பகுதிகளைப் பிரித்துக் கட்டுவதற்காக ஆகும் செலவினம் குறித்தும் மதிப்பீட்டினைத் தயாரித்து அனுப்புமாறு தொல்பொருள் ஆய்வுத் துறை மதுரை இளநிலைப் பொறியாளரிடம் கேட்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகவே அந்தக் கோபுரம் அந்த நிலையிலேதான் உள்ளது. நான் 2 வருடங்களுக்கு முன்பாக அங்கே சென்று பார்த்தேன். அப்படியே இருந்தது. இப்போது கடந்த 2 மாதத்திற்கு முன்பும் பார்த்தேன். அப்படியே இருக்கிறது. எப்போது இந்தக் கடிதம் எழுதப்பட்டது, அதிலே ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்த்து உடனடியாக அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடத்திலே உள்ள அபாயத்தைக் குறித்து விரைவில் மதுரை இளநிலைப் பொறியாளரிடம் மதிப்பீடு பெற்று கட்டுமானப் பணியினை தொடங்க நடவடிக்கை எடுக்கப் படும்.

## தாசில்தார் அலுவலகப் பெயர் மாற்றம்★

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பலம் - கிண்டி தாசில்தார் அலுவலகம் என்று அழைக்கப்படுவதை மாம்பலம்-சைதாப்பேட்டை அலுவலகம் என்று மாற்றியமைக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

---

★ 1987 மே 6 அன்று திரு ஜி.கே.ஜெ. பாரதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெயரில் ஒன்றுமில்லை. ஆனால், இங்கே அதற்கான திட்டவட்டமான, தெளிவான முயற்சிகள் ஏற்பட்டதற்குப் பிறகு, பெயர்களைப் பின்னால் வைத்துக் கொள்ளலாம்.



# கவன ஈர்ப்பு

## தொழிற்பேட்டைக் குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்கே சொந்தமாக்குதல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ''தமிழ்நாடு தொழிற்பேட்டை குடியிருப்புகளைத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கித் தரப்படும் என்று அறிவிக்கப் பட்டும் இன்னும் அமுல்படுத்தாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

தொழிலாளர் மலிவு வாடகை வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தனியார், பொதுத் துறை, கூட்டுறவுத் துறையின் கீழ் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கீழ்க்கண்ட எண்ணிக்கையுள்ள வீடுகள் இந்நாள்வரை கட்டப்பட்டுள்ளன :

---

* 1987 மே 7

| | | |
|---|---|---|
| 1. | தனியார் துறை | 1,206 |
| 2. | வீட்டு வசதி வாரியத்தால் பராமரிக்கப்படுபவை | 3,046 |
| 3. | சிட்கோ நிறுவனத்தால் பராமரிக்கப்படுபவை | 1,111 |
| 4. | கூட்டுறவுத் துறை | 2,459 |

இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்கு வாடகை முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. தொழிலாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அல்லது அவர்களது வருமான வரம்பு மாதம் ரூபாய் 500-க்கு மேல் உயரும்பொழுது தொழிலாளர்கள் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளைக் காலி செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் இதைப் பின்பற்ற இயல வில்லை. தற்பொழுது மிக எண்ணிக்கையில், ஓய்வு பெற்ற மற்றும் வருமான உயர்வு பெற்ற தொழிலாளர்கள் தொடர்ந்து வீடுகளில் இருந்து வருகின்றனர்.

ஆகவே, மைய அரசு 1978 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் பொதுத் துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றின்கீழ் கட்டப்பட்ட வீடுகளை, அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர் களுக்கே விற்று விடலாம் என்று மாநில அரசிற்குப் பரிந்துரை செய்தது. மேலும் அவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்கள் அவ்வீடு களைத் தமக்கே உடைமையாக்கித் தர வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கோரிக்கையை வலுவாக எழுப்பி வந்ததால், அரசு அவர்களின் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து, இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளை அங்கு குடியிருக்கும் உண்மையான தகுதியுடைய தொழிலாளர்களுக்கு விற்று விடலாம் என்று முடிவு செய்யப் பட்டது. இத்திட்டம் சம்பந்தமான சில கூடுதல் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. அவை கிடைத்தவுடன் விரைவில் ஆணை வெளியிடப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அந்த விவர அறிக்கையில் 4 துறைகளின் சார்பாக ஏறத்தாழ 8,000 வீடுகள் சொந்தமாக்கித் தரப்படும் என்கின்ற குறிப்பு இருக்கிறது. அதிலே, சிட்கோவில் மாத்திரம் 1,111 வீடுகள் என்ற எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. அவை அம்பத்தூர், கிண்டி இன்னும் மற்றும் தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் உள்ள



குடியிருப்புகள் என்ற விவரத்தையும், இவ்வளவு சிறந்த திட்டத்தினை அறிவித்தும், கொள்கை முடிவினை எடுத்த பிறகும் காலதாமதம் இல்லாமல், உழைத்து வியர்வை சிந்திக் கொண்டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்குத் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்த அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற ஒரு குறைந்தபட்ச காலத்திற்குள்ளாக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டு ஆணை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சிட்கோவின் சார்பிலே இருக்கிற 1,111 வீடுகளும் கிண்டி, அம்பத்தூர், காட்பாடி, ஈரோடு, தஞ்சாவூர், மதுரை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, காரைக்குடி, விருதுநகர் இப்படி ஏறக்குறைய 17, 18 இடங்களிலே இருக்கின்றன. அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதைப்போல ஏறக்குறைய 8,000 வீடுகள் இருக்கின்றன. அரசு ஏற்கெனவே கொள்கை ரீதியாக முடிவெடுத்தது. ஆனால், நிதித் துறையிலே சில விளக்கங்களைக் கேட்டிருக் கின்றார்கள். விளக்கங்கள் தரப்படக் கூடிய நிலையிலே இருக்கின்றன. விரைவிலே அரசு முடிவெடுக்கும்.



# வினாக்கள் – விடைகள்

## சைதை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலுள்ள காலியிடத்தை விளையாட்டுத் திடலுக்காகக் கையகப்படுத்துதல்*

(வினா எண். 414) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடை அளிப்பாரா?

சைதை மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காலி இடத்தை விளையாட்டு திடலுக்காக கையகப்படுத்தும் திட்டம் காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன?

**விடை :**

சென்னை கோடம்பாக்கம் கிராம புல எண். 62-ல் சுமார் 32 கிரவுண்டு நிலத்தைப் பள்ளி அபிவிருத்திக்கும், விளையாட்டுத் திடலுக்குமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்நிலத்திற்கான மதிப்புத்தொகை ரூ. 90,260.63 நில ஆர்ஜிதம் அதிகாரியிடம் செலுத்தப்பட்டது. நில ஆர்ஜித அதிகாரி அவர்கள் பிறப்பித்து நிலத்தைக் கையகப்படுத்தும் முன், மேற்படி நிலத்திற்கு உரிமை

★ 1987 மே 8



யாளர்கள் உயர்நீதி மன்றத்தில் மேற்படி நில ஆர்ஜிதத்திற்கு எதிராகத் தடை உத்திரவு பெற்றுள்ளபடியால், அந்த நிலத்தினைக் கையகப் படுத்தும் வேலை காலதாமதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மேலும் இது குறித்த உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு பெறும்வரை அரசு எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்க இயலாது.

## சென்னையில் மினி டாக்ஸிகள்*

(வினா எண் 13415) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை நகரில் மினி டாக்ஸிகள் இயக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! 'மினி டாக்சிகள்' இயக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே! மினி டாக்சிகள் இயக்கும் செயற்குறிப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எதிர்காலத்திலாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளை யெடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா? சென்னை மாநகரத்தில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் ஓடுகின்றன என்ற விவரத்தையும் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே! டாக்சிகளே சிறிய வண்டிகள்தான், மினி டாக்சிகள் என்று இருப்பதாகத் தெரியவில்லை. மினி டாக்சியென்றால் என்னவென்று நம்முடைய சட்டத் திட்டத்திலும் வகுத்திருப்பதாகத் தெரியவில்லை. டாக்சிக்கு அடுத்து ஆட்டோ ரிக்ஷாதான் சிறிய வாகனம். இப்போது போதிய அளவிற்கு ஆட்டோ ரிக்ஷாக்களும், டாக்சிகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆட்டோ ரிக்ஷாக்கள் அதிகமாக வந்துவிட்ட காரணத்தால் டாக்சிகள் பணியை விட்டு வெளியே செல்கிற நிலைகூட

★ 1987 மே 8

ஏற்பட்டிருக்கிறது. சென்னை நகரத்தில் எத்தனை ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் ஓடுகின்றன என்ற விவரத்தை உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேட்டால் தருகிறேன்.

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே! மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் மற்ற முக்கியமான இடங்களுக்கும் செல்வதற்கு அரசே டாக்சிகளை இயக்குகிற பணியை மேற் கொள்ளுமா? தனியார் டாக்சிகளில் விமான நிலையத்திற்குப் போகிறபோது பல சிரமங்கள் ஏற்படுவதைக் கவனத்தில் கொண்டு அரசே டாக்சிகளை விட முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே! மாருதி டாக்சிகள் விட இப்போது நம்முடைய அரசாங்கம் அனுமதித்து இருக்கிறது. ஒருவேளை அதை மினி டாக்சி என்று தெரிவித்து இருந்தாலும் தெரிவித்திருக்கலாம். இப்போது தனியாக மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கும் மற்ற இடங்களுக்கும் டாக்சிகள் விடுகிற உத்தேசம் அரசாங்கத்திற்கு நிச்சயமாக இல்லை. தேவையான அளவிற்கு பஸ்களை விட்டுக் கொண்டிருக்கிறோம். இப்போது ஓடிக் கொண்டிருக்கிற டாக்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக் கைகளைக் காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை மூலமாக அரசாங்கம் தீவிரமாக எடுத்து வருகிறது. டாக்சிகளை நாமே விடுவது என்பது பல்வேறு சங்கடங்களை இதற்கு மேலும் உருவாக்கி விடும் என்பதால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்வது நல்லதல்ல.

## சைதை 146-வது வட்டம் ஆலந்தூர் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்*

(வினா எண். 1479) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சைதை 146-வது வட்டம் கிண்டி - கத்திப்பாரா சாலையைப் போன்று, ஆலந்தூர் சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

* 1987 மே 8



(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் பணிகள் துவக்கப் படுமா?

**விடை :**

(அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சைதை மேற்கு ஜோன்ஸ் சாலை, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிப் பகுதியிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காலிமனை*

(வினா எண். 1482) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா?

சென்னை சைதை மேற்கு ஜோன்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியின் பகுதியில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான ஒரு கிரவுண்ட் காலி மனையைப் புதிய நூலகம் கட்ட மாவட்ட ஆணைக் குழுவிற்கு வழங்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டும் இதுவரை வழங்காமல் உள்ள தற்காலிகக் காரணம் என்ன?

**விடை :**

நூலக ஆணைக் குழு காலியிடத்தை வழங்க எந்தவிதக் கோரிக்கையும் அனுப்பவில்லை. எனவே, சென்னை மாநகராட்சி மன்றம் தீர்மானம் ஏதும் நிறைவேற்றவில்லை.

## செங்கல்பட்டு மாவட்டம், கேளம்பாக்கம் - கோவளம் இடையேயுள்ள பழுதடைந்த பாலம்**

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்லுகின்ற சாலை மிகவும் குறுகலாக இருக்கிறது. அங்கே பல ஆக்கிரமிப்பாளர்கள்

* 1987 மே 8

** 1987 மே 8 அன்று திரு. வி. தங்கவேலு வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

சாலையிலேயே வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உல்லாசப் பயணிகள் அதிகமாகச் செல்லுகின்ற சாலையாக இருப்பதால் அதைத் தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே! ஆக்கிரமிப்புகள் இருக்குமானால் அவற்றை அகற்றிவிட்டு முறைப்படி அகலப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கலாம். இதனைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வாய்ப்பு இருக்காது என்று நினைக்கிறேன். எனவே போக்குவரத்திற்கு உகந்த வகையில் - உல்லாசப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாலையைச் சீர்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

## கைத்தறி லுங்கிகளை அரசே ஏற்றுமதி செய்யும் திட்டம்*

(வினா எண். 1622) **திரு. சைதை சா. துரைசாமி** மற்றும் இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கைத்தறி லுங்கிகளைத் தனியார் ஏற்றுமதி செய்வதைத் தடை செய்து அரசே ஏற்றுமதி செய்யும் திட்டம் உள்ளதா?

**விடை :**

இல்லை.

## சென்னை மாநகராட்சியால் கால்பந்தாட்ட விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம்**

(வினா எண். 1623) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகராட்சி நிர்வாகத்தினரால், அகில இந்திய அளவில் கால்பந்தாட்டப் போட்டிகள் நடத்த புதியதாகப்

---

* 1987 மே 8
** 1987 மே 8



பெரிய விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் பணிகள் துவங்கப் படுமா?

**விடை :**

(அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சுற்றுலாப் பொருட்காட்சி நாட்களை அதிகரித்தல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சிகளினுடைய நாட்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்துகின்ற செயற்குறிப்பு உள்ளதா என்பதையும் அதோடு சென்னையிலே அமையவிருக்கின்ற நிரந்தரப் பொருட்காட்சி யினுடைய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற லாபத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளினுடைய நாட்களை நாம் தற்போது உயர்த்திக்கொண்டுதான் இருக்கிறோம். தீவுத் திடலிலே அமைக்கப்போகிற நிரந்தரப் பொருட்காட்சியைப் பற்றி தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## விளையாட்டுத் துறையில் தமிழகம்**

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவரவர்களே, தமிழ்நாடு தேசிய அளவில் விளையாட்டுத் துறையில் எந்த எந்தப் பிரிவுகளில் முன்னணியில் இருக்கிறது? விளையாட்டு வாரியம் பயிற்சி அளிக்கும்

---

*** 1987 மே 8 அன்று திரு கு. ரமணி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி**

**** 1987 நவம்பர் 10 அன்று திருமதி பா. வளர்மதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி**

பணியினை மேற்கொண்ட பிறகு எந்தெந்த விளையாட்டுகளில் முதல் இடத்தைத் தமிழ்நாடு பிடித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, 'ஃபுட் பால், செஸ், ஹாக்கி' போன்ற விளையாட்டுகளில் தமிழ்நாடு தற்போது தென் மாநிலங்களில் முன்னணியில் இருக்கிறது.

## சத்துணவு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு*

(வினா எண். 3741) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

(அ) சத்துணவு ஊழியர்களுக்கும் நான்காவது ஊதிய உயர்வுக் குழு பரிந்துரையின்படி சம்பள உயர்வு அளிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் அரசிற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு எவ்வளவு?

**விடை:**

(அ) ஆம். (ஆ) இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் தொடர் செலவினம் ஏற்படும்.

## சைதையில் 'தீ' விபத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்**

(வினா எண். 3748) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சைதையில் சமீபத்தில் ஏற்பட்ட 'தீ' விபத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து தரப்பட்டன?

---

*1987 நவம்பர் 10
** 1987 நவம்பர் 10



**விடை:**

மேற்குறிப்பிட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிசைகளைத் திரும்பக் கட்டிக் கொள்வதற்கு அரசு விதிகளின்படி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுவிட்டது. இத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 கிலோ அரிசி, 1 புடவை, 1 வேஷ்டி ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன.

## அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டுதல்*

(வினா எண் 12946) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

அரசுத்துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, அரசுத் துறை சார்பில் வேலை செய்யும் பெண்களுக்கென விடுதிகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் உள்ள விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, அரசின் சார்பாக உள்ள விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு. தனியார் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும் சென்னை மாநகரத்தில் எத்தனை விடுதிகள் இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் மூலம் பணிபுரியும் பெண் களுக்காகக் கட்டப்பட்டுள்ள விடுதிகள் மொத்தம் தமிழகத்தில் ஆறு. தனியார் துறையின் மூலமாக மொத்தம் 39 விடுதிகள் செயல்பட்டு

---

*1987 நவம்பர் 10

வருகின்றன. சென்னையில் எவ்வளவு விடுதிகள் செயல்படுகின்றன என்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் சொல்லலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகராக இருக்கின்ற சென்னை போன்ற மிகப் பெரிய நகரத்தில் பல அலுவலகங்களில் பணிபுரிகிற பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் நடப்பு நிதியாண்டிலே புதிதாக விடுதிகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

## கோவில் சிலைகள் மற்றும் நகைகளைப் பாதுகாக்கக் கண்காணிப்புக் குழுக்கள்*

(வினா எண் 12151) **திரு. சைதை சா. துரைசாமி** மற்றும் திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கோவில் சிலைகள் மற்றும் நகைகளைப் பாதுகாக்க மாவட்ட அளவில் கண்காணிப்புக் குழுக்களை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கோயில்களில் உள்ள சிலைகள் பாதுகாப்பு தொடர்பாக கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமத்திலும் விழிப்புக் குழு அமைத்துப் பாதுகாப்பு நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் உள்ள தங்கம், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கவும், தக்க ஆலோசனை தெரிவிக்கவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில் 6 உறுப்பினர்கள் அடங்கிய முதல்தர கமிட்டி 12-3-1986-ல் அமைக்கப்பட்டு அதன்படி இயங்கி

*1987 நவம்பர் 11



வருவதால் மாவட்ட அளவில் இதற்கெனத் தனியாக கண்காணிப்புக் குழு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுவே போதுமானது என்று சொன்னார்கள். மாவட்ட அளவில் ஒரு குழுவினை அமைப்பதால் அதிலே ஏதாவது சிரமம் ஏற்படுமா என்பது தெரியவில்லை. எனவே, அந்த முயற்சியை மேற்கொண்டால் இன்னும் இந்த விழிப்புக் குழுவானது பணிபுரிவதிலே மிகவும் அக்கறையோடு இருந்து செயல்படுவதன் காரணத்தைக் கொண்டும் இந்த மாவட்ட அளவிலான குழுவினை அமைப்பதற்கும், இந்த அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆலயங்களுக்கு மாத்திரம் இந்தக் குழு கட்டுப்பாடு கொண்டதா அல்லது தனியார் ஹெரிடிடரி டிரஸ்டி என்று சொல்லுகின்ற அந்த ஆலயங்களுக்கும் இந்த விழிப்புக் குழு பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள கோயில்களைப் பற்றித்தான் இந்தக் குழு அதிகாரம் செலுத்தும்.

## வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் மிகச் சக்தி வாய்ந்த வாக்குரிமை பெற்றவர்கள் வாக்களிக்கின்ற உரிமையைக் கூட இழந்து விடுகின்ற சூழ்நிலை இப்பொழுது இருந்து வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நடைமுறையைக் கணக்கில் கொண்டு வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று சொல்கின்ற ஒரு நிலைமை ஏற்கெனவே இருந்தது. இது இன்னும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

* 1987 நவம்பர் 11 அன்று திரு. கோ. வீரய்யன் வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.

எனவே, நகர்ப்புறங்களிலாவது அடையாள அட்டையோ அல்லது புகைப்படமோ இந்த வாக்குரிமை படைத்தவர்களுக்கு வழங்கப்படுமானால், அவர்கள் தங்களது வாக்குகளைப் பயன்படுத்த ஏதுவாக இருக்கும். எனவே, அந்த நடைமுறையைச் செயல்படுத்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற யோசனையை எலெக்ஷன் கமிஷன் கூட எடுத்துச் சொல்லிற்று. ஆனால், அது போன்ற வகைகளில் ஏற்படுகின்ற பெரும் செலவை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னோம். ஆனால், மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் ஏற்படுகின்ற பெரும் செலவை இப்பொழுதிருக்கிற சூழ்நிலையில் ஏற்பதற்கில்லை. ஆகவே, இப்பொழுதிருக்கிற நிலையே நீடிக்கலாம் என்ற அளவிலேதான் எடுத்துச் சொல்லியிருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தலாக இருக்குமானால், அதைப் பொறுத்து ஏற்படுகின்ற முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. பாராளுமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் சேர்ந்த தேர்தலாக இருக்குமானால் அதைப் பொறுத்து ஏற்படுகின்ற பாதிச் செலவை மத்திய அரசும் பாதிச் செலவை மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன. ஆகவே, மத்திய அரசினுடைய இணக்கத்தைப் பொறுத்துத்தான் அப்படிப்பட்ட சீர்திருத்தங்களை நாம் செய்ய வேண்டிவரும்.

## புதிய இடத்தில் தலைமைச் செயலகம்?*

**திரு. சைதை சா. துரைசாமி :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தை மாற்றி வேறு இடத்தில், புதிய திட்டங்களோடு கட்டப்படுமென்று சொல்லப்பட்டதே, அது எப்போது நடைமுறைப்படுத்தப்படுமென்று அறிய விரும்புகிறேன்.

---

**★1987 நவம்பர் 11 அன்று திரு. தாமரைக்கனி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.**





**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அது ஒரு பெரிய விவாதமாக நடந்து கொண்டிருந்த பிரச்சினை. தலைமைச் செயலகத்தை எங்கே மாற்றுவது என்பதைப் பற்றி இப்போது விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். ஒரு புதிய கூடுதல் கட்டடத்தை கட்டுவதைப் பற்றிய வினா இது. எனவே அதற்கு மட்டும்தான் பதில் சொல்ல முடியும்.

## உடல் ஊனமுற்றோர்கள் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ்*

(வினா எண். 13413) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு திரு.வேடசந்தூர் வி.பி.பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): திரு.கே.உச்சி மற்றும் திரு. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா?

உடல் ஊனமுற்றவர்கள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சட்டமன்றப் பேரவைமுன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

தமிழ்நாட்டிலுள்ள கண் பார்வையற்றவர்கள், வயது வரம்பின்றி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் சிகிச்சை பெற மருத்துவமனைக்கும், பள்ளிக்கும் பிற பயணங்கள் மேற்கொள் வதற்கும் இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது.

உடல் ஊனமுற்ற குழந்தைகள் (அதாவது உடல் ஊனம் 50 விழுக் காடுகளுக்கும் கூடுதலாயிருந்தால்) தமது இருப்பிடத்திலிருந்து,

---

★1987 நவம்பர் 12

பள்ளிக்கு அல்லது சிகிச்சை பெற மருத்துவமனைக்குச் சென்று வர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகின்றது. மேற்படி குழந்தைகள் கல்வி பயிலும் நிறுவனம் அல்லது மருத்துவ அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற்று இச்சலுகையைப் பெறலாம்.

உடல் ஊனமுற்றவர்கள் தமது இருப்பிடத்திலிருந்து கல்லூரி/ பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இருப்பிடத்திலிருந்து, வேலை செய்யும் நிறுவனம் தொழிற்பட்டறைக்குச் சென்று வர சாதாரண மாண மாணவியர்க்கு வழங்கும் சலுகைப் பயணச் சீட்டில் 50 சதவிகிதம் சலுகை வழங்கும் செயற்குறிப்பு சமூக நல இயக்குநரிடமிருந்து தற்போது பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சைதை. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப்போல முழுமையாகக் கண்பார்வை அற்றவர்களுக்கு முழுச் சலுகையும், 50 சதவிகித விழுக்காட்டுக்கு மேலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு, குழந்தைகளுக்குச் சலுகையும், உடல் ஊனமுற்றவர்களுக்கு 50 சதவிகிதம் வழங்கப்படுகின்ற கொள்கைக் குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்த 50 சதவிகிதம் சலுகையையும் முழுக்க 100 சதவீதமாக மாற்றி விரைவில் இலவச பாஸ் வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இது குறித்து போக்குவரத்துத் துறையோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## சென்னை மாநகரத் தாலுக்காக்களைப் பிரித்தமைத்தல்!*

(வினா எண். 6632) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

*1987 நவம்பர் 12



சென்னை மாநகரத் தாலுகாக்களைப் பிரிக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை :** ஆம்.

## ஆலந்தூர் சாலை தரைப் பாலம்!*

(வினா எண் 13403) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) ஆலந்தூர் சாலை தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றி அமைக்கப் பணிகள் காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

(ஆ) பணி எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆர்.எம்.வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! (அ) சென்னை மாநகராட்சியில் 300-வது ஆண்டு விழாவை ஒட்டி ஆலந்தூர் சாலை தரைப்பாலத்திற்கு மாறாக உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான திட்டம் தோராயமாக ரூ.200 இலட்சத்துக்கு மதிப்பிடப்பட்டு நிதி ஒதுக்கீட்டுக்கு சென்னை மாநகராட்சி அரசுக்கு எழுதியுள்ளது. இது தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. (ஆ) அரசு நிதி ஒதுக்கீடு செய்த பின்பு இப்பணி தொடங்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு அமைச்சரவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிசீலனையை விரைந்து முடித்து,300-வது ஆண்டில் அந்தத் திட்டப் பணிகளைத் தொடங்கு வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும், அந்தச் சாலை மிக முக்கியமான கிண்டி தொழிற்பேட்டையை இணைக்கின்ற சாலையாக இருப்பதால், அந்தப் பகுதியில் ஒரு நாளைக்கு 10,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

அது ஜாபர்கான்பேட்டை தரைப் பாலத்தையும், ஆலந்தூர் சாலையையும் இணைக்கின்ற இரண்டு தரைப் பாலங்களும் மழைக் காலங்களில் செல்ல முடியாத நிலையிலிருக்கிறது. எனவே அதைக்

*1987 நவம்பர் 13

கருத்தில்கொண்டு 300-வது ஆண்டில் பரிசீலனை என்ற அளவில் இல்லாமல் கொள்கை முடிவாக எடுத்து, நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு.ஆர்.எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே! இந்தப் பாலம் கட்டுகின்ற திட்டம் ஒன்று மாத்திரம் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்படவில்லை. 300-வது ஆண்டையொட்டி சென்னை மாநகராட்சி பல திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு அனுப்பியிருக்கிறது. அதற்காகக் குறைந்தபட்சம் ரூ.300 கோடி தேவைப்படுகிறது.

அதிலே ஒன்றுதான் இந்தப் பாலத் திட்டமும். பொதுவாக எல்லாத் திட்டங்களையும் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பும், சூழ்நிலையும் அரசுக்கு இருக்கிறது. அதிலே ஒரு திட்டமாக இது இருக்கின்ற காரணத்தால், எல்லாத் திட்டங்களையும் பரிசீலித்து, அதிலே உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய திட்டம் எது என்று முன்னுரிமை கொடுக்கின்ற சூழ்நிலைகளில் அரசு இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

## தொலைக்காட்சியில் சட்டமன்ற நடவடிக்கைகள்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதிக்கு ஆற்றியுள்ள பணிகளைத் தெரிவிக்கின்ற வகையிலும் மக்களும் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டை நேரிடையாக ஒளிபரப்புகிறார்கள். அது மிக அற்புதமாக மக்கள் மத்தியிலே வரவேற்கப்படுகிறது. முக்கியமாக மக்களுக்காக பணியாற்றுகின்ற சட்டமன்ற நடவடிக்கைகளை நேரிடையாக ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி சம்பந்தப்பட்ட தொலைக்காட்சித் துறை அமைச்சரிடம் கருத்து தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

* 1987 நவம்பர் 13 அன்று திருமதி பா. வளர்மதி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.



# கவன ஈர்ப்பு

## சென்னை வேளச்சேரி பகுதியிலுள்ள சாவடி இடத்தைக் கிராம நிர்வாக அலுவலர் சட்டத்திற்குப் புறம்பாக விற்றது குறித்து...*

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ''சென்னை வேளச்சேரிப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான கிராம சாவடி இடத்தைக் கிராம நிர்வாக அலுவலர் அரசுக்குத் தெரியாமல் சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்ததால், ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

சென்னை மாவட்டம், மாம்பலம் - கிண்டி வட்டம், வேளச்சேரி கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்த திரு.ஞானசேகரன் என்பவர், மேற்படி கிராமத்தில், சாவடியிடத்தைச் சட்டத்திற்குப் புறம்பாக

* 1987 நவம்பர் 13

விற்பனை செய்தார் என்று பெறப்பட்ட புகாரின் பேரில், சென்னை மாவட்டாட்சியர், அவரை 19-5-1987 இல் தற்காலிகப் பணி நீக்கம் செய்துள்ளார். அவர்மீது சுமத்தப்பட்ட புகார் துணை ஆட்சியர் நிலையிலுள்ள அலுவலரான, மாவட்டப் பிற்பட்டோர் நல அலுவலர் அவர்களால்,ஆரம்ப விசாரணை செய்யப்பட்டு, அவருடைய நியமன அலுவலரான மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால் தமிழ்நாடு குடிமுறை பணிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (ஆ) வின் படி குற்றப் பத்திரிகை ஏற்படுத்தப்பட்டு, விதிமுறைகளின்படி விசாரணையும் நடத்தப்பட்டது.

விசாரணையின்போது இவர்மீது புகார் கொடுத்த திரு.வி.சங்கர் என்பவரும் விசாரிக்கப்பட்டார். விசாரணையின்போது மேற்படி இடம் விற்கப்பட்டதற்கு ஆதாரமாகக் கொடுக்கப்பட்ட பத்திர எண் 1146/1986-ஐப் பார்வையிட்டதில், வேளச்சேரி கிராம நில அளவை எண் 438/1இல் உள்ள நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ள கிராமச் சாவடி பகுதிப் பரப்பளவான 800 சதுர அடியைத் தனி நபரான, திரு.எஸ்.கருப்பசாமி என்பவர் திரு.வி.ராமசாமி என்பவருக்கு விற்பனை செய்துள்ளதாகத் தெரிய வருகிறது. இதை முன்னாள் கிராம நிர்வாக அலுவலர், திரு.ஞானசேகரன் விற்பனை செய்யவில்லை என்றும் தெரிய வருகிறது.

மேலும், மேற்படி பழுதடைந்திருந்த கிராமச் சாவடியைச் சீர் செய்யவே திரு.ஞானசேகரன் அவ்விடத்திலுள்ள கொட்டகையைப் பிரித்ததாகவும் தெரிய வந்துள்ளது. எனினும், கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் மேற்படி விற்பனை குறித்து அலுவலகத் திற்குத் தெரிவிக்காததாலும் அலுவலகத்திலிருந்து முன் அனுமதி பெறாமல் கொட்டகையைப் பிரித்ததாலும், அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு அதற்குத் தண்டனையாக அவருடைய ஊதிய உயர் வினை ஆறு மாத காலத்திற்கு மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களால் நிறுத்தி வைக்கப்பட்டு உத்தரவிடப்பட்டதுடன் அவரை வேளச்சேரி கிராமம் மற்றும் மாம்பலம் கிண்டி வட்டத்தி லிருந்து மாற்றம் செய்தும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் மேற்படி அரசிற்குச் சொந்தமான கிராமச் சாவடி இடத்தினை விற்பனை செய்த தனி நபரான திரு.எஸ்.கருப்பசாமி



என்பவர்மீது சென்னை மாவட்ட ஆட்சியரால் தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், மேற்படி இடம் தற்போது அரசின் கைவசம் மாம்பலம் - கிண்டி வட்டாட்சியரின் பொறுப்பிலுள்ளது என்றும் இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) அரசிற்குத் தெரிவித்துள்ளார்.

**திரு. சைதை சா.துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இந்த விவர அறிக்கையில் பல முரண்பாடான தகவல்களை அதிகாரிகள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் முதலில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிலே இரண்டாவது பத்தியில் பழுதடைந்திருக்கிற கிராமச் சாவடியைச் சீர் செய்யவே திரு.ஞானசேகரன்அவ்விடத்திலே உள்ள கொட்டகையைப் பிரித்தார் என்று தெரியவந்துள்ளது என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

அடுத்த வரியில் கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் மேற்படி விற்பனை குறித்து அலுவலகத்திற்குத் தெரிவிக்காததாலும், அலுவலகத்திலிருந்து முன் அனுமதி பெறாமல் கொட்டகையைப் பிரித்ததாலும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டு அதற்குத் தண்டனையாக அவருடைய ஊதிய உயர்வை ஆறு மாத காலத்திற்கு மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் நிறுத்தி வைக்க உத்தர விட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவரத்தின் மூலம் அங்கே ஒரு முறைகேடு நடந்தது என்பது மாத்திரமல்ல, அரசுக்குச் சொந்தமான அந்த இடத்தைக் கிராம நிர்வாக அலுவலரே முன்னின்று விற்பனை செய்திருக்கிறார் என்பதும் தெரிய வருகிறது. அவ்வாறு விற்பனை செய்தது மாத்திரமல்ல, சாவடியாக இருந்த அந்த காம்பவுண்டு இடத்தை இடித்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது பொது மக்கள் எல்லோரும் சேர்ந்து தடுத்து இருக்கிறார்கள். அவ்வாறு தடுத்தவர்கள்மீது காவல் துறையிலே புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைக்கூட அரசியலாக்கி ஓர் அரசியல் கட்சி பத்திரிகையிலேகூட செய்தி போட்டிருக்கிறார்கள்.

அரசுக்குச் சொந்தமான அந்தச் சாவடி இடத்தைச் சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்த அந்தக் கிராம நிர்வாக அலுவலரைப்

பாதுகாக்கிற நோக்கத்தோடு விசாரணை செய்த அந்த மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் உதவியாளர் பாரபட்சமாக ஒரு முடிவு எடுத்துப் பணி நீக்கம் செய்யப்பட்ட அந்த நபரை வேலையிலிருந்து நீக்கம் செய்து விட்டதற்குப் பிறகு மீண்டும் பணி உத்தரவை வழங்கி அதே மாம்பலம், கிண்டி வேளச்சேரி பகுதிக்கே நியமனமும் செய்திருக்கிறார். அவ்வாறு நியமனம் செய்ததை எதிர்த்து இதுபோல் தவறு செய்த அதிகாரிகளை நியமனம் செய்திருக்கிறீர்களே என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்ட பிறகு வில்லிவாக்கத்திற்கு மாற்றியிருக்கிறார்கள்.

எனவே இந்த விவரத்தின்படி முழு பூர்வாங்க விசாரணையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேற்கொண்டால் அதிலே நடைபெற்று இருக்கிற முறைகேட்டைப்பற்றியும், விசாரணை செய்தவர்கள் ஒருதலைப் பட்சமான விசாரணையைச் செய்திருக் கிறார்கள் என்பதைப் பற்றியும் தெரியவரும். எனவே அந்த வகையில் விசாரணையை மேற்கொள்ள மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஒட்டி, அந்தப் பிரச்சினையைப் பொறுத்து ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை விசாரித்து இங்கே அறிக்கை தரப்பட்டு இருக்கிறது. அறிக்கையிலே முரண்பாடுகள் இருந்தால் அல்லது உண்மை மறைக்கப்பட்டிருக்குமேயானால், மாறுபட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்து இருக்குமேயானால் அதை இப்போது கவனத்திற்குக் கொண்டு வந்தால் மட்டும் போதாது;

அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுத்து மூலமாகவும் எழுதி இன்னின்ன முரண்பாடுகள் நடந்தன என்று தெரிவித்தால் விரிவான விசாரணை நடத்தலாம். ஆனால் இதிலே சொல்லப் பட்டிருப்பது திரு. கருப்பசாமி என்பவர்தான் விற்கிறார் என்று. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது வி.ஏ.ஓ.வே விற்றார் என்று கூறுகிறார்கள். ஆகவே இந்த முரண்பாடுகளை எல்லாம் எழுதித் தந்தால் வேறொரு விசாரணை நடத்துவதற்கு முயற்சி செய்யலாம்.



**திரு. சைதை சா.துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இதுபற்றிய முழு விவரங்களை ஆதாரங்களுடன் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தனியாக எழுதித் தருகிறேன். அதுபோல் இன்றைக்குத் தாசில்தார் அலுவலகங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் அரசுக்குச் சொந்தமான இடங்களை, எப்.சி.ஆர். என்று போட்டு, பல தனியார்கள் கையகப் படுத்தி எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்புத் தருகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்த நடைமுறைகளை மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! அரசுக்குச் சொந்தமான இடத்தை எந்தத் தனியாரும் எந்த வகையிலும் ஆக்கிரமிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அப்படித் தனியார்கள் வேறு வகைகளிலோ அல்லது விதிமுறைகளை மீறியோ எடுத்துக் கொள்கிற வகையில் எங்கு, எந்த நடவடிக்கை மேற்கொண்டாலும் அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்பு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை துரைசாமி அவர்கள் கிராம நிர்வாக அலுவலர் அரசுக்குத் தெரியாமல் சட்டத்திற்குப் புறம்பாக நிலத்தை விற்பனை செய்ததாக இங்கே குற்றச்சாட்டு எழுப்பி இருக்கிறார்கள். இது போலவே செங்கற்பட்டு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரே பன்னாட்டு விமான நிலையத்திற்கு எதிரில் 1.7 ஏக்கர் நிலத்தை அதாவது அரசாங்க நிலத்தை 30 ஆண்டுக்காலத்திற்குக் குறைந்த வாடகையில் தன்னுடைய மகன் பெயரிலேயே எடுத்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் அவையின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இதுபோல் பல்வேறிடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. நம்முடைய இந்தியத் தண்டனைச் சட்டத்தில் இம்மூவபிள்

ப்ராப்பர்ட்டியை யாராவது எடுத்தால் அவர்களைத் தண்டிப்பதற்கு வழியில்லை என்ற காரணத்தால்தான், இதுபோல் பல்வேறிடங்களில் பல்வேறு குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். பெரிய பெரிய பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள் இதுபோன்ற பெரிய அதிகாரிகள் அரசாங்கத் திற்கு நஷ்டத்தை விளைவிக்கக் கூடியவர்களாக இருப்பதைத் தடுக்க வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சம்பந்தப்பட்ட விவகாரங்களை நான் அவை முன்ன வரிடத்திலே கொடுத்திருக்கிறேன். இன்னும் சில விவரங்களையும் தருகிறேன். பன்னாட்டு விமான நிலையத்திற்கு எதிரில் இருக்கிற நிலம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு நான் கூறிய பதிலை ஒட்டி சில கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு எதிரில் இருக்கிற நிலத்தை எடுத்து அதைக் குத்தகைக்கு விட்டதாக விவரங்களைத் தந்திருக்கிறார்கள். அந்தக் கோப்பு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது.

அதைக் குத்தகைக்கு விடலாம் என்ற அளவிற்கு அங்கே இருக்கிற டி.ஆர்.ஓ. சிபாரிசு செய்திருக்கிறார்கள். குத்தகை யாருக்கு என்று விசாரித்த வகையில் அவருடைய மகன் என்று தெரிய வருகிறது. ஆனால் அது இன்னும் கொடுக்கப்படவில்லை. முழுவதும் ஆராயச் சொல்லி இருக்கிறேன். குத்தகைக்கோ, விலைக்கோ கொடுக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திடம்தான் இருக்கிறது. இன்னும் கொடுக்கப்படவில்லை; கோப்பு வந்திருக்கிறது. முழுவதும் ஆராயும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதுபற்றி விவரத்தைத் தந்தார்கள். அதன் அடிப்படையில் ஆராயும்படி கோரப்பட்டு இருக்கிறது. ஆராய்ந்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர வேறு அல்ல. அவருடைய மகனுக்கு இது வரையில் கொடுக்கப்படவில்லை என்பதையும், விசாரணை செய்து நியாயம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



# வினாக்கள் – விடைகள்

## சென்னை மாநகரில் குடிநீர் குழாய்கள் அமைக்காத பொதுத் தெருக்கள்*

(வினா எண். 5419) **திரு.சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகரில் குடிநீர் குழாய்கள்அமைக்காத பொதுத் தெருக்கள் எத்தனை?

(ஆ) குடிநீர் குழாய்கள் அமைத்துத் தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை :** (அ) 486 தெருக்கள் (ஆ) நடப்பு ஆண்டில் (1986 - 87) 32 தெருக்களுக்கு குடிநீர் குழாய்கள் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தெருக்களுக்கும் குடிநீர் குாய்கள் வசதிகள் அமைக்க வரும் ஆண்டுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

---

* 1987 நவம்பர் 16

## அண்ணாசாலையில் மாற்றுவழிப் பாதை*

(வினா எண். 12161) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சென்னை அண்ணா சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு.ஆர்.எம்.வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை அண்ணாசாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாற்று வழிப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், இந்தச் சாலையில் நெரிசலை ஓரளவு குறைக்க டாம்ஸ் சாலையையும், பென்னி சாலையையும் இணைக்கும் இணைப்புச் சாலையைச் செப்பனிடும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது.

**திரு. சைதை சா.துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நாள்தோறும் பெருகிவருகின்ற போக்குவரத்து நெரிசலைப் பார்க்கும்போது, இன்னும் 10 ஆண்டுக்காலம் கழித்துப் பார்த்தால், சென்னை மாநகரத்தில் நடக்கக்கூட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சம் உள்ளது. இப்போது, ஓர் இடத்தை அடைவதற்கு அரை மணி நேரமாகும் என்று ஓர் இலக்கை வைத்துக் கொண்டு பயணம் சென்றால், அந்த இடத்தைச் சென்றடைவதற்கு ஒரு மணி நேரம் ஆகிவிடுகிறது. இதைக் கவனத்தில் கொண்டு, சென்னை மாநகரத்தினுடைய போக்குவரத்து நெரிசல்களைத் தடுக்க, மாற்றுத் திட்டத்தினைத் தயாரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.ஆர்.எம்.வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே! இதுபோன்ற மிகப் பெரிய நகரங்களில் போக்குவரத்து

* 1987 நவம்பர் 16



நெரிசலைத் தவிர்ப்பதற்காக, எதிர்கால வளர்ச்சியை மனதிலே கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதையொட்டித்தான், வெளியூர்களிலே இருந்து வருகின்ற வாகனங்கள், பேருந்துகள் சென்னை நகருக்குள்ளே வந்து மறுபடியும் வெளியூர் செல்வதற்கான ஒரு சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக இரண்டு பெரிய திட்டங்கள் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சுமார் 14 கோடி ரூபாய் செலவிலே உலக வங்கி உதவியுடன் நம்முடைய 'சவுத் ஹைவேஸ்' என்ற அந்தச் சாலையையும், 'பெங்களூர் ஹைவேஸ்' சாலையையும், 'கல்கத்தா ஹைவேஸ்' சாலையையும் இணைப்பதற்காக ஒரு 'ரிங் ரோட்' வளைவாக சென்னை நகருக்கு வெளியிலே செல்லுகின்ற சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

அதைப்போல தாம்பரத்திற்கு அருகிலேயே, சென்னைக்குள்ளே வராமல், திரும்பி, பெங்களூர் சாலையையும் நம்முடைய நெல்லூர் சாலையையும் இணைக்கின்ற வகையில் 17 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு, அதற்கான திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போன்று, சென்னை மாநகரத்திற்குள்ளேயே வளர்ந்து கொண்டு வருகின்ற போக்குவரத்து நெரிசல் என்பது பூதாகாரமாக இன்றைக்கு உருவெடுத்துக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. அரசாங்கம் இதைக் கூர்ந்து, மிகுந்த கவலையோடும், இதை எப்படித் தீர்ப்பது என்பது குறித்தும், அப்படித் தீர்க்க முயற்சி எடுத்துக் கொள்கிற நேரத்தில் இதற்கு எவ்வளவு கோடி ரூபாய்கள் தேவைப்படும் என்கின்ற அந்த உணர்வோடும் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, அண்ணா சாலை மாத்திரம் என்பதல்ல, சென்னை மாநகரத்திற்குள்ளே பல சாலைகள் இப்படிப் போக்குவரத்து நெரிசலுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினையை ஒரு பொதுப் பிரச்சினையாக, தேசியப் பிரச்சினையாக, மத்திய அரசினுடைய துணையோடு மாநில அரசு தீர்ப்பதற்கு முயற்சிகளை எப்படி மேற்கொள்ளலாம் என்று திட்டமிடப்பட்டு வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பெரிய அளவிலே திட்டம் தீட்டுகின்ற வகையில் சென்னை மாநகர் முழுவதும் இருக்கின்ற பல தெருக்களை ஒருவழிப் பாதையாக மாற்றுகின்ற நடவடிக்கையை எடுத்தால்கூட போக்குவரத்து நெரிசலைத் தடுக்க ஏதுவாக இருக்கும். எனவே அந்த நடவடிக்கை யானது முதலிலே எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.ஆர்.எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே! உடனடியாக அரசின் பரிசீலனையிலே இருக்கிற இந்தப் பிரச்சினை, இருக்கின்ற சாலைகளில் போக்குவரத்து நெரிசலை, அதுவும் மிக முக்கியமான நேரங்களில் - 'பீக் அவர்ஸ்' எப்படித் தடுப்பது என்பதைப் பற்றிய விவாதங்களைப் போக்குவரத்துத் துறையோடு விவாதித்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று, பல சாலைகளை ஒரு வழிப் பாதையாக ஆக்கலாமா என்பதும் பரிசீலனையிலே இருக்கிறது.

ஆனால் இதில் ஒரு சிக்கல் - ஒருவழிப்பாதை ஆக்குகிறோம் என்று அறிவித்த உடனேயே அங்கே இருக்கிற வியாபாரிகள், அந்தத் தெருவில் இருக்கிற மற்ற தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுக்கு இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன, அதனால் இந்த ஒரு வழிப்பாதையை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப் பினரைப்போன்ற மக்கள் பிரதிநிதிகளிடத்தில் வந்து முறையிட்டால், அவர்களும் அதற்கு அனுசரணையாக அமைச்சர்களிடத்தில் அல்லது அரசிடத்தில் பொது மக்களின் பிரதிநிதியாக வந்து, இதை உடனடியாக ரத்து செய்யுங்கள் என்று கேட்காத உணர்வை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டால், இதைப்போன்ற - கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், பொது நன்மையைக் கருதி, இந்தக் கட்டுப்பாடுகளை நாம் அமல்படுத்த முடியும். அரசாங்கம் இதைப்பற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

## தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்*

(வினா எண். 1859) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

* 1987 நவம்பர் 17



(அ) தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாத கிராமங்கள் எத்தனை?

(ஆ) நடப்பு நிதியாண்டில் அக்கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப் படுமா?

**விடை :** (அ) 1-4-1985 நிலவரப்படி மொத்தம் 13,025 கிராமக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி தேவை. (ஆ) 1985-86ஆம் ஆண்டில் 3,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர்த் திட்டம் செய்து தரப்படவிருக்கிறது.

## தமிழகத்திலுள்ள அரசு பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் குளிர்பதன நிலையங்கள்*

(வினா எண். 1580) **திரு. சைதை சா. துரைசாமி** மற்றும் திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழகத்தில் அரசு பனிக்கட்டி நிலையங்கள் மற்றும் குளிர் பதன நிலையங்கள் எத்தனை நல்ல முறையில் இயங்கி வருகின்றன?

(ஆ) குளிர்பதன அறைகளை வாடகைக்கு விடுவதால் அரசுக்குக் கிடைக்கும் இலாபம் என்ன?

(இ) இந்த நிலையங்களை மூடிவிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை :** (அ) தமிழ்நாட்டில் மீன்துறையின் கட்டுப்பாட்டில் 5 பனிப்பொறி நிலையங்களும், ஒரு குளிர்பதன நிலையமும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டில், 3 மீன் பதப்படுத்தும் நிலையங்களும், 2 பனிப் பொறி நிலையங்களும் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. (ஆ) மீன் துறையில் உள்ள குளிர்பதன அறைகள் மீனவர்கள் நலன் கருதி வர்த்தக ரீதியில் அமைக்கப்படாததால், இலாபம் குறித்த பிரச்சினை

* 1987 நவம்பர் 17

எழவில்லை. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகக் குளிர்பதன நிலைய அறைகள் வாடகைக்கு விடப்படுகின்றன. (இ) மீன்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள எண்ணூர் குளிர்பதன நிலையம் மற்றும் கடப்பாக்கம், முட்டம், பழவேற்காடு, கோவளம், பரங்கிப்பேட்டை, அதிராம்பட்டினம், சேதுபாவாசத்திரம் ஆகிய இடங்களிலுள்ள பனிப்பொறி நிலையங்களையும் மூடுவதற்கான ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

## சமூக நலத் துறையினால் பயனடைந்த உடல் ஊனமுற்றவர்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்ற முதியோர்கள்*

(வினா எண். 1624) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சமூக நலத்துறையினால் கடந்த ஆண்டு உடல் ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகள், ஆதரவற்ற முதியோர்கள் எவ்வளவு பேர் பயனடைந்தார்கள்?

(ஆ) அவர்களுக்கு என்ன உதவிகள் அளிக்கப்பட்டன?

**விடை :** (அ) கடந்த ஆண்டில் சமூக நலத்துறையின் மூலம் பயன் அடைந்தோர் விவரம் :

| | | |
|---|---|---|
| (I) | உடல் ஊனமுற்றவர்கள் | 29,616 |
| (II) | விதவை மற்றும் ஆதரவற்ற பெண்கள் | 93,013 |
| (III) | ஆதரவற்ற முதியோர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் | 1,83,256 |
| | மொத்தம் | 3,05,885 |

(ஆ) ஆதரவற்ற முதியவர்களுக்கு உதவித் தொகை மற்றும் சத்துணவு, நலிவுற்ற பெண்கள், விதவைகளுக்குச் சிறு தொழில் செய்ய வங்கி மூலம் கடனுதவி, விதவைத் தாய்மார்களின் பெண் குழந்தை களுக்குக் கல்யாணச் செலவிற்காகப் பண உதவி, விதவை மற்றும்

* 1987 நவம்பர் 17





நலிவுற்ற தாய்மார்கள் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் வழங்குதல், உடல் ஊனமுற்றவர்களுக்குப் பெட்டிக் கடை வைக்கப் பண உதவி மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் மானியம் பெற்றுத் தருதல் போன்ற உதவிகள் வழங்கப்பட்டன.

## சைதைத் தொகுதியிலுள்ள சுடுகாடுகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்*

(வினா எண். 1052) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

சைதைத் தொகுதியில் உள்ள மடுவன்கரை சுடுகாடு, கோட்டூர் சூரியா நகர் சுடுகாடு, கிண்டி அருளாயன்பேட்டை சுடுகாடு இவைகளுக்கு சுற்றுச்சுவர் மற்றும் தேவையான கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை :** கோட்டூர் சூரியா நகர் சுடுகாட்டிற்குச் சுற்றுச் சுவர் கட்டுவதற்காக ஒப்பம் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வேலை விரைவில் ஆரம்பிக்கப்பட்டு ஆறு மாதத்தில் முடிக்கப்பட்டு விடும்.

கிண்டி அருளாயன்பேட்டை சுடுகாட்டில் தங்கும் கொட்டகை, எரிக்கும் மேடை, கிணறு போன்ற அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ. 98,000 நிதி ஒதுக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

மடுவன்கரை மற்றும் கிண்டி அருளாயன்பேட்டை சுடுகாடுகளின் நிலப்பரப்பளவை, மாவட்ட ஆட்சியாளரிடம் நிர்ணயம் செய்யும் பணி மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி முடிந்ததும், இவைகளுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். இந்தச் சுடுகாடுகள் மிகச் சிறியவை. சுடுகாட்டில் தேவையான கருவிகளான மண்வெட்டி, கடப்பாறை ஆகிய கருவிகளை, வெட்டியான்களே வைத்திருக்கிறார்கள். இக்கருவிகளை மாநகராட்சி வழங்குவதில்லை.

* 1987 நவம்பர் 17

## சென்னை நகர கூட்டுறுவு நியாய விலைக் கடைகள்*

(வினா எண் 12925) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா?

சென்னை நகரில் உள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நியாய விலைக் கடைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கடைகளெல்லாம் கூட்டுறவு நியாய விலைக் கடைகளாக இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. அப்படி மாற்றப்பட்டிருக்கின்ற, சென்னை மாநகரத்தில் இருக்கின்ற கடைகளில் ஒட்டுமொத்தமாக பொருட்களை வைக்க முடியாத ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால், பொதுமக்களுக்குப் பல நேரங்களில் கேட்கின்ற பொருள்கள் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது. எனவே, இதைக் கவனத்திலே கொண்டு இன்றைக்கு சிவில் சப்ளைஸ் கடைகளையெல்லாம் மாற்றிவிட்டு, கூட்டுறவு டி.யு.சி.எஸ். கடைகளின் வாயிலாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களைச் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்த வியாபாரத்தில் ஈடுபடும். இதைப்போல சில்லறைக் கடைகளை நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துவது சரியல்ல என்கின்ற காரணத்தினால் கூட்டுறவுத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையின் மூலம் அந்தக் கடைகள் 1-10-1987 முதல் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. குறைபாடுகள் இருந்தால் கூட்டுறவுத் துறை மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

* 1987 நவம்பர் 17



**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களுக்கு டி.யு.சி.எஸ்.-லே வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறதா? ஏற்கெனவே நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்கப்படுகின்ற உணவுப் பொருட்களை, எண்ணெயாக இருந்தாலும் அரிசியாக இருந்தாலும், அளவுகளிலே குறைவு ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதை பாக்கெட் மூலம் வழங்கலாம் என்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. எனவே அந்தக் கருத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் விரும்பினால் கூட்டுறவுத் துறைக்குச் செல்லலாம். இல்லையென்றால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயே அவர்கள் செயலாற்றுவார்கள். அளவு குறைவுக்காக அவற்றை பாலிதீன் பைகள், மற்றவற்றிலே போட்டு விநியோகிக்கப்பட வேண்டுமென்கிற யோசனை ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைக் கூட்டுறவுத் துறையின் மூலம் கேள்வியைப் போட்டு தக்க பதிலைப் பெற கேட்டுக்கொள்கிறேன்.

## குடிசை வீடுகளை வாழுவோருக்குச் சொந்தமாக்குதல்*

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளில் கட்டப்படுகிற குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தப் பணி எப்போது நடைபெறும்? அதற்கான கொள்கை முடிவினை அறிவித்தாகி, பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டாகிவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

*** 1987 நவம்பர் 17 அன்று திரு இரா. தாமரைக்கனி வினாவை ஒட்டிக் கேட்ட துணைக் கேள்வி.**



# கவன ஈர்ப்பு

**சைதைப் பகுதி தனியார் தெருக்களிலுள்ள கழிவுநீரை அகற்றுதல் குறித்து...***

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! ‘‘சைதைப் பகுதியில் உள்ள தனியார் தெருக்களில் அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி, சைதைப் பகுதியின் பல தெருக்களுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டப்பணி முடிவுற்றும் மீதமுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள தனியார் தெருக்களில் கழிவுநீர் அகற்றும் வசதி மேற்கொள்ளப்படாததால் அப்பகுதிவாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு.க.இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

---

* 1987 நவம்பர் 17



## அறிக்கை

சென்னை நகரில் தனியார் தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கத் தமிழ்நாடு அரசு ஆணை எண் .541, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20-4-1986-ல் ரூ.430.00 இலட்சத்திற்கு ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை வசதிகளில் ஒன்றான பாதாளச் சாக்கடை வசதிகள் அமைக்க, அரசு ஆணை எண். 949, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12-8-1986-ல் சென்னை மாநகராட்சியை ரூ.100.00 இலட்சங்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்குக் கொடுக்குமாறு ஆணையிடப் பட்டுள்ளது.

தனியார் தெருக்களில், ஏற்கெனவே அருகில் இருக்கும் கழிவுநீர் அமைப்புகளுடன் இணைக்க சாத்தியக்கூறு உள்ள 125 தெருக்களில் ரூ.94.93 இலட்சம் செலவில் இந்த ஆண்டு 1987-88 கழிவுநீர்க் குழாய்கள் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளத் திட்டம் தீட்டப்பட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் 43 தெருக்கள் சைதை தொகுதியில் அடங்கும். இவற்றிற்குச் செலவிடத் திட்ட மதிப்பீடு ரூ.30,46,700 ஆகும்.

சைதை தொகுதியில் 33 தெருக்கள் தாழ்வாக இருப்பதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அருகிலுள்ள கழிவுநீர் அமைப்புடன் உடனடியாக நேரடியாக இணைக்க இயலாது. இவற்றிற்குக் கழிவு நீரகற்று வசதி அமைக்க பொருத்தமான ஒரு வடிவு அமைப்பு செய்யப்பட்டு உரிய காலத்தில் கழிவுநீர் அகற்றும் பணி எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல 33 தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்யலாம் என்று வாரியத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு, 'Feasibility and non-feasibility' என்று சொல்லி 33 தெருக்கள் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப் படாமல் இருக்கின்றன. எடுத்துக் கொள்ளப்படாத தெருக்களுக்கு ஒரு வடிவமைப்பு செய்யப்பட்டு, உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும்

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உரிய வடிவமைப்பு எவ்வளவு நாட்களுக்குள் எடுக்கப்படும்? அந்தப் பணியை விரைந்து செய்து முடித்தால், இந்தத் திட்டத்தை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாக இருக்கும். எனவே அந்த உரிய காலத்தினை, மிக விரைவாக முடிக்க அல்லது அதற்கென்று ஒரு தனிப்பொறியாளரை நியமித்து, இந்த வடிவமைப்பு சம்பந்தப்பட்ட பணிகளைத் தொடங்க மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.க.இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! அவருடைய சைதை தொகுதியில் 43 தெருக்களுக்கு ரூ.30,46,700 செலவிலே திட்டம் மதிப்பிடப்பட்டு, தற்போது வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. 33 தெருக்கள் தாழ்வாக அல்லது மற்ற காரணங்களால் நேரடியாக இணைக்க இயலாத தன்மையில் இருக்கின்றன. ஆகவே கழிவு நீரகற்று வசதி அமைக்கப் பொருத்தமான ஒரு வடிவமைப்பு செய்ய தற்போது குடிநீர் வடிகால் வாரியம் முயன்று வருகிறது. அந்தப் பணிகள் விரைவிலே மேற்கொள்ளப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், விரைவில் என்பதற்கு ஒரு கால நிர்ணயம் செய்து அறிவித்தால், அந்தப் பணி துவங்க ஏதுவாக இருக்கும். எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு கால நிர்ணயம் செய்து அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு.க.இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்தப் பணி சென்னை நகரின் சுற்றுப்புறத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பல போக்குவரத்து மத்தியிலும், மற்றவைகளுக்கு மத்தியிலும் மிகுந்த சிரமத்தோடு இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. ஆகவே கால நிர்ணயம்பற்றி உடனடியாகச் சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு இன்னும் வடிவமைப்பு அமைக்கப்படாமல் இருக்கின்றது. வடிவமைப்பு அமைந்தவுடனேயே எவ்வளவு காலம் என்பதை இந்த அவையின் முன் தெரிவிக்கப்படும்.



# வினாக்கள் – விடைகள்

## சென்னையில் கழிவுநீர் அகற்றும் வடிகால் வசதி இல்லாத பொதுத் தெருக்கள்*

(வினா எண் 5413) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகரில் கழிவு நீர் அகற்றும் வடிகால் வசதி இல்லாத பொதுத் தெருக்கள் எத்தனை?

(ஆ) கழிவு நீர் அகற்ற வசதி செய்து தர அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை :** (அ) சென்னை மாநகரில் பழைய எல்லைக்குள், என்.எஸ்.கே.நகர், மேல்பட்டடை, மாம்பலம் ஏரிக்கரை, கோட்டூர், பள்ளிப்பட்டு, ஈக்காட்டுத்தாங்கல் ஆகிய இடங்களிலும், சென்னை மாநகரத்தோடு 1979ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட 12 பஞ்சாயத்துக் களிலும் கழிவு நீர் அகற்றும் வடிகால் வசதிகள் இல்லை. (ஆ) மேல்பட்டடை, மாம்பலம், ஏரிக்கரை, கோட்டூர் ஆகிய இடங்களுக்குக் கழிவு நீர் வடிகால் வசதிக்காகப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தவிர பள்ளிப்பட்டு, வில்லிவாக்கம்,

---

★ 1987 நவம்பர் 18

திருவான்மியூர் ஆகிய பகுதிகளுக்குத் திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டன. சென்னை நகரத்தோடு 1978 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட ஏனைய பஞ்சாயத்துக்களுக்குக் கிருஷ்ணா நதித் திட்டத்தின்கீழ் கழிவு நீர்க் குழாய் வசதிகள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சென்னை அண்ணாநகர் விஸ்வேஸ்வரய்யா பூங்காவை அழகுபடுத்தும் திட்டம்*

(வினா எண். 5426) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா?

சென்னை அண்ணாநகரிலுள்ள விஸ்வேஸ்வரய்யா பூங்காவினை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை :** ஆம். சென்னை அண்ணாநகரில் உள்ள விஸ்வேஸ் வரய்யா பூங்காவைப் போக்குவரத்துக் கழகங்கள், எண்ணெய் பெட்ரோலியக் கழகங்கள், வங்கிகள் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் மேம்படுத்த வீட்டுவசதி வாரியம் திட்டமிட்டுள்ளது.

## சென்னை மாநகரின் தண்ணீர்ப் பிரச்சினை**

(வினா எண் 1571) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை மாநகரின் தண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க அரசு முன் எச்சரிக்கை நடவடிக்கையாக என்னென்ன பணிகள் நடைமுறைப்படுத்த உள்ளது?

(ஆ) சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதா?

**விடை :** விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

* 1987 நவம்பர் 18
** 1987 நவம்பர் 18



### அறிக்கை

(அ) இவ்வாண்டு இனிவரும் காலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலைமையைச் சமாளிக்க முன் எச்சரிக்கையாகக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

1) 2,000 குழாய்க் கிணறுகள் பழுதுபார்த்துச் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

2) தற்போதுள்ள இந்தியா மார்க்-2 பம்புகள் பழுது பார்க்கப்பட்டு சரி செய்யப்பட்டு வருகின்றன.

3) நீர் வராத 40 இந்தியா மார்க்-2 பம்புகள் புதிதாக வேறு இடத்தில் மறுபடியும் போடப்பட்டு வருகிறது.

4) வேண்டிய இடங்களில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு இந்தியா மார்க்-2 பம்புகள் பொருத்தப் படும்.

5) தவிர குழாய்க் கிணறுகள் வேலை செய்யாத இடங்களில் அவற்றிற்குப் பதிலாக இந்தியா மார்க்-2 பம்புகள் அமைக்கப்படும்.

6) நகரிலுள்ள பொதுக் கிணறுகள் உடனே தூர் வாரப்பட்டு மக்கள் உபயோகத்திற்குக் கொண்டு வரப்படும். இது உடனடியாகச் செய்து முடிக்கப்படும்.

7) பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவைப்பட்ட அளவுக்குக் குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு லாரிகள் மூலம் அதிக அளவு குடிநீர் வழங்கப்படும்.

8) மூன்று நிலநீர் பகுதிகளில் 6 தயார் நிலை ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

9) சென்னை நகரைச் சுற்றியுள்ள நீர்பிடிப்புப் பகுதிகளில் மழை அளவை அதிகரிக்கச் செய்யும் நோக்கத்துடன் செயற்கை மழைத் திட்டம் நிரந்தரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டும் ஜூலை முதல் நவம்பர் முடிய செயற்கை மழைத் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

ஆ) ஆம். சில இடங்களில் நிலத்தடி நீரின் மட்டம் அதிக ஆழத்தில் சென்று விட்டதால் குழாய்க் கிணறுகளால் முழு அளவில் தண்ணீரை வழங்க முடியவில்லை. இம்மாதிரி இடங்களில் 100-க்கு மேற்படாமல் புதிதாக இந்தியா மார்க்-2 பம்புகள் நிறுவப்படும்.

சென்னை நகரத்தில் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட குடிநீர்த் தட்டுப் பாட்டைச் சமாளிக்கும் பரிசோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட செயற்கை மழைத் திட்டம் நல்ல பயனீன்றதைத் தொடர்ந்து அரசு இத்திட்டத்தைத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நவம்பர் வரையிலான பருவ காலத்தில் நிரந்தரமான திட்டமாகச் செயல்படுத்தத் தீர்மானித்தது. இதற்காக திருவாளர்கள் அட்மாஸ் பெரிக்ஸ் இன்கார்ப்பரேட்டட் என்ற அமெரிக்க நிறுவனத்திடமிருந்து 3,73,000 அமெரிக்க டாலர் (ரூபாய்43,13,632.70 ) செலவில் செயற்கை மழை திட்டத்திற்காகச் சிறப்பியல்புடன் கூடிய விமானம், ராடர் கருவி ஆகியவற்றை வாங்கியுள்ளது.

மேற்கூறிய நிறுவனத்தினர் 1984 மற்றும் 1985 ஆண்டுகளில் ஜூலை முதல் நவம்பர் வரையில் இத்திட்டத்தைத் தமிழ்நாட்டில் நிறைவேற்றவும், அரசு நியமிக்கும் விமானி மற்றும் துணை விமானி ஆகிய குழு ஒன்றுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கவும் ஒப்புக் கொண்டனர். இதற்காக ஒரு விமானி (இந்திய விமானப் படையிலிருந்து அயற் பணியில் பெறப்பட்டவர்) ஒரு துணை விமானி (நேரடி நியமனம்) மற்றும் ராடார் வானிலை நிபுணர் ( இந்திய வானிலை ஆய்வுத் துறையிலிருந்து அயற்பணியில் பெறப்பட்டவர்) ஆகியோர் நியமிக்கப்பட்டு கடந்த ஆண்டில் பயிற்சி பெற்றனர்.

நடப்பு (1985) ஆண்டிலும் மேற்கூறிய நிறுவனத்தின் நிபுணர் குழு ஜூன் மாதம் கடைசி வாரம் முதல் நவம்பர் மாதம் கடைசி வாரம் வரை இத்திட்டத்தைச் செயல்படுத்துவதோடு நம் குழுவினருக்குப் பயிற்சியும் அளிப்பர்.



## சென்னையிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகம்*

(வினா எண் 1583) **திரு. சைதை சா. துரைசாமி,** திரு.செ.தங்கராசு மற்றும் திரு.இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

சென்னையில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் இருந்து எத்தனை பேர் 1977-ல் இருந்து 1984 வரை வேலை வாய்ப்பு பெற்றார்கள் தகுதி வாரியாக?

**விடை :** விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

### அறிக்கை

சென்னையிலுள்ள கீழ்க்கண்ட 5 வேலைவாய்ப்பு அலுவல கங்களின் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றவர்கள்பற்றிய விவரங்கள் 1977ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு முடிய சேகரிக்கப்பட்டு, இணைப்பில் கல்வித் தகுதி வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை -35 (எஸ்.எஸ்.எல்.சி. முதல் பட்டப்படிப்புத் தேறியவர்களுக்காக).
2. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை -17 (பட்ட மேற்படிப்பு, பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தொழில் பட்டப் படிப்பு படித்தவர்களுக்காக).
3. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பம்), சென்னை -35 (டிப்ளமோ மற்றும் தொழில் அனுபவம்/ சான்றிதழ் பெற்றவர்களுக்காக).
4. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை -20 (எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்களுக்கும், அதற்குக் கீழ் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்காக).

* 1987 நவம்பர் 18

5. உடல் ஊனமுற்றோர்க்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகம், சென்னை -35 (உடல் ஊனமுற்றோருக்காக).

**வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை தகுதிவாரியாக...**

| கல்வித் தகுதி | 1977 | 1978 | 1979 | 1980 |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்கள் அதற்கும் குறைந்த கல்வித் தகுதியுடையவர்கள் | 2,278 | 1,828 | 1,444 | 1,643 |
| எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள் (தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆரம்பக் கல்வி, நடுநிலை பயின்ற ஆசிரியர்கள் போன்றோர்) | 1,105 | 1,218 | 1,099 | 1,325 |
| பி.யூ.சி. மற்றும் பட்டப் படிப்பு தவறியவர்கள் | 431 | 218 | 387 | 444 |
| பட்டப்படிப்பு தேறியவர்கள் | 620 | 444 | 1,097 | 427 |
| மருத்துவப் பட்டதாரிகள் | 165 | 89 | 57 | 232 |
| பொறியியல் பட்டதாரிகள் | 125 | 468 | 1,333 | 310 |
| வேளாண்மைப் பட்டதாரிகள் | 47 | 27 | 450 | 73 |
| கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் | 141 | 94 | 49 | 41 |



| | | | | |
|---|---|---|---|---|
| சட்டக்கல்வி பயின்ற பட்டதாரிகள் | 3 | 7 | 2 | 4 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 6 | 90 | 58 | 573 |
| பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகள் | 463 | 350 | 1,705 | 507 |
| தொழிற்கல்வி மற்றும் அனுபவம் பெற்றவர்கள் (டிப்ளமோ மற்றும் சர்டிபிகேட் பெற்றவர்கள்) | 1,054 | 1,054 | 1,754 | 1,809 |
| அனைத்து உடல் ஊனமுற்றோர் | 206 | 263 | 350 | 624 |
| **மொத்தம்** | **6,644** | **6,150** | **9,785** | **8,012** |

| *கல்வித் தகுதி* | *1981* | *1982* | *1983* | *1984* |
|---|---|---|---|---|
| *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* |
| எஸ்.எஸ்.எல்.சி. தவறியவர்கள்/ அதற்கும் குறைந்த கல்வித் தகுதி உடையவர்கள். | 1,714 | 1,986 | 4,079 | 2,531 |
| எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்கள்(தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆரம்பக் கல்வி, நடுநிலை பயின்ற ஆசிரியர்கள் போன்றோர்) | 2,530 | 2,336 | 4,382 | 3,151 |
| பி.யூ.சி மற்றும் பட்டப் படிப்பு தவறியவர்கள் | 348 | 903 | 2,364 | 1,914 |
| பட்டப்படிப்பு தேறியவர்கள் | 510 | 1,027 | 563 | 458 |
| மருத்துவப் பட்டதாரிகள் | 180 | 257 | 36 | 52 |

| | | | | |
|---|---|---|---|---|
| பொறியியல் பட்டதாரிகள் | 231 | 215 | 1,096 | 1,034 |
| வேளாண்மைப் பட்டதாரிகள் | 106 | 87 | 80 | 88 |
| கால்நடை மருத்துவப் பட்டதாரிகள் | 113 | 152 | 176 | 120 |
| சட்டக் கல்வி பயின்ற பட்டதாரிகள் | 11 | 4 | 5 | 3 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 870 | 626 | 999 | 533 |
| பட்ட மேற்படிப்புப் பட்டதாரிகள் | 1,002 | 1,340 | 638 | 677 |
| தொழிற்கல்வி மற்றும் அனுபவம் பெற்றவர்கள் (டிப்ளமோ மற்றும் சர்டிபிகேட் பெற்றவர்கள்) | 1,640 | 2,513 | 2,616 | 1,126 |
| அனைத்து உடல் ஊனமுற்றோர் | 1,114 | 901 | 748 | 654 |
| **மொத்தம்** | 10,369 | 12,347 | 18,082 | 12,341 |

## சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான இடம்*

(வினா எண். 3725) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான இடத்தை நரிக்குறவர் பள்ளிக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை :** சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தில், நரிக்குறவர் பள்ளியின் ஆதிக்கத்திலுள்ள ஒரு பகுதி

* 1987 நவம்பர் 18



நிலத்தை அப்பள்ளிக்கு நிலக்கிரயமின்றி வழங்குவது சம்பந்தமான கருத்துரு சென்னை மாவட்ட ஆட்சியர் பரிசீலனையில் உள்ளது.

## விவேகானந்தர் நினைவிடத்திற்குப் படகுப் பயணம்*

(வினா எண். 12144) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கு மக்கள் போய்வரக் கூடுதலாகப் படகு வசதி செய்துதர பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

**விடை :** 120 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்ட இரண்டு படகுகள் தற்பொழுது உள்ளன. இவை போதுமானதென்று கருதப்படுகிறது. எனினும், இவைகளில் ஒன்றிற்கு மாற்றுப் படகு தருவதுபற்றிய கருத்துரு மத்திய அரசின் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் உள்ளது.

* 1987 நவம்பர் 18



# கவன ஈர்ப்பு

**சென்னை பைராகி மடம், வெங்கடேசப் பெருமாள் கோயில் நிலத்தைத் தனியாருக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுத்துள்ளது குறித்து...***

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! ''சென்னை என்.எஸ்.சி.போஸ் சாலையில் உள்ள அருள்மிகு பைராகி மடம், வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான 107 எண்ணுள்ள ஒரு கிரவுண்ட் காலியிடத்தைத் தனியார் ஒருவருக்குக் குறைந்த விலையில் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால் அறநிலையத் துறைக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு குறித்த ''அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை'' மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு.வி.வி.சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

---

* 1987 நவம்பர் 18





## அறிக்கை

சென்னை ஜெனரல் முத்தைய முதலி தெருவில் அமைந்துள்ள பைராகி மடம் அருள்மிகு திருவேங்கடமுடையான் திருக்கோயிலுக்கு என்.எஸ்.சி. போஸ் ரோட், நெ-113இல் உள்ள 4800 சதுர அடி கொண்ட காலி மனை சொந்தமானது. இந்தத் திருக்கோயிலுக்குப் பரம்பரை அறங்காவலரான மகந்த் (மடாதிபதி) தாமோதரதாஸ், 1981-ல் திரு.நரேந்திர கோத்தாரி என்பவருக்கு மேற்படி காலி மனையினை மாதம் ரூ.1,000 வாடகைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு, தன் சொந்த செலவில் கட்டிடம் கட்டிக் கொள்ளக் குத்தகை ஒப்பந்தம் செய்து கொண்டார்.

இந்த ஒப்பந்தம் இந்துசமய அறநிலையங்கள் நிர்வாகச் சட்டம் பிரிவு 34-ன் கீழ் ஆணையரது முன் அனுமதி பெறாததால், இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து ஆலய மேலாளர் 1981-ல் சிவில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில், ஆலயத்திற்குச் சாதகமாகவும் மேற்படி குத்தகைதாரர் திரு.நரேந்திர கோத்தாரிக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதனை எதிர்த்து மகந்த் மற்றும் குத்தகைதாரர் ஏ.என்.எண்.495/84 மற்றும் 496/84-ல் மேல்முறையீடு செய்தனர். எப்போது, மேற்படி திருக்கோயிலின் நிர்வாகத் திட்டத்தின்படி இத்திருக்கோயிலுக்கு மேலாளர் ஒருவரை மட்டுமே நியமிக்க முடியுமென்றும், செயல் அலுவலர் ஒருவரை ஆணையர் நியமித்தது செல்லத்தக்கதல்லவென்று அறிவிக்கக் கோரியும் மகந்தால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனு எண் 5365/83, மகந்தின் சார்பில் முடிவடைந்து, செயல் அலுவலர் நியமனம் செல்லத்தக்கதல்லவென்று தீர்ப்பாகியது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, மேலே கண்ட மேல் முறையீடுகளில் திருக்கோயில் சார்பில் வழக்கு நடத்த செயல் அலுவலருக்கு அருகதையில்லை என்று கூறி மகந்த் தாமோதரதாஸ் இத்திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் ஏ.எஸ். எண். 495/84 மற்றும் ஏ.எஸ்.எண். 496/86 ஆகியவற்றைக்

குத்தகைதாரர் கோரியபடி அனுமதிக்கலாம் என எழுதிக் கொடுத்து விட்டார். ஆகவே மேற்படி மேல்முறையீடுகள் திருக்கோயிலுக்கு எதிராக அனுமதிக்கப்பட்டன.

இதற்கிடையில், மேற்படி குத்தகைதாரர் திரு. என்.கே. கோத்தாரி சட்டப்பிரிவு 23-ன் கீழ் ஆணையர் முன் ஒரு மனுதாக்கல் செய்தார். அதில் திருக்கோயிலின் நிதி இப்பொருளின் பல வழக்குகள் மூலம் தொடர்ந்து செலவழிக்கப்படுவதைத் தவிர்த்து மேற்படி 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1ஆம் நாளில் மகந்த் எழுதிக் கொடுத்தபடி இந்த மனையைக் குத்தகைக்கு அளிக்கவும், தொடர்ந்து தான் கட்டிடம் கட்டவும், மாதம் ரூ. 1,000 வாடகையாக வழக்கு முடியும்வரை செலுத்துவதாகவும், வழக்கு முடிவிற்குக் குந்தகமன்னியில் குத்தகைக் காலம் முடிந்தபின், இக்கட்டிட உரிமையைத் திருக்கோயிலுக்கோ அல்லது மடத்திற்கோ சேரும்வகையில் விட்டு விடுவதாகவும், எனவே மேற்கண்ட நிபந்தனைகள்படி உத்திரவு வழங்கக் கேட்டுக் கொண்டார்.

தனிப்பட்ட முறையில் தான் பைராகி மடத்தினையோ, திருக் கோயிலையோ வெவ்வேறு அறநிலையமாகக் கருதவில்லை என்றும், பைராகி மடத்தில் அதன் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், சாதுக்களுக்கு உணவும் உறைவிடமும் அளித்து அங்கேயுள்ள இராம் இலட்சுமணர் சீதாதேவி கோயிலுக்குப் பூஜைகள் செய்யப் போதுமான நிதி வசதி அளித்தாலே போதும் என்று கூறி, இத்தகைய மனு ஒன்றையும் மகந்த் சென்னை துணை ஆணையரிடம் கொடுத்தார்.

மடத்திற்குச் சொந்தமானது என்று இதுவரை மகந்த் வழக்காடி வந்த சொத்தினை, திருக்கோயில் வசம் ஒப்படைப்பதாகவும், இந்தச் சொத்தில் திருக்கோயிலில் கட்டப்படவுள்ள கட்டிடத்தினை திரு. நரேந்திர கோத்தாரி உபயதாரர் வேலையாகச் செய்து தருவதென்றும், முடிவு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் திருக்கோயிலின் நலனை உத்தேசித்து திரு. கோத்தாரி மூலம் மேற்படி இடத்தில் உபயதாரர் வேலையாகக் கட்டிடம் கட்ட சில நிபந்தனை களுக்குட்பட்டு அனுமதிக்கலாம் என சென்னை துணை ஆணையரால் ஆணையருக்குப் பரிந்துரைக்கப்பட்டது.



அருள்மிகு பைராகிமடம் மகந்த் செயல் அலுவலர் நியமனத்தின் மீது செய்து கொண்ட ஏ.எஸ். 495/84 வழக்கில், திருக்கோயிலின் கோத்தாரி நியமனம் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், திரு. கோத்தாரி செய்து கொண்ட மேல்முறையீட்டை அனுமதிக்கச் சம்மதம் அளித்து திரு. நரேந்திர கோத்தாரிக்குச் சாதகமாக வழக்கு முடிவுற்றது. இதன்மீது மறுபரிசீலனைக்கு மனு சமர்ப்பிக்கப்படின் காலதாமதம், வீண் விரயம் ஏற்படக் கூடிய நிலையில் மகந்த் திரு. தாமோதரதாஸ் அவர்களே சொத்தின் உரிமையைத் திருக்கோயிலின் சார்பில் விட்டுக் கொடுத்து, தன் வருவாயில் மூன்றில் ஒரு பகுதி உரிமைப்படி பங்கு பெறச் சம்மதித்தார்.

இதனால் திருக்கோயில் எந்த உரிமைக்காக வழக்குத் தொடர்ந்துள்ளதோ, அந்த உரிமையை வழக்குத் தொடராமல் பெறக்கூடிய சாதக நிலை ஏற்படுகிறது எனவும், இது திருக்கோயில் நலன்களுக்கும், உரிமைகளுக்கும் உகந்தது எனவும், தற்போது இந்த உரிமை குறித்து ஏதும் வழக்கு நிலுவையில் இல்லையெனவும் ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கெனவே துணை ஆணையர் 1987ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ஆம் தேதியில் சில நிபந்தனைகளுக்குட்பட்டு திரு. நரேந்திர கோத்தாரி அருள்மிகு பைராகி மடம் வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான கதவு எண். 113, பழைய எண் 167-ல் உள்ள 1,800 சதுர அடி பரப்பில் தொடர்ந்து கட்டிடம் கட்டிக் கொள்ள சட்டப் பிரிவு 23-ன் கீழ் பரிந்துரைத்தும், மேற்படியாருக்கு 15 ஆண்டுகட்குக் குத்தகைக்கு விடவும் பரிந்துரைத்துள்ளதையும், தீவிரமாகப் பரிசீலித்து, திருக்கோயில் நலன்களைக் கருதியும்,

மேற்கொண்டு வழக்குகள் தொடர்வதால் ஏற்படும் நிதி இழப்பு மற்றும் இதனால் இடம் காலியாக வைக்கப்பட்டு அதனால் ஏற்படும் இழப்புகளையும் கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்படி சொத்தினைத் திரு. நரேந்திர கோத்தாரிக்கு 15 (பதினைந்து ஆண்டுகள் மட்டும்) ஆண்டுகட்கு நீண்ட காலக் குத்தகைக்கு விட, சட்டப் பிரிவு 34-ன் கீழ் உரிய நமுனாவுடன் விண்ணப்பம் செய்யத் திருக்கோயிலின் மேலாளர் நடவடிக்கை எடுக்க

1987ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் நாளில் ஆணையரால் உத்திரவிடப்பட்டது.

1. பைராகி மடத்தின் மகந்த்திடமிருந்து, என்.எஸ்.சி. போஸ் ரோடு, கதவு எண். 113-ல் உள்ள 1,800 (ஆயிரத்து எண்ணூறு சதுர அடி மட்டும்) சதுர அடி பரப்பளவுள்ள மனையைத் திருக்கோயிலிடம் ஒப்படைப்பதற்குப் பத்திரம் எழுதிப் பெற வேண்டும்.

2. திருக்கோயிலுக்குச் சொந்தமான மேற்படி மனையான மதிப்பீடு மற்றும் வரைபடம் ஆகியவற்றையும் இதர இடங்களையும் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் திருக்கோயில் பெயரிலேயே பெற்றுத் திருக்கோயிலின் தேவைக்கேற்பவும் அதன் விதிப் படியும் கட்டிடம் கட்டிக் கொள்ளலாம்.

3. மேலே சொன்னபடி கட்டப்படுகிற கட்டிடத்தை, திருக்கோயில் திரு. நரேந்திர கோத்தாரியின் உபயத்தின் மூலம் உபயோக வேலையாகக் கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

4. திரு. நரேந்திர கோத்தாரியின் உபயமாகக் கட்டப்படுகிற இந்தக் கட்டிடத்தை ஆணையர் உத்திரவு தேதியிலிருந்து மூன்று மாதங்கட்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும்.

5. ஆணையர் உத்தரவு தேதியிலிருந்து திரு. நரேந்திர கோத்தாரி திருக்கோயிலின் கட்டிட வாடகைதாரராகவே கருதப்படுவார்.

6. ஆணையர் உத்திரவு தேதியிலிருந்து முதல் 9 மாதங்களுக்கு மாதம் ரூ. 1,500-யை (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) திரு. நரேந்திர கோத்தாரி செலுத்த வேண்டும். பத்தாவது மாதம் முதல் தொடர்ந்து 5 ஆண்டுகட்கு மாதம் ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) மாத வாடகையாகவும், அடுத்து 5 ஆண்டுக்கு மாதம் ரூ. 4,000 (ரூபாய் நாலாயிரம் மட்டும்) மாத வாடகையாகவும், கடைசி 5 ஆண்டுகட்கு மாதம் ரூ. 5,500 (ரூபாய் ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்) மாத வாடகையாகத் திரு. நரேந்திர கோத்தாரி செலுத்த வேண்டும்.



7. குத்தகைக் காலம் முடிந்ததும், திரு. நரேந்திர கோத்தாரி மேற்படி கட்டிடத்தைக் காலி செய்து திருக்கோயிலிடம் ஒப்படைக்க வேண்டும்.

8. கட்டிடத்தின் மேல் மாடியில் திரு. மகந்த்தின் சொந்த உபயோகத்திற்கு 10'x10' பரப்புள்ள ஓர் அறையும், சாதுக்கள் தங்குவதற்கு 200 சதுர அடி பரப்பில் ஒரு கூடமும் தேவையான வசதிகளுடன் திரு. நரேந்திர கோத்தாரி அமைத்துக் கொடுக்க வேண்டும்.

9. கட்டிடத்தின் நகராட்சி வரியைத் திருக்கோயிலே கட்ட வேண்டும். தண்ணீர்க் கட்டணம், மின் கட்டணம் போன்றவற்றை வாடகைக்கு இருப்பவரான திரு. நரேந்திர கோத்தாரியே செலுத்த வேண்டும்.

10. இந்தச் சொத்தின்மீது நடைபெற்று வரும் வழக்குகளில், தன்னால் கோரப்படும் உரிமைகளைத் திரு. மகந்த் விட்டுக் கொடுத்து, சொத்தையும் திருக்கோயில் வசம் ஒப்படைப்பதாக ஒ.பி. 413/1956-ல் கூறப்பட்டுள்ளபடி, இந்தச் சொத்திலிருந்து வரும் வருமானத்தில், மூன்றில் ஒரு பங்கை, திரு. மகந்த் பெறுவதற்கு உரிமை உடையவராகிறார்.

மேலே கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, திரு. நரேந்திர கோத்தாரியின் ஒப்புதல் பெற்று, பரம்பரை அறங்காவலர் தீர்மானத் துடன், சட்டப்பிரிவு 34-ன் கீழ் ஆணையரின் உரிய அனுமதிக்கு மேலாளர் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வுத்திரவுமீது, மேற்படி நிபந்தனைகளை உள்ளடக்கி, மகந்த் தீர்மானத் துடன் இந்த மனையைத் திரு. நரேந்திர கோத்தாரிக்கு 15 ஆண்டுகளுக்கு நீண்ட காலம் குத்தகைக்கு விட, மேற்படி திருக்கோயில் மேலாளர் சட்டப்பிரிவு 34-ன் கீழ் மனு சமர்ப்பித்துள்ளார்.

சென்னை, துணை ஆணையரும் 1987ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் நாளில் குறிப்பு மூலம், சட்டப்பிரிவு 34-ன் கீழ் உத்திரவைப் பிறப்பிக்கவும், அது பிறப்பிக்கப்படும்வரை, திரு. நரேந்திர கோத்தாரியினை, இந்த இடத்தில் கட்டிடம் கட்ட அனுமதிக்கக் கூடாது எனவும், ஆலய மேலாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

மேற்கண்ட அறநிலைய மேலாளரின் பரிந்துரையின்மீது, சட்டப்பிரிவு 34-ன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு, கருத்துரைகள் மற்றும் மறுப்புரைகள் கோரி அறிவிப்பு ஒரு நாளிதழிலும் மற்றும் விதிகளின் கீழ் பிரசுரம் செய்யவும் வெளியிடப்பட்டுள்ளது. இதன்மீது விசாரணை 1987ஆம் ஆண்டு சூலை மாதம் 6ஆம் நாள் அன்று ஆணையர் முன் நடைபெற்றுள்ளது. மேலும் இந்தப் பரிவர்த்தனைக்கு ஆட்சேபணை தெரிவித்து திரு. கருணாகரன் என்பவர் ஒரு மனு சமர்ப்பித்துள்ளார். சட்டப் பிரிவு 34-ன் கீழ் அனுமதி வழங்குவது ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

மேற்படி இடத்தில் திரு. நரேந்திர கோத்தாரி தொடர்ந்து கட்டிடம் கட்டுவதாக ஆணையர் கவனத்திற்குக் கொணரப்பட்டது. துணை ஆணையர் தனது 1987ஆம் ஆண்டு சூலை மாதம் 29ஆம் நாள் அறிக்கையில்தான் மேற்படி இடத்தினை 1987ஆம் ஆண்டு சூலை மாதம் 24ஆம் நாள் அன்று பார்வையிட்டதாகவும், அப்போது நிலத்தில் கட்டிடம் கட்டி வருவது தெரிய வந்ததெனவும், 14 கடைகள் வருகிற வகையில் தடுப்புச் சுவர்களை வைத்து, வண்ணமடிக்கும் வேலை நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதன் மீது திரு. நரேந்திர கோத்தாரிமீது 16-வது சிட்டி சிவில் கோர்ட்டில் துணை ஆணையாளர் வழக்கு தொடர்ந்து ஓ.எஸ். எண். 6324/87-ல் ஐ.ஏ. எண். 14148/87-ல் கட்டடப் பணிகள் எதுவும் செய்யக் கூடாதென 2007ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ஆம் நாள் முடிய தடை உத்தரவு பெற்றுள்ளார்.

வழக்கு நிலுவையில் உள்ளது. 1937ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் நாள் மேற்படி கட்டடத்திற்கு மெட்ரோ வாட்டர் நிறுவனத்திலிருந்து தண்ணீர் இணைப்பு பெறவும், மின்சாரத் துறையிலிருந்து மின் இணைப்புப் பெறவும் மனு செய்துள்ளதாகத் தெரிய வந்தது. இக்கட்டட வேலை ஆணையரின் அனுமதி பெறாத திருக்கோயில் நலன்களுக்குக் குந்தகமான முறையில் வேலை என்பதால் மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு அளிக்க வேண்டாமென மெட்ரோ வாட்டர் மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்



தலைவர்களுக்கு 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ஆம் நாளில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! விவர அறிக்கையை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே பல சந்தேகங்களைக் கேள்விகளாக நான் கேட்க வேண்டும். கேள்வியாகக் கேட்டால் பதில் தருவதற்குக் காலதாமதமாகும் என்பதால், முழுமையாக எனது அறிக்கையை, எனது புகார் மனுவைத் தருகிறேன். அது குறித்து மாண்புமிகு அமைச்சரவர்கள் விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுக்கிற இந்த அறிக்கையின்மீது உரிய நடவடிக்கை குறுகிய காலத்தில் எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! நான் அந்தப் புகாரினை நாளையே தர இருக்கிறேன். ஆகவே அந்தப் புகாரின் மீது எத்தனை நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி.வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! இந்த மாத இறுதிக்குள் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.